
# உதயன்

www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 28 கதிர் 022 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 03 செவ்வாய்க்கிழமை (18/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# நிரந்தர படைமுகாம்களுக்கு வவுனியாவில் காணி ஒதுக்கீடு

## பொலிஸ் நிலையத்துக்கும் இடம்

வவுனியா, டிசெம்பர்18

கனகராயன்குளம், புளியங்குளம் பகுதிகளில் இராணுவத்துக்கும், பொலிஸாருக்கும் நிரந்தர முகாம் அமைக்க வவுனியா மாவட்ட காணி வழங்கல் அபிவிருத்திக் குழு காணி வழங்குவதற்கு அனுமதியளித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

புளியங்குளத்தில் பொலிஸாருக்கு 5 ஏக்கர் காணியும்27ஆவது படைப் பிரிவுக்கு 5 ஏக்கர் காணியும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கனகராயன்குளத்தில் பொலிஸ் நிலையத்துக்கு 2 ஏக்கர் காணியும் 56ஆவது படைப் பிரிவுக்கு 7 ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரம் புளியங்குளத்தில் அரை ஏக்கர் காணி சுகாதார திணைக்களத்துக்கும் கற்குளம் சந்தியில் அரை ஏக்கர் காணி ஆரம்ப சுகாதார நிலையத்துக்கும், நயினாமடுப் பகுதியில் ஒரு ஏக்கர் காணி மிருக வைத்திய நிலையத்துக்கும், புளியங்குளம் ஏ-9 வீதியில் 11 ஏக்கர் காணி பாடசாலை அமைப்பதற்கும், நயினாமடுவில் 5 ஏக்கர் காணி ஆயுள்வேத வைத்தியசாலைக்கும், முத்துமாரி நகர்பகுதியில் ஒன்றரை ஏக்கர் காணி கலாசார நிலையத்துக்கும்,

பார்க்க பக்கம் 4

# மாணவர் கைது விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுங்கள்

## ஜனாதிபதியிடம் மனோ கோரிக்கை

கொழும்பு, டிசெ.18

புலிகளின் போராட்டத்துக்கும், ஜே.வி.பியின் போராட்டத்துக்கும் முடிச்சுப் போடுவது தவறானது. இவை இரண்டும் வேறு வேறு தன்மை கொண்டவை.

புலிகள் நாட்டைப் பிரிக்கப் போராடினார்கள். ஆனால் ஜே.வி.பியினர் அப்படிப் போராடவில்லை. அத்தோடு ஜே.வி.பிக்கு இப்போது தடைகள் எதுவும் இல்லை. ஆனால் இன்னமும் புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்புத்தான். எனவே புலிகளை நினைவு கூருவதை அரசு அனுமதிக்காது. இந்த இரு போராட்டங்களுக்குமான வேறுபாட்டை மாணவர்களுக்கு எடுத்துரையுங்கள். - இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மனோகணேசனுக்கு நேற்று பிறந்ததினம். இதனையொட்டி தொலைபேசி ஊடாக மனோகணேசனை வாழ்த்தினார் ஜனாதிபதி. அப்போது, '' இறந்தவர்களை நினைவு கூர்ந்தார்கள் என்

பார்க்க பக்கம் 4

# உயர் நீதிமன்றத்தில் நேற்று 30 வழக்குகள் ஒத்திவைப்பு

## நீதியரசர் விவகாரம் பின்னணியா?

கொழும்பு, டிசெ.18

கொழும்பு, புதுக்கடை, உயர் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெறவிருந்த 30 வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இந்த வழக்குகளை விசாரணை செய்யும் நீதியரசர்கள் மூவரில் இருவர் வருகை தராததால் வழக்கு மீதான விசாரணைகள் பிற்போடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

502ஆம் நீதிமன்ற அறையில் விசாரிக்கப்படவிருந்த 30 வழக்குகளே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டன என நீதியரசர் ஷிராணி திலகரத்ன அறிவித்துள்ளார்.

502ஆவது அறையில் முன்னெடுக்கப்படும் வழக்குகளை விசாரிக்கும் நீதியரசர்கள் குழுவில் அங்கம் வகிக்கின்ற சந்திரா ஏக்கநாயக்க மற்றும் எஸ்.ஐ. இமாம் ஆகிய நீதியரசர்கள் நேற்று நீதிமன்றத்துக்கு முன் அறிவித்தல் ஏதுமின்றி சமுகமளிக்காததை அடுத்து இந்த வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பிரதம நீதியரசர் ஷிராணி

பார்க்க பக்கம் 4

# இலங்கையுடன் இராணுவ உறவை பலப்படுத்தும் ஆஸிக்கு கண்டனம்

## விவேகமற்ற செயல் என்கிறது கிறீன் கட்சி

கொழும்பு, டிசெ.18

இலங்கை அரசு நேரடியாகத் தொடர்புபட்டதாகக் கூறப்படும் மனித உரிமைமீறல்கள் சம்பந்தமான முறையீடுகள் அதிகளவில் குவியும் இந்தத்தருணத்தில் அந்த நாட்டுடன் ஆஸ்திரேலியா இராணுவ புலனாய்வுத்துறை ஒத்துழைப்பை பலப்படுத்த எடுத்துள்ள முடிவு விவேகமான செயற்பாடல்ல என ஆஸ்திரேலிய கிரீன்ஸ் கட்சி சாடி

பார்க்க பக்கம் 4



# அரியாலை விபத்தில் நேற்றிரவு ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.18

அரியாலையில் ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

அரியாலையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான எஸ்.திலக்ஷன் (வயது-32)

பார்க்க பக்கம் 4

# பல்கலைக்கழக செயற்பாடுகளை வழமைக்கு கொண்டுவர முயற்சி

## படைத் தளபதியுடன் சந்திப்புக்கு ஏற்பாடு; எதிர்ப்பும் கிளம்பியது

கொழும்பு, டிசெ. 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இது தொடர்பான முயற்சிகள் குறித்து விசனங்களும் எழுப்பப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மீண்டும் வழமைக்குக் கொண்டு வருவது தொடர்பில் இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியுடன் பேச்சு நடத்த பலாலிக்கு வருமாறு துறைத் தலைவர்களுக்குப் பதிவாளரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் இது தொடர்பிலான அறிவித்தல் துணைவேந்தரின் பணிப்பின் பேரில் பதிவாளரால் வழங்கப்பட்டுள்ளது என்று 'உதயன்' பத்திரிகைக்கு அறியவந்தது. ஆனால், இராணுவத் தளபதியுடன் துறைத் தலைவர்கள் பேச்சு நடத்த வேண்டும் என்ற பல்கலைக்கழக நிர்வாகத்தின் எதிர்பார்ப்புக்கு உடனடியாகவே எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

பார்க்க பக்கம் 4

# கோட்டையில் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ.18

யாழ். பல்கலையில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யவும், வடக்கு, கிழக்கில் இடம்பெற்று வருகின்ற இராணுவ ஆட்சியை உடனடி

பார்க்க பக்கம் 4

# தெரிவுக்குழு அறிக்கை ஷிராணியிடம் கையளிப்பு

கொழும்பு, டிசெ.18

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தினால் பிரதம நீதியரசர் தரப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இறுதி அறிக்கையின் பிரதிகள் தமக்கு வழங்கப்படவேண்டுமென பிரதம நீதியரசரின் சட்ட விவகாரங்களைக் கையாளும் நிறுவனமான நீலகண்டன் அன்ட் நீலகண்டன் விடுத்த கோரிக்கையினையடுத்தே இறுதி அறிக்கையின் பிரதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதேபோல் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இந்த இறுதி அறிக்கை தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த

பார்க்க பக்கம் 4

# யாழ்ப்பாணத்தில் தனிநபர் வாழ்க்கை செலவு அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 18

யாழ்ப்பாணத்தில் தனிநபர் ஒருவரின் குறைந்தபட்ச மாதாந்த வாழ்க்கைச் செலவினமானது அதேவிதமாகக் கொழும்பில் வாழும் தனிநபர் செலவினத்தைவிட அதிகமாகும். கடந்த ஆறுவருடகாலமாக இந்த நிலைமை காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தனிநபர் வாழ்க்கைச் செலவுப் புள்ளியானது 3.811 ஆகக் காணப்படும் அதேவேளை கொழும்பில் செலவுப் புள்ளி 3.797 ஆகக் காணப்படுகின்றது. அதே வாழ்க்கைச் செலவுப் புள்ளி

பார்க்க பக்கம் 4

# பந்து போன்ற பொருளை கௌவிய நாய் சிதறிச் சாவு

## தெய்வாதீனமாகத் தப்பினர் சிறுவர்கள்

தென்மராட்சி, டிசெ.18

பற்றை மறைவில் காணப்பட்ட பந்து போன்ற பொருள் ஒன்றைக் கௌவிய நாய் அது வெடித்ததில் தலை சிதறி உயிரிழந்தது.

எனினும் நாய்க்குப் பக்கத்தில் நின்றிருந்த சிறுவர்கள் இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்கள்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் உள்ள விநாயகமூர்த்தி ரஞ்சன் என்பவரின் வீட்டில் இடம்பெற்றது.

பற்றை மறைவில் காணப்பட்ட பந்து போன்ற பொருளை வீட்டில் நின்ற வளர்ப்பு நாய் கௌவ்வி வந்துள்ளது. அந் [illegible]

பார்க்க பக்கம் 4

# மர்மப் பொருள் வெடித்ததில் விவசாயி காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 18

மர்மப்பொருள் வெடித்ததில் விவசாயி ஒருவர் முகத்தில் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை யோகராசா (வயது - 48) என்பவரே காயமடைந்தார்.

[illegible]ரையில் வீதி

பார்க்க பக்கம் 4

# கடத்தப்பட்ட இளைஞர் சி.ஐ.டியால் கைதானார்

யாழ்ப்பாணம், டிசெ.18

இணுவில்சந்திப் பகுதியில் ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த இளைஞன் ஒருவர் கடந்த 13 ஆம் திகதி கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டபோதும் குற்றத்தடுப்புப் பிரிவினரால் (சி.ஐ.டி.) அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை தனது தாயாருடனும் சகோதரியுடனும் ஓட்டோவில் குறித்த இளைஞன் பயணம் செய்து கொண்டிருந்தார். அந்த வேளையில் இணுவில் சந்திப் பகுதியில் வைத்து வான் ஒன்றில் வந்தவர்கள் ஓட்டோவை இடைமறித்து இளைஞனை கடத்திச் சென்றதாக அவரது சகோதரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்திருந்த நிலையில், மேற்படி இளைஞர் குற்றப்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசை நம்ப மறுக்கிறது சர்வதேசம்

## ஹாரிசன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.18

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரில், இதுவரை எந்த நாட்டிலும் பயன்படுத்தப்படாத கொடூரமான இரசாயன ஆயுதங்களை இலங்கை இராணுவம் பயன்படுத்தியுள்ளது. ஆனால், இலங்கை அரசு இறுதிப்போர் குறித்த எந்தப் புள்ளிவிவரங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இதனால், குறைந்தபட்ச உண்மைகளைக்கூட ஏற்க மறுப்பதால் இலங்கையின் வாக்குறுதியை சர்வதேச சமூகம் நம்ப மறுக்கிறது.

- என்று பி.பி.சியின் முன்னாள் செய்தியாளர் பிரான்செஸ் ஹாரிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்த நான்காம் கட்டபோர் குறித்து 'Still Counting the Dead' என்ற தலைப்பில் அவர் எழுதிய ஆங்கில நூலின் தமிழ் மொழியாக்கம், 'ஈழம்: சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்' என்ற தலைப்பில் சென்னையில் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் நூலாசிரியர் பிரான்செஸ் ஹாரிசன் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் போர் முடிந்து நான்கு ஆண்டுகளாகின்றன. ஆனால், போரில் இறந்தவர்கள் எத்தனை பேர், படுகாயம் அடைந்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு, காணாமல் போனவர்கள் கதி என்ன என்பன போன்ற விவரங்கள் வெளியாகவே இல்லை.

போர் இறப்பு குறித்து, ஐ.நா. வெளியிட்ட முதல் தகவலில், 40 ஆயிரம் பேர் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், கடந்தவாரம் வெளியான ஐ.நாவின் இன்னொரு அறிக்கையில், 70 ஆயிரம் பேர் பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் புள்ளிவிவரங்களின்படி 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரை ஒரு லட்சம் பேர் வன்னியில் காணாமல் போயுள்ளனர். இதுவரை இவர்களுக்கு என்னவாயிற்று என்றும் தெரியவில்லை.

இந்த உயிரிழப்புக்களும், மனித பாதிப்புக்களும் 35 சதுர கி.மீ பரப்பளவில் 130 நாள்களில் நடந்துள்ளன.

பாதுகாப்பு வலயத்தில் வைத்து ஆட்லறிகள், மோட்டார்கள், ரொக்கட் லோஞ்சர்கள், கிபிர் விமானங்களைப் பயன்படுத்தியே இலங்கைப் படையினரால் இவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இதுவரை எந்த நாட்டிலும் பயன்படுத்தப்படாத, கொடூரமான இரசாயன ஆயுதங்களை அவர்கள் போரில் பயன்படுத்தியுள்ளனர்.

இலங்கை அரசு, எந்தப் புள்ளிவிவரங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவோம் என்று கூறும் இலங்கை அரசு, குறைந்தபட்ச உண்மைகளைக் கூட ஏற்க மறுப்பதால், புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவோம் என்ற வாக்குறுதியை அனைத்துலக சமூகம் நம்ப மறுக்கிறது.

போரில் பாதிக்கப்பட்ட பலரை நான் சந்தித்தேன். சிலரது விவரங்களையும், செவ்விகளையும் மட்டுமே, நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

தற்கொலைக்கும் அஞ்சாதவர்கள் விடுதலைப் புலிகள். ஆனால், அவர்களே, போரில் நடந்த கொலைகளைப் பார்த்து நிலை குலைந்து போய் உள்ளனர்.

போரின் விளைவுகளை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு புனரமைப்புப் பணிகளைச் செய்ய இலங்கை அரசு முன்வந்தால்தான் அமைதியான சமூகத்தை அந்த நாட்டில் கட்டியெழுப்ப முடியும் - என்றார்.

வன்னியில் காயத்துக்கு மருந்திடத் தாமதித்ததால் உயிரிழந்த ஒரு மதகுருவின் நிலை, தனது குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த ஒரு தாயாரின் மரணத்தின் இறுதி நிமிடஙீகள் என்பவற்றையும் இந்த நிகழ்வில் பிரான்செஸ் ஹாரிசன் விவரித்திருந்தார். (ங-சி)

## இளைஞர்கள் உருவாக்கத்தில் 'பூமி அழியாது'

யாழ்ப்பாணம், டிசெ.18

உலகம் அழியாது என்று என்னதான் 'நாஸா' காட்டுக் கத்துக் கத்தினாலும் எதிர்வரும் 21ஆம் திகதியுடன் உலகம் அழியும் என பரவி வரும் தகவல்கள் பற்றிய வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் ''மார்கழி மாதம் மானுடர் வாழும் பூமி அழியாது'' என்ற நம்பிக்கை தரும் பாடலை உருவாக்கியிருக்கிறார்கள் யாழ்ப்பாணத்து இளைஞர்கள்.

அலுவலகங்களிலும் வழமையான அரட்டைகளிலும் இப்போது அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் விடயம் பூமியின் அழிவு. இந்த விடயம் இளம் தலைமுறை இசைக்கலைஞர்களையும் பாதித்ததன் விளைவாக பாடல் ஒன்றை உருவாக்கி அதற்கு ஒளிப்பதிவும் செய்து இணையத்தில் உலாவ விட்டிருக்கிறார்கள்.

வயற்பரப்புக்களையும் அருவிகளையும் வானுயர் கோபுரங்களையும் தேவாலயங்களையும் முன்னிறுத்தி எம்மை வாழவைத்த பூமித்தாய் அழிந்துவிடக் கூடாது என்ற பாசத்தின் ஏக்கமாக பாடல் வரிகள் அமைந்திருக்கின்றன. ''நீ அழியலாம், நான் அழியலாம், உலகம் அழியாது; புவிக் கிரகம் அழியாது'' என்ற பாடல் வரிகள் நம்பிக்கை தருகின்றன. 'பூமித்தாயே' என்ற தலைப்பில் 'யூ-ரியுப்'பில் பார்க்கக் கிடைக்கிறது.

## நேற்று கடுமையான கடல் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ். குடாக்கடல் நேற்று கடும் கொந்தளிப்பான நிலையில் காணப்பட்டது. இதனால் மீனவர்கள் நேற்று தொழிலுக்குச் செல்வதை தவிர்த்துக் கொண்டனர்.

காலநிலை மாறுபாட்டினால் காற்றின் தாக்கம் நேற்றுக் குடாநாட்டில் அதிகமாக இருந்தது. நேற்று முற்பகல் திடீரென குடாநாட்டின் பல இடங்களிலும் சுழல் காற்று வீசியது. இதனால் சில இடங்களில் வீட்டுக் கூரைகள் சேதமுற்றன.

கடலிலும் காற்றின் தாக்கம் அதிகமாக இருந்ததால் மீனவர் தொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொண்டனர். (த-17)

## வாகன விபத்தில் காயமடைந்த முதியவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.18

வாகன விபத்து ஒன்றில் படு காயமடைந்த முதியவர் பதின்மூன்று நாள்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் மகேந்திரன் (வயது-72) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

நீர்வேலிப் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி குறித்த முதியவரை வாகனம் ஒன்று மோதியது. எனினும் வாகனத்தின் சாரதி தலைமறைவாகி விட்டார். இதன்போது படுகாயமடைந்த குறித்த முதியவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு அங்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் 13 நாள்களின் பின்னர் முதியவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த முதியவரை மோதிக் காயப்படுத்தினார் என்று சந்தேகிக்கப்படும் வாகனச் சாரதி இதுவரை பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை. (த-4)

## மேலும் மூன்று பேர் கைது என முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 18

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கடந்த 14 ஆம், 15 ஆம் திகதிகளிலும் யாழ். குடாநாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக இவர்களின் உறவினர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் நேற்று திங்கட்கிழமை முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் கடந்த நவம்பர் 30 ஆம் திகதியிலிருந்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் பல்கலைக்கழக மாணவர்கள் முதல் முன்னாள் போராளிகள் வரை பலர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வாரம் கைதுகள் எவையும் இடம்பெற்றிருக்காத நிலையில், வார இறுதியில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி தெல்லிப்பழைப் பிரதேசத்தில் ஒருவரும், 15 ஆம் திகதி பருத்தித்துறை தாளையடியில் ஒருவரும், நெல்லியடிப் பிரதேசத்தில் ஒருவரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் நிர்வகிக்கப்பட்டு வந்த நிறுவனங்களில் பணியாற்றியவர்களே என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பதிவான 3 முறைப்பாடுகளுடன் இது வரை பயங்கரவாத விசாரணைப் பிரிவின் கைதுகள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 37 ஆக உயர்வடைந்துள்ளது. (த-5)

## பணியாளர்கள் நியமனம் தொடர்பில் விசாரணை

யாழ்ப்பாணம், டிசெ.18

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குப் பணியாளர்களை நியமித்தமை தொடர்பில் அதன் தலைவரிடம் உள்ளூராட்சித் திணைக்களம் விசாரணை நடத்தியுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்பின் பேரிலேயே இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

விசாரணைக்காகச் சபையின் தலைவர் அ.உதயகுமார் நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

உள்ளூராட்சி திணைக்களத்தில் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி க.அரியநாயகம் இந்த விசாரணைகளை மேற்கொண்டார்.

வலி.கிழக்குப் பிரதேச சபையில் 9 பணியாளர்களைத் தற்காலிகமாக நியமித்தமை, 9 பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியமை மற்றும் 9 பணியாளர்களுக்குப் பதவி உயர்வு வழங் கப்பட்டமை தொடர்பிலேயே தான் விசாரிக்கப்பட்டதாக சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

நேற்று இந்த விசாரணையை ஆரம்பித்த ஓய்வு பெற்ற நீதிபதி மேலதிக விசாரணையை நாளை புதன் கிழமை ஒத்தி வைத்தார்.

நாளை விசாரணையின் போது இந்த நியமனங்கள் தொடர்பான சகல ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு நீதிபதி சபையின் தலைவரைக் கேட்டுள்ளார். (த-17)

## ஆஸிக்கு படகில் செல்வோரை தடுக்க நான்கு அம்சத் திட்டம்

கொழும்பு, டிசெ.18

ஆஸ்திரேலியாவுக்கு இலங்கையில் இருந்து சட்டவிரோத மனிதர்கள் கடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் பொப் கார், நான்கு அம்சத் திட்டமொன்றை அறிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆள்கடத்தலை ஒழித்துக்கட்டுவது, நீர்ப்பரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது, உளவறியும் தகவல்களைப் பகிர்வது, சட்டவிரோத ஆள்கடத்தலில் கிடைக்கும் வருமானக் குறைப்பது என்பன இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்.

இந்த நான்கு அம்சத் திட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசும் கடற்படை அதிகாரிகளும் ஆராயவிருக்கின்றனர் என்று ஆஸ்திரேலியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சட்டவிரோத ஆள்கடத்தல், தேசங்களுக்கு இடையிலான குற்றச்செயல்கள் என்பன சம்பந்தமான கூட்டுச் செயற்குழுவின் ஆரம்பக் கூட்டத்தில் பங்குபற்றவென செனட்டர் பொப் கார் கொழும்பில் தங்கியுள்ளார்.

இந்தப் பேச்சுகளின் அடிப்படையில் இலங்கை மக்களுக்கு முக்கியமான செய்தி ஒன்று வழங்கப்படும். படகில் பயணம் செய்வதால், உங்களுக்கு உயிராபத்து ஏற்படுவதோடு, உங்களது பணத்தையும் இழந்து இலங்கைக்கு நீங்கள் திருப்பி அனுப்பப்படுவீர்கள் என்பதே அந்தச் செய்தியாகும் என்று செனட்டர் பொப் கார் கூறினார்.

உளவறியும் தகவல்கள் பகிர்வு, கடற்படைகளுக் கிடையில் ஒத்துழைப்பு, இலங்கையை புனரமைப்பதில் உதவி என்பன சம்பந்தமாக தெளிவான நிகழ்ச்சித் திட்டத்தை நாம் தயாரித்துள்ளோம். இவை அனைத்தும் சட்டவிரோத ஆள்கடத்தலைக் குறைப்பதற்கு பெரிதும் உதவும்.

சட்டவிரோத ஆள்கடத்தலுக்கு எதிரான இலங்கையின் பலமான ஆதரவை நான் வரவேற்கின்றேன். ஆள் கடத்தல் நடவடிக்கைகளை முற்றாக ஒழிப்பதில் இலங்கையின் அதிகரித்த ஒத்துழைப்பை நான் எதிர்பார்க்கின்றேன் என்றும் அவர் கூறினார்.

இந்தநிலையில், கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பில் முக்கியமாக ஆராயப்படும் என்றும் செனட்டர் பொப் கார் கூறினார்.

### தகவல் மற்றும் உளவறியும் தகவல்கள் பகிர்வு

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், படகுகள் புறப்படும் நேரம் மற்றும் இடம் என்பனவற்றைக் கண்காணிக்கவும், இலங்கை கொண்டுள்ள சக்தி வளத்தை விஸ்தரிக்கவும் என மேலதிக உளவறியும் மற்றும் மின்னியல் உபகரணங்களை ஆஸ்திரேலியா வழங்கும்.

இலங்கையின் உளவறியும் நிபுணத்துவத் தன்மையை மேம்படச் செய்யவென 2013 ஆம் ஆண்டிலிருந்து ஆஸ்திரேலிய - இலங்கை, கூட்டுப் பயிற்சித் திட்டம் ஆஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்படும்.

### சமுத்திர நீர்ப்பரப்பு நடவடிக்கைகள்

இலங்கை எதிர்நோக்கும் உபகரணப் பற்றாக் குறையை இனங்கண்டு, சமுத்திர நீர்ப்பரப்பில் இலங்கை கடற்படை மேற்கொள்ளும் சீர்குலைப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த உதவுதல்.

கரையோரப் பிரதேச மற்றும் வான் பிரதேச கண்காணிப்பு உட்பட இலங்கைக் கடற்படை அதிகாரிகளுக்கு ஆஸ்திரேலியாவில் பயிற்சி.

இடைமறிக்கப்பட்ட மற்றும் கடற்பயணத்துக்கு தகுதி பெறாத படகுகளில் இருந்து பயணிகளை காப்பாற்றுவதில், தேடுதல் மற்றும் ஆபத்து உதவி உபகரணங்களை வழங்குதல்.

### பரப்புரை.நடவடிக்கைகள்

சட்டவிரோத ஆள்கடத்தலின் கேந்திர இடங்கள் எனக் கருதப்படும் நகரங்கள் மற்றும் கிராமங்களில் நேரடியாகவும், வானொலி, தொலைக் காட்சி, திரைப்பட விளம்பரங்கள் மூலமும் மேற்கொள்ளப்படும் பரப்புரைகளுக்கு 700,000 டொலர் நிதியுதவி.

### ஆள்கடத்தலுக்கான கோரிக்கைகள் குறைப்பு

வறிய மற்றும் கிராமப்புற மக்கள் மத்தியில் வறுமையை ஒழித்து, பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம், பணம் சம்பாதிப்பதற்கான இடம்பெயர்வைக் குறைப்பதற்கென AusAID (அவுஸ் எயிட்) அமைப்பு ஐந்து வருட காலத்தில் 45 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்கும். ஆஸ்திரேலியா 5,000 வீடுகளையும், 23 பாடசாலைகளையும் ஏற்கனவே நிர்மாணித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடம் 65 படகுகளில் 2,900பேர் மேற்கொண்ட சட்டவிரோத இடம்பெயர்வு முயற்சி முறியடிக்கப்பட்டது உட்பட, தற்போது இலங்கை அளித்து வரும் ஒத்துழைப்புக்கு செனட்டர் பொப் கார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

2012 ஓகஸ்ட் மாதத்தில் இருந்து சட்டவிரோதமாக இடம்பெயர்ந்த 700 இலங்கையர்கள் கட்டாயத்தின் அடிப்படையில் தாயகம் திரும்பியமை பற்றியும் அவர் குறிப்பிட்டார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி மின் பாவனையாளர் பிரச்சினைக்கு தீர்வு எப்போது?

## கேள்வி எழுப்புகின்றனர் மக்கள்

*யாழ்ப்பாணம், டிசெ.18*

*வடமராட்சிப் பிரதேச மின் பாவனையாளர்களை இலங்கை மின்சார சபை பருத்தித்துறை பிரதேச அலுவலகம் என்பன தொடர்ந்து உதாசீனப்படுத்தி வருகின்றன. இது குறித்து உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காது இருப்பது வேதனை தருகின்றது என்று வடமராட்சிப் பிரதேச மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.*

வடமராட்சிப் பிரதேசத்தில் மின்சாரம் தடைப்பட்டால் அதற்குரிய காரணங்களை அறியவும், மீண்டும் மின்சாரம் எப்போது கிடைக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளவும் மின் பாவனையாளர்கள் மின்சார சபையின் பருத்தித்துறை பிரதேச அலுவலகத்திற்கு தொலைபேசி எடுத்தால் தொடர்புகொள்ளமுடியாத நிலைமையே காணப்படுகின்றது.

தொடர்ந்து தொலைபேசி இணைப்பை மேற்கொள்ள முடியாமைக்கு என்ன காரணம் என்றும் மக்கள் கேட்கின்றனர்.

சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தடைப்பட்ட மின்சாரம் இரவு 9 மணிக்கு, அதாவது 6 மணி நேரத்துக்குப் பின்னரே வடமராட்சிப் பிரதேசத்துக்குக் கிடைத்தது.

மின் தடைப்பட்ட 6 மணி நேரமும் மின்சாரப் பாவனையாளர்கள் தொடர்பு கொள்ள இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டும் முடியவில்லை என்று மின் பாவனையாளர்கள் கூறுகின்றனர்.

பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் மேலதிக தொலைபேசி ஏற்படுத்தப்பட்டு மின் பாவனையாளர்கள் இலகுவாக தொடர்பு கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பல மாதங்களாக பல்வேறு கட்டங்களிலும் அறிவுறுத்தப்பட்டது.

ஆனால் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலகங்களில் அபிவிருத்திகளை முன்னெடுக்க கூட்டப்படும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் இப்பிரச்சினை தொடர்பாக தீர்வு காண உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை.

இந்த அலுவலகத்துக்கும் உடனடியாக ஒரு மேலதிக தொலைபேசி வசதியை ஏற்படுத்தி மின் பாவனையாளர்கள் அவசரமாகத் தொடர்பு கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மின் பாவனையாளர்கள் கேட்கின்றனர். (ம-8)

## அனைத்து ஓட்டோக்களுக்கும் ஜனவரி மாதம் முதல் மீற்றர்

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்கள் அனைத்துக்கும் ஜனவரி முதல் மீற்றர் பொருத்தப்படவுள்ளது என்று யாழ். மாவட்ட ஓட்டோ சங்கத்தின் முன்னாள் தலைவர் ஏ.இ. போல் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று இடம்பெற்ற போது இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஓட்டோக்கள் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அனைத்து ஓட்டோக்களுக்கும் மீற்றர் பொருத்துவது அவசியம் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் 600 ஓட்டோக்கள் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டவை. அவற்றில் 50 ஓட்டோக்களுக்கு இதுவரையில் மீற்றர்கள் பொருத்தப்பட்டுள்ளன.

முதல் ஒரு கிலோ மீற்றருக்கு 70 ரூபாவும் மற்றைய ஒரு கிலோ மீற்றருக்கு 40 ரூபா வீதமும் அறவிடப்படும். அதேபோன்று இரவு வேளையில், ஒரு கிலோ மீற்றருக்கு 75 ரூபாவும் மற்றைய ஒரு கிலோ மீற்றருக்கும் 50 ரூபா வீதமும் அறவிடப்படும் என்று கூறப்பட்டது. இதனால் பொதுமக்களுக்கும் சாரதிகளுக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகளையும் தீர்த்துக் கொள்ள முடியும்.

இந்த ஓட்டோ சங்கத்துக்கான புதிய ஆண்டு உறுப்பினர்களாக சங்கத் தலைவராக இ.ராஜ்குமார், செயலாளராக எஸ்.யோகநாதன், உபதலைவராக எஸ்.தர்மகுலராஜா, உப செயலாளராக செ.சிறிதரன், பொருளாளராக பா.ரஞ்சித்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-13)

## வல்வெட்டித்துறைக்கு குழாய் நீர் விநியோகப் பணிகள் மும்முரம்

வல்வெட்டித்துறை நகரசபைப் பிரதேசத்துக்கான குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகத்துக்கான பணிகள் உலக வங்கியின் நிதி உதவியுடன் வேகமாக நடைபெற்று வருகின்றன.

சுமார் 225 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தக் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயிலின் வடக்குப் புறத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் லீற்றர் தண்ணீர் கொள்ளக் கூடிய பெரிய தண்ணீர்த்தாங்கி அமைக்கும் வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன.

வடமராட்சி கிழக்கு மணற்காட்டிலிருந்து இந்தத் திட்டத்துக்கான தண்ணீர் குழாய் மூலம் பெறப்பட்டு தாங்கியில் சேமிக்கப்பட்டு நகருக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் நிலத்தடியில் தண்ணீர்க் குழாய்கள் ஏற்கனவே புதைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்கென கிணறுகளை அமைக்க மணற்காட்டுப் பகுதியில் காணியைத் தருமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மருதங்கேணி பிரதேச செயலரிடம் கோரியுள்ளது. மணற்காட்டில் அமைக்கப்படும் நல்ல தண்ணீர்க் கிணறுகளில் இருந்து சுமார் 10 மைல் தூரத்தில் உள்ள செல்வச்சந்நிதி கோயிலடி தண்ணீர்த் தாங்கிவரை நிலத்தடி தண்ணீர்க் குழாய்கள் புதைக்கும் பணி கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மணற்காட்டுக்கும் செல்வச்சந்நிதிக்கும் இடைப்பட்ட தூரத்தில் மணற்காடு தொடக்கம் உபய கதிர்காமம் வரைக்கும் ஒரு கட்டமாகவும் உடுப்பிட்டி தொடக்கம் நவிண்டில் வரைக்கும் மற்றொரு கட்டமாகவும் நிலத்தடி குழாய்கள் புதைக்கப்பட்டுள்ளன. மணற்காடு- செல்வச்சந்நிதி பாதையில் ஏனைய இடங்களில் நிலத்தடி குழாய்கள் புதைக்கும் பணி விரைவில் ஆரம்பமாகும் என தெரிய வருகின்றது. (ம-8)



அச்சுவேலியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வடிகால் அமைப்பில் நீர்தேங்கி நிற்கின்றது. வாரக் கணக்கில் நீர்தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கத்துக்கு வாய்ப்பாக உள்ளது என பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அச்சுவேலி தபால் நிலையத்துக்கு முன்பாக மூன்று பக்கமும் சிமெந்தால் அமைக்கப்பட்ட வடிகாலில் தொடர்ந்து வெள்ளம் தேங்கி குளம்போல் நிற்கிறது. அதில் பொலித்தீன் உட்பட குப்பை கூழங்கள் நிரம்பிக் கிடக்கின்றன. (ம-11)

## கடற்றொழிலில் மாற்று உபகரணங்கள் பயன்படுத்தத் தீர்மானம்

தடைவிதிக்கப்பட்டுள்ள இழுவைப்படகு மூலமான கடற்றொழிலை முற்றாக நிறுத்தி அதற்குப் பதிலாக மாற்று உபகரணங்களைப் பயன்படுத்தி கடற்றொழில் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இழுவைப் படகைப் பயன்படுத்தித் தொழில் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

தடை செய்யப்பட்ட இந்தக் கடற்கலங்களைப் பயன்படுத்துவதால் மீன் வளம் குறைவடையும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தடைசெய்யப்பட்ட கடற்கலங்களை முற்றாக நீக்குவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

அதற்கேற்ற வகையில் கடற்கலங்களை கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## ஊறணி நன்னீர் ஊற்றை மரபுரிமையாக பேண வேண்டும்

### பிரகடனத்துக்கான பெயர்ப் பலகை இன்று திரைநீக்கம்

வல்வெட்டித்துறை ஊறணி நன்னீர் ஊற்று மரபுரிமையாக பேணப்பட வேண்டும் என்று தேசிய மரபுரிமைகள் அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்தப் பிரகடனத்துக்கான பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார் கலந்துகொண்டு மரபுரிமை பிரகடன பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைப்பார்.

மத்திய சூழல் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி திருமதி சண்முகப்பிரபாவும் நிகழ்வில் கலந்து கொள்வார். (ம-8)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்திய உதவிகள் கிடைக்கும்

### பயனாளிகள் சுற்றறிக்கையில் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.18

வடக்கு, கிழக்கில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே இந்திய உதவி வழங்கப்படும்.

இந்தத் திட்டம் முன்னேற்றம் அடையும்போது தேர்வு அடிப்படையில் பூர்த்தி செய்யும் ஏனைய குடும்பங்களுக்கும் 4 கட்டங்களில் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி இந்தியன் வீட்டுத் திட்டம் கிடைக்க வழியமைக்கப்படும்.

இவ்வாறு இந்திய - இலங்கை நட்புறவு செயலகம் பயனாளிகளுக்காக வெளியிட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய - இலங்கை நட்புறவும் வீடமைப்பும் எனும் தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மீளக்குடியமர்வு மற்றும் புனருத்தாரணம் ஆகியவற்றுக்கு உதவி புரிய 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்க இந்தியா உறுதியளித்துள்ளது.

இந்த வாக்குறுதியின் ஒரு பகுதியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 43 ஆயிரம் வீடுகளை அடுத்த 3 ஆண்டுகளில் அமைக்கும் திட்டத்தை நாம் ஆரம்பிக்கின்றோம்.

இதில் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தாமாகவே வீடுகளை அமைத்தல் வேண்டும்.

இதற்காக இந்திய அரசு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறை சங்கங்கள், ஐ.நா. உறைவிடம், தேசிய வீடமைப்பு அதிகார சபை, மனிதர்களுக்கான உறைவிடம் போன்ற முகவர்களை நியமித்துள்ளது.

இதற்குத் தகுதியானவர்கள்:-

★ பயனாளிகள் இலங்கை பிரஜையாகஇருக்கவேண்டும்.

★ இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் நிரந்தர வீடற்றவராக இருத்தல் வேண்டும்.

★ வேறெந்த வீட்டுத் திட்டத்திலும் உள்ளடக்கப்படாதவராக இருக்க வேண்டும்.

★ இடம்பெயர்வுக்கு முன்னர் இந்தக் கிராமத்தில் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

★ பொருளாதார நிலைமை, ஜீவாதார நிலை, தங்கியிருப்போர் எண்ணிக்கை, பிள்ளைகளின் வயது, தற்போதைய இருப்பிடத்தின் நிலைமை கவனத்தில் கொள்ளப்படும்.

★ ஊனமுற்ற நிலை தேர்வு ஆனது புள்ளியிடும் முறைக்காகப் படிவங்கள் வழங்கப்படும்.

தேர்வு பட்டியலில் பயனாளியின் பெயர் நியாயமற்ற முறையில் விலக்கப்பட்டிருப்பதாகவோ அல்லது தகுதியற்ற ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவோ எண்ணினால் அந்த விடயத்தைநடைமுறைப்படுத்தும் முகவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-50)

## வடமராட்சி கிழக்கில் ஐஸ் தொழிற்சாலை

வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் உதவியுடன் ஐஸ் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரதேச கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்தத் தொழிற்சாலை அமைக் கப்பட்டு வருகின்றது.

அத்துடன் இதனுடன் சேர்த்து உப்பு அரைக்கும் ஆலையும் அமைக்கப்படுகிறது. வடமராட்சி கிழக்கில் பிடிக்கப்படும் கடலுணவுகளை பழுதடையாது வெளி இடங்களுக்கு கொண்டு செல்வதற்கு ஏற்ற வகையிலேயே இவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

**மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வுகள்**

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தின நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிறுவனத்தின் தலைவர் வைத்தியர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் க.நந்தகுமாரன் கலந்துகொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலுவிழந்தோருக்கான நடமாட உதவும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது. (ம-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ தொழில் வல்லுநர் ஒரு நாள் சுகவீன விடுப்பில்

யாழ்ப்பாணம், டிசெ.18

வைத்தியசாலைகளில் உள்ள நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் தமது 12 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் ஒருநாள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதனால் வைத்தியசாலைகளில் மருந்து வழங்கும் பிரிவு, ஆய்வு கூடம், கதிர்வீச்சுப் பிரிவு, இயன் மருத்துவப் பிரிவு என்பன மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்று வைத்தியசாலைகளுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ள நோயாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளிலும் பணியாற்றும் நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களும் இந்தப் போராட்டத்தில் இன்று ஈடுபடுகின்றனர்.

இன்று காலை 8 மணி தொடக்கம் நாளை காலை 8 மணிவரை அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவர்.

மேலதிக நேரக் கொடுப்பனவை அதிகரித்தல், விசேட தரத்திலான நியமனங்கள் வழங்குதல், பட்டதாரி நிறைவுகாண் தொழில் வல்லுநர்கள் நியமனம், தீர்வையற்ற வாகன இறக்குமதி உள்ளடங்கிய 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் இந்தச் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

எனினும் அவசர நோயளர்களின் தேவைகள் நிறைவு செய்யப்படும் என்று யாழ். மாவட்ட நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியத் தலைவர் நா.ஜெயபாஸ்கரர் தெரிவித்தார். (த-4)

# மாத்தறையில் மீன் மழை ஆங்காங்கே சிவப்பு மழை

நாட்டின் பல பாகங்களிலும் ஆங்காங்கே சிவப்பு மழை பெய்து வருகின்ற நிலையில், மாத்தறை, கம்புறுபிட்டிய பகுதியில் நேற்று மீன் மழை பெய்துள்ளது.

உலக அழிவு வதந்தி உச்சத்தில் பரவிவருகின்ற நிலையில் குறித்த பிரதேசத்தில் நேற்று மீன் மழை பெய்ததால் அந்தப் பிரதேசத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மழையுடன் வீழ்ந்த மீன்களை பிரதேசவாசிகள் பெரும் ஆச்சரியத்துடன் பார்த்ததோடு, இது தொடர்பில் பல்வேறுவிதமாக கருத்துப் பரிமாறிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

'டொனாடோ' போன்ற சூறாவளிகளின் காரணமாக கடல் நீருடன் மேலே அள்ளப்பட்டு வருகின்ற மீன்கள் இதுபோல விழுவது ஒரு சாதாரணமான நிகழ்வு என புவியியலாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, காலி மத்தேகம மற்றும் மாத்தறை, கிரிந்த பகுதிகளிலும் நேற்று சிவப்பு மழை பெய்ந்துள்ளது.

காலி மத்தேகம, வந்துரம்பையில் சுமார் 15 நிமிடங்கள் சிவப்பு மழை பெய்துள்ளது என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

மாத்தறை, கிரிந்த, புஹுல்வெல்ல பிரதேசத்திலும் நேற்று சிவப்பு மழை பெய்துள்ளது. நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பித்த இந்த மழை, சுமார் அரை மணித்தியாலம் வரை நீடித்தது என பிரதேச செயலாளர் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டின் பல இடங்களில் அண்மைக்காலமாக சிகப்பு மழை பெய்துவருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கடத்தப்பட்ட...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி.) யினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸாரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## இலங்கையுடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யுள்ளது. இது தொடர்பில் கட்சியின் செனட்டர் லீ ரியானொன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையிலிருந்து வெளியாகும் தகவல்களைத் தமது கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் பொப் காரை நான் வலியுறுத்துகிறேன்.

போருக்குப் பிந்திய இந்தச் சம்பவங்கள் தொடர்பாக ஆஸ்திரேலியாவில் வசிக்கும் அநேக தமிழர்கள் என்னுடன் தொடர்பு கொண்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் இவர்கள் அதிர்ச்சியில் உறைந்துபோயுள்ளார்கள் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

''இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக தமது பயணத்தின்போது இலங்கை அதிகாரிகளுடன் பேசுமாறும், கடந்த வாரம் அமைச்சர் பொப் காரை கிரீன் கட்சித் தலைவர் கிறிஸ்டினி மில்னி பெரிதும் வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், பாரபட்சம் சித்திரவதை காணாமல்போகுதல், ஆள்கடத்தல்கள் ஆகியவை குறித்தும் அதிகாரிகளுடன் பேசுமாறும் அவர் அமைச்சரிடம் கோரியிருந்தார்.

''சமீபத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது. யாழ். பல்கலைக்கழக மாணவர் சங்கச் செயலாளர் கைதுசெய்யப்பட்டு இலங்கை பயங்கரவாத விசாரணை திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியா சமாதானத்தை ஊக்குவிப்பதிலும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட ஒரு நாடு. இந்தச் சமயத்தில் இலங்கையில் இடம்பெறும்மீறல்களைக் கண்டுகொள்ளாத ஒரு நிலைப்பாட்டில் இராணுவ உறவுகளைப் பலப்படுத்த முனைகிறார். வெளிவிவகார அமைச்சர் பொப் கார். இது விவேகமான ஒரு செயலாகாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தெரிவுக்குழு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இதர நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நேற்றைய தினம் அனுப்பப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாகக் கடந்த வாரம் சபாநாயகருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் மேற்படி தெரிவுக்குழுவின் உறுப்பினருமான இரா. சம்பந்தன், குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கைகள் தமக்கு வழங்கப்படவில்லையென சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நேற்றிரவு தனது சட்டத்தரணிகளுடன் நீண்டநேரம் ஆலோசனைகளை நடத்தியிருக்கிறார். குற்றப்பிரேரணை விடயம் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து அப்போது விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிய வந்தது.

## மாணவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பதற்காக கைதுசெய்து செய்யப்பட்ட மாணவர்களை விடுவியுங்கள். கடந்த கால அனர்த்தங்களுக்கு நாட்டை மீண்டும் இட்டுச்செல்லாதீர்கள். இந்த விடயத்தில் நீங்கள் நேரடியாகத் தலையிடவேண்டும்'' என்று மனோ கணேசன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ''மாணவர் விவகாரம் தொடர்பாக எனக்கு முழுவிவரங்கள் கிடைக்கவில்லை. உயர்கல்வி அமைச்சரும் தற்போது நாட்டில் இல்லை. அவர் தான் இந்த விவகாரங்களை கையாள வேண்டும். அவர் நாடு திரும்பியவுடன் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கூறினார்.

அதற்கு மனோகணேசன் ''பல்கலை மாணவர் விடயத்தில் பல்கலைக்கழக விடயமாக அல்லாமல் பாதுகாப்பு அமைச்சே கையாள்கிறது.'' என்று சுட்டிக்காட்டினார்.

இதற்கு ''உண்மையில் இந்த விடயத்தில் நான் உயர்கல்வி அமைச்சர் மூலமே அணுக விரும்புகிறேன். இத்தகைய சம்பவங்கள் இனப்பிரச்சினையை வைத்து அரசியல் செய்வோருக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டன. ஆனால் எனக்கு அத்தகைய நோக்கம் கிடையாது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரின் காலத்திலேயே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதே எனது விருப்பம்.'' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

# கடலில் மூழ்கியவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

காரைநகர் கசூரினா கடலில் நேற்றுமுன்தினம் குளிக்கச்சென்ற இளைஞரின் சடலம் நேற்று திங்கட்கிழமை அங்கு கரையொதுங்கியது.

புன்னாலைக்கட்டுவன், குப்பிளானைச் சேர்ந்த உதயகுமார் நிதர்ஷன்(வயது -21) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

விடுமுறை தினமான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சக நண்பர்களுடன் கசூரினா கடலில் குளிக்கச்சென்றுள்ளார். அங்கு குளித்துக்கொண்டிருந்தபோது பிற்பகல் ஒரு மணியளவில் இவர் காணாமல்போயிருந்தார் என அவரது நண்பர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு கடமையில் இருந்த பொலிஸாரின் நீச்சல் பிரிவினர் கடற்படை மற்றும் மீனவர்களின் உதவியுடன் கடலில் தேடுதல் நடத்தியிருந்தனர். எனினும் நேற்றுமுன்தினம் இரவு வரை அவரை மீட்கமுடியவில்லை. இந்த நிலையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் சடலம் அங்கு கரையொதுங்கிய நிலையில்காணப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் மரண விசாரணையின் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சடலத்தை அனுப்பி பரிசோதனைகளின் பின்னர் அதனை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். இதன்படி நேற்று நண்பகல் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த-4-250)

# மண்சரிவால் ஐவர் சாவு

மாத்தளையில் வீட்டின் மீது மண்மேடுகள் சரிந்து விழுந்ததால் 5 பேர் பலியாகினர். மேலும், நான்கு பேர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ரத்தோட்டை, அல்வத்தை, லோன்வில, வெல்லன்காவத்த மற்றும் திக்கும்பர ஆகிய இடங்களிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி மண்திட்டு சரிந்து விழுந்ததில் மாத்தளை-கண்டி வீதியும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அத்துடன், சுதுகங்கையில் சுமார் 300 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் மாத்தளை மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

## பந்துபோன்ற...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இணைந்து நாயுடன் விளையாடியுள்ளனர்.

இந்தச் சிறுவர்கள் வீட்டுக்குள் சென்ற பின்னர் பந்து போன்ற அந்தப் பொருளை நாய் மீண்டும் கௌவியுள்ளது. இதன்போது அந்தப் பொருள் வெடித்ததில் நாய் தலை சிதறி உயிரிழந்துள்ளது.

வீட்டுக்குள் நின்ற குழந்தைகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். இந்தச் சம்பவத்தால் குறித்த பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. (த-9)

## கோட்டையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யாக நிறுத்துமாறும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்றலில் இன்று மாலை 4 மணிக்கு சம உரிமை இயக்கம் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வி.பவானந்தன், ஒன்றியத்தின் செயலாளர் ப.தர்சானந், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயந்த், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் ஊறுப்பினர் எஸ்.சொலமன் ஆகிய நால்வருமே தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் .

கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை பல்கலைக்கழக மாணவர்கள் அனுஷ்டிப்பதைத் தடுக்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர் விடுதிகளுக்குள் படையினர் உட்புகுந்ததைத் தொடர்ந்து, இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து, பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சமஉரிமை இயக்கம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குபடுத்தியுள்ளது. (ஐ)

## மர்மப்பொருள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யோரமாக நிலத்தை மண்வெட்டியால் பண்படுத்திக்கொண்டிருந்தபோதே குறித்த மர்மப்பொருள் வெடித்தாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4-86)

## யாழ்ப்பாணத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யானது வவுனியாவில் 3.658 ஆகவும், மட்டக்களப்பில் 3.775 ஆகவும், திருகோணமலையில் 3.729 ஆகவும், அம்பாறையில் 3.616 ஆகவும், கண்டியில் 3.570 ஆகவும் காணப்படுகின்றது.

13 மாவட்டங்களில் வாழ்க்கைச் செலவுப் புள்ளி தேசிய வறுமைக் கோட்டுக்கு அதிகமாகக் காணப்படும் அதேநேரம் ஒன்பது மாவட்டங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே காணப்படுகின்றது. தேசிய வறுமைக் கோடானது ரூபா 3,545 ஆகக்கணிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குரிய இந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரம் தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரங்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. (ப)

## நிரந்தர...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நெடுங்கேணியில் கால் ஏக்கர் காணி பிரதேச வைத்தியசாலைக்கும், மன்னங்குளம் கொல்லாறு பகுதியில் 20 பேர்ச் காணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கும், பரசங்குளத்தில் 35 ஏக்கர் காணி இந்திய வீட்டுத் திட்டத்துக்கும், முதலியார் குளத்தில் 15 ஏக்கர், கற்குளம் பகுதியில் 42 ஏக்கர், தாண்டிக் குளத்தில் 120 ஏக்கர் காணிகள் நெற்செய்கைக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில், மாவட்ட காணி வழங்கல் திட்டமிடல் குழு செயலர் எஸ்.முரளிதரன், பிரதேச செயலர், திணைக்களத் தலைவர்கள், செயலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-402)

## அரியாலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இவர், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டரில் மோதினார் என்று சம்பவத்தைக் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

## உயர்நீதிமன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பண்டார நாயக்கவுக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்பாக சாட்சியமளித்த ஒரேயொரு நீதியரசர் ஷிராணி திலகரத்ன. அவரது செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

## பல்கலைக்கழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

படைத் தளபதியுடனான பேச்சுத் தொடர்பில் கலைப்பீட துறைத் தலைவர்கள் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் இந்த யோசனைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாக தகவல் வட்டாரம் 'உதயன்' பத்திரிகையிடம் கூறின. ''தாம் இராணுவத்தினரைச் சந்திக்க வேண்டிய அவசியமே இல்லை என அவர்கள் கூறிவிட்டனர்'' என்று அந்த வட்டாரம் மேலும் தெரிவித்தது.

மாவீரர் தினத்தைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களில் நால்வர் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் வெலிகந்தவில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே விடுவிக்கப்படுவர் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார். அத்துடன் மாணவர்கள் விடுவிக்கப்படுவதற்குக் காத்திருக்காமல் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை வழமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியிருந்தார்.

இதனை அடுத்தே யாழ். மாவட்ட இராணுவத் தளபதியுடனான சந்திப்புக்கு துறைத் தலைவர்களை வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலிக் கடவுச்சீட்டில் பிரான்ஸ் சென்ற இலங்கையர் சென்னையில் கைது

சென்னையில் இருந்து போலி கடவுச்சீட்டில் பிரான்ஸ் சென்ற இலங்கையரான கணினிப் பொறியியலாளரை அதிகாரிகள் சென்னைக்குத் திருப்பி அனுப்பினர். அங்கு அவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் இந்திரகுமார் (வயது 23) என்பவர் 2006 ஆம் ஆண்டு அகதியாக தமிழகம் சென்றார். இராமேஸ்வரம் மண்டபம் முகாமில் தங்கினார். பின்னர் கணினிப் பொறியியல் கற்கையை முடித்த அவர் பிரான்ஸ் செல்ல முடிவு செய்தார்.

முகவர் மூலம் சென்னை கே.கே.நகரில் வசிப்பவர் போல் போலி கடவுச்சீட்டு வாங்கி பிரான்ஸ் விசா பெற்றார். கடந்த 14 ஆம் திகதி சென்னையில் இருந்து அபுதாபி வழியாக பாரீஸ் சென்றார். போலிக் கடவுச்சீட்டில் இந்திரகுமார் வந்ததைக் கண்டுபிடித்த குடியுரிமை அதிகாரிகள் அவரை சென்னைக்கு திருப்பி அனுப்பினர். நேற்று முன்தினம் காலை சென்னை வந்த இந்திரகுமார், அதிகாரிகளின் விசாரணைக்குப் பின்னர் விமான நிலைய பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். (வ)



சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு வாழ்வாதார உதவிக்கடன் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் கடனுக்கான காசோலையை பயனாளிக்கு வழங்குவதையும் அருகில் யாழ்.மாவட்ட வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவைகள் நிலைய உதவிப் பணிப்பாளர் ஸ்ரீ.கலாதரன் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

## தூக்கி வீசப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, டிசெ.18

பஸ்ஸைப் பின்தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிள், திடீரென பஸ் நிறுத்தப்பட்டபோது அதனுடன் மோதியதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று நுணாவில் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

வரணியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வரத்தினம் (வயது-56) என்பவர் காயங்களுக்கு ஆளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

# ஐ.நா வை நம்புவதில் இனிமேல் பயனில்லை 4 ஆம் உலகை நாம் உருவாக்க வேண்டும்

### மே 17 இயக்கத்தின் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழக இளைஞர் முன்னணியின் செயலாளர் கருத்து

சென்னை, டிசெ.18

ஐ.நா. அமைப்பை நம்புவதை விட 4 ஆம் உலகை நாம் கட்டியெழுப்ப வேண்டும் என்று தமிழக இளைஞர் முன்னணி பொதுச் செயலாளர் தோழர் அருணபாரதி தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற தமிழினப் படுகொலையில் ஐ.நா. அதிகாரிகளின் பங்கு அம்பலமாகியுள்ள நிலையில், மே பதினேழு இயக்கம் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை வள்ளுவர் கோட்டத்தில், ஐ.நா. அதிகாரிகள் மீது விரிவான விசாரணைகோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



ஆர்ப்பாட்டத்தின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. அமைப்பின் மீதும், இலங்கை அரசின் மீதும் குற்றம் சாட்டும் நாம் அவர்களைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற வேண்டும். அதே வேளையில், ஐ.நா. ஏன் தமிழ் இனத்துக்கு எதிராக அவ்வாறு செயற்பட வேண்டும்? அதற்கான தூண்டுதல் எங்கிருந்து பிறக்கிறது என்று சிந்திக்க வேண்டும்.

தமிழின அழிப்பின்போது, இலங்கை அரசுக்கு பல வகைகளிலும் உதவி செய்து இந்திய அரசு செயற்பட்டது. அதேசெயற்பாடு தான் தமிழகத் தமிழர்களுக்கு காவிரி நீர் மறுக்கப்படும் போதும், முல்லைப் பெரியாறு அணை உரிமை கேரளாவால் பறிக்கப்படும் போதும் அதைத் தடுக்காத இந்திய அரசிடமிருந்து வெளிப்படுகின்றது.

தமிழகத் தமிழர்களையும், ஈழத்தமிழர்களையும் வஞ்சிக்கும் இந்திய அரசு தான் உலகத் தமிழர்களின் முதன்மை எதிரி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் 2009 இல் ஈழத்தில் போர் நிறுத்தம் கோரிப் போராடிக் கொண்டிருந்த அதே சூழலில் தான், பலஸ்தீனத்தின் காஸா பகுதியின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இதன்போது, பலஸ்தீனத்துக்காக அவர்களது அரபு நாடுகள் ஐ.நா. சபையில் பேச முன்வந்தன. அதன் காரணமாக 17 நாள்களில் போர் நிறுத்தம் அங்கு வந்தது. ஆனால், தமிழினத்துக்கென்று பேச எந்த நாடும் வரவில்லை.

தமிழ் இனத்துக்கென்று பேச ஒரு நாடு இல்லை என்பதுதான் காரணம். 7 கோடி தமிழர்கள் கொத்தாக வாழும் தமிழ் நாட்டைக் கொண்ட இந்தியா தான் போரை நடத்திக் கொண்டிருந்த நிலையில், இந்திய அரசு போர் நிறுத்தம் செய்ய முன்வருமா?

எனவே, நாம் ஐ.நா.வுக்கு வெளியே தான் களம் அமைக்க வேண்டியுள்ளது. அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ முதல் உலக நாடுகள், சீனா, ரஷ்யா தலைமையிலான இரண்டாம் உலக நாடுகள், இந்தியா, பிரேசில் போன்ற மூன்றாம் உலக நாடுகள் என உலக நாடுகள் அணிசேர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழர்கள் இதில் எந்த அணியிலும் இல்லை என்பதே நம்முன் உள்ள உண்மை.

தமிழர்கள் எமக்கான 4 ஆம் உலகத்தை கட்டியெழுப்புவதே இன்றைய தேவையாக எம்முன் உள்ளது. உலகில் எங்கெல்லாம் தேசத்தை இழந்து, தேச விடுதலைக்காகப் போராடுகிறார்களோ, அது தாய்த் தமிழகமாகட்டும், காஷ்மீராகட்டும், அசாமாகட்டும், அவர்களெல்லாம் நம் நண்பர்கள் என நாம் அணி சேர்ந்து, நான்காம் உலகத்தைக் கட்டியெழுப்புவோம்- என்றார். (வ)

## ஈழ இளைஞர்களது பாதுகாப்புக்கு இந்தியாவின் நடவடிக்கை தேவை

### விடுதலைச் சிறுத்தைகள் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றம்

ஈழத்திலுள்ள மாணவ, இளைஞர்களது பாதுகாப்புக்கு இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சென்னை, கோயம்பேடு, விஜய்பூங்கா விடுதியில் அவரது தலைமையில் மாநிலச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது நிறை வேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

ஈழத்தில் பல்கலைக் கழக மாணவர்கள் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி மாவீரர் நாள் கொண்டாடியதால் இலங்கை இராணுவத்தினர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தனர். மேலும் அவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தியதுடன் அவர்களை கொடூரமான வதைகளுக்குட்படுத்தியும் வருகிறது.

இந்தநிலையில், இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு ஈழ மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**தமிழர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாம்களை அந்தப் பகுதிகளிலிருந்து முற்றிலுமாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்**

தமிழர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாம்களை அந்தப்பகுதிகளிலிருந்து முற்றிலுமாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் இந்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## இணுவில் கந்தசுவாமி கோயில் வீதியை ஆக்கிரமித்து நிற்கும் பாதீனியச் செடிகள்



இணுவில் கந்தசுவாமி கோயில் முன்பக்க வீதியின் பல இடங்களிலும் பாதீனியச் செடிகளின் ஆதிக்கம் கடந்த சில மாதங்களாக அதிகரித்திருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி ஆலயத்தின் முன்பக்க வீதியில் ஐம்பது மீற்றர் தாண்டியதும் வடக்குப் பக்கமாக இந்தப் பாதீனியச் செடிகள் பெருந்தொகையாக பரவிக் காணப்படுகின்றன. இதனால் அருகிலுள்ள விவசாய நிலங்களில் வைக்கப்பட்டுள்ள பயிர் வகைகள் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் பொதுமக்களுக்கு தோல் நோய்கள் போன்றன ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது. எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடிக் கவனமெடுத்து மேற்படி பாதீனியச் செடிகளை அழிக்க நடவடிக்கை எடுப்பதுடன் பொதுமக்களின் நலனிலும் அக்கறை கொள்ள வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (3-288)


## மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் குடும்பஸ்தர்

தென்மராட்சி, டிசெ.18

குடும்பஸ்தர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியைச் சேர்ந்த ஜெயரத்தினம் சுரேந்திரா (வயது-31) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரைகளை அருந்தியமையே இதற்குக் காரணம் என்று வைத்தியசாலைத் தகவல்கள் கூறுகின்றன. (ம-9)



தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் குருதி[illegible] நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதார வைத்தி[illegible] (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ஏ-9 வீதியை கடக்கும் போது மஞ்சள் கடவையைப் பாவிப்பதில்லை

## போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி கூறுகிறார்

பொது மக்கள், பாதசாரிகள் கிளிநொச்சி ஏ-9 வீதியைக் கடப்பதற்கு மஞ்சள் கடவையை சரியாகப் பயன்படுத்துவதில்லைஎன்றும் அதனால் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரித்துள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பாக பரந்தன் சந்திப் பகுதியில் உள்ள மஞ்சள் கோட்டை பாதசாரிகள் பயன்படுத்தாமல் ஏ-9 வீதி மற்றும் ஏ-35 வீதி ஆகியவற்றின் ஏனைய பகுதியைப் பயன்படுத்துவதனால் விபத்துக்கள் ஏற்படும் ஆபத்தான நிலை காணப்படுகின்றது. பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதியில் பாதசாரிகள் மஞ்சள் கோட்டுக் கடவையைப் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில் நடைபாதைக்கு வேலியமைத்து மஞ்சள் கோட்டுப்பகுதியை மட்டும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு வேலியமைப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏ-9 வீதியின் 155 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள பாலம் மிகவும் ஆபத்தான முறையில் காணப்படுவதனால் அந்தப் பகுதியினூடாக விபத்துக்கன் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எனவே பாலத்தை புனரமைத்து விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க வழிவகை செய்யுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-6)

**காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி, கனகபுரம் பாடசாலைக்கு அருகில் 2 ஏக்கர் உறுதிக் காணி பகுதியாகவும் முழுமையாகவும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு 0771988083**

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்**

வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வது) தெல்லிப்பழை

இடம்:- மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய மண்டபம்

காலம்:- 22.12.2012 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு

மேற்படி விசேட பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் கா.சிவஞானம் அவர்களது தலைமையில் நடைபெறும். தகைமையுள்ள அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:-

*சங்க அங்கத்தவர்களின் தற்போதைய வதிவிட விவரங்கள் முழுமையாக எம்மிடம் இல்லாமையால் எல்லா அங்கத்தவர்களும் இதனைப் பொது அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தலைவர். செயலாளர்.

(26892)(2.7)

## சமுதாய நல்லொழுக்க நிறுவன ஏற்பாட்டில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

மாங்குளம்,டிசெ.18

சமுதாய நல்லொழுக்க நிறுவனத்தின் அனுசரணையுடன் மாங்குளம் மகா வித்தியாலயம், சண்முகரட்ணம் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இன்று காலணிகள், புத்தகப்பை உட்பட கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று பிற்பகல் 3 மணிக்கு மாங்குளம் 574 ஆவது படைத்தலைமையக ஒன்றுகூடல் மண்டபத்தில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது. இதில் 600 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று மாங்குளம் மகா வித்தியாலய அதிபர் ப.இரவீந்திரநாதன் அறிவித்துள்ளார்.

மேற்படி இரு பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு பிற்பகல் 2.30 மணிக்கு சமுகமளிக்குமாறும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியுள்ள மாணவர்கள் பரீட்சை முடிந்ததும் உரிய இடத்துக்கு சமுகமளிக்குமாறும் தவிர்க்க முடியாத காரணத்தால் வரமுடியாத மாணவர்களின் பெற்றோர்கள் சமுகமளித்து பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-422)

## தனியார் காணி படையினர் வசம்

முல்லைத்தீவு, டிசெ.18

முல்லைத்தீவு சுதந்திரபுரம் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றைப் படையினர் தமதாக்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு சுதந்திரபுரம் சந்திக்கு அண்மித்த பகுதியில் முன்னர் நெற்களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டிருந்த இரண்டு ஏக்கர் தனியாரின் காணியை கடந்த திங்கட்கிழமை முதல் படையினர் ஆக்கிர மித்துள்ளனர்.

குறித்த காணி 'படையினருக்குரிய பூமி'' எனப் பெயர்ப் பலகை நடப்பட்டு தற்போது காவலரண் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, சுதந்திரபுரம் சந்தியில் படையினர் தொடர்ந்து தமது பயன்பாட்டில் வைத்துள்ள மூன்று வர்த்தக நிலையங்களின் கட்டடங்களையும் பெற்றுத்தருமாறு உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-6)

**PERSONAL CLASS**

கணிதம், ஆங்கிலம் 6 - 11
விஞ்ஞானம் 6 - 8
ஆகிய பாடங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0779863678

**வேலை வாய்ப்பு**

எமது நிறுவனத்துக்கு ஆளணி தேவை.
விருப்பமுடையோர்(19.12.2012)புதன்கிழமை ஒரு மணி முதல் 3மணி வரை நேரில் வரவும்.
(26863)(14)

**யாழ்.கொழும்பு பிறிண்டேஸ்**
K.K.S வீதி (யாழ்.இந்துக் கல்லூரி அருகில்)

**தவறிவிட்டது**

திக்கம் அல்வாய், வடமேற்கு என்னும் முகவரியுடைய பாலசுப்பிரமணி ஐயர் கணநாதசர்மா என்பவரின் தேசிய அ.அ(892392137 V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் கொமர்ஷல் வங்கி ATM காட் என்பன அடங்கிய பேர்ஸ் கல்வியங்காட்டுக்கும் யாழ். ஆஸ்பத்திரி வீதிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 9577868 (26891)(6.11)

ரண் கெகுளு



ஐந்தில் எங்கள் எதிர்காலம்... உள்ளது ரண் கெகுளு புத்தகத்தில்

**5 ஆம் தர புலமைப்பரிசில் சிறார்களுக்காக**

**இலங்கை வங்கியின் ரண் கெகுளு புலமைப்பரிசில்கள் 2000**

• தகைமைகள்

**ரண் கெகுளு புலமைப் பரிசிலுக்கு**

1. இலங்கை வங்கியின் ரண் கெகுளு சிறுவர் கணக்கொன்றை வைத்திருத்தல்
2. 2012 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமை பரீட்சையில் தோற்றியிருத்தல்
3. பரீட்சை நடைபெற்ற தினமான (2012 ஆகஸ்ட் 26) அன்று கணக்கில் குறைந்த பட்சம் ரூ 2500 இருந்திருத்தல் வேண்டும்
4. பரீட்சையில் 173 புள்ளிகளை அல்லது அதற்கு மேல்பெற்றிருத்தல் அல்லது மாவட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு அமைய மாவட்டத்தில் முதல் 10 மாணவர்களுக்கிடையே இருத்தல்.

**ரண் கெகுளு வெளிநாட்டு நாணய கணக்கு (RKFC) புலமை பரிசிலுக்கு**

1. இலங்கை வங்கியின் ரண் கெகுளு கணக்கொன்றை வைத்திருத்தல்
2. 2012 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமை பரீட்சையில் தோற்றியிருத்தல்
3. பரீட்சை நடைபெற்ற தினம் (2012 ஆகஸ்ட் 26) முன் 6 மாதத்திற்கு கணக்கில் குறைந்த பட்சம் அமெ.டொ 250 அல்லது அதற்கு சமனான வெளிநாட்டு பண பெறுமதியினை கொண்டிருத்தல்.

★ ரூபா இருபத்தி ஐந்தாயிரம் படி புலமைப் பரிசில் 100 இலங்கையில் அதிக புள்ளிகள் பெற்ற ரண் கெகுளு வெளிநாட்டு நாணய கணக்கு (RKFC) வைத்திருப்போருக்கு வழங்கப்படும்

★ ரண் கெகுளு புலமை பரிசில் மற்றும் RKFC புலமை பரிசில் ஆகிய இரண்டிற்கும் தகுதி பெறுபவர்களுக்கு ரூபா முப்பத்தையாயிரம் பணம் வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதி 2012 டிசம்பர் 20**

**இலங்கை வங்கியின் ரண் கெகுளு புலமை பரிசில் - 2012 மாதிரி விண்ணப்ப படிவம்.**

☐ ரண் கெகுளு கணக்கு புலமைபரிசில் ☐ ரண் கெகுளு வெளிநாட்டு நாணய கணக்கு (RKFC) புலமைப்பரிசில்

பிள்ளையின் முழுப் பெயர்........ கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்........

பாடசாலை ........ பரீட்சை இல ........

2012 புலமைப் பரிசிலில் பெற்ற புள்ளிகள் ........ நாடளாவிய ரீதியில் தரநிலை .... மாவட்டம் மற்றும் மாவட்டத்தில் தரநிலை....

RKG அல்லது RKFC கணக்கிலக்கம் ........ கணக்கு உள்ள கிளை........

தாய் / தந்தை / பாதுகாவலரின் பெயர் மற்றும் முகவரி ........ தொலைபேசி இலக்கம்(இருப்பின்) ........

தாய் / தந்தை / பாதுகாவலரின் கையொப்பம் ........ திகதி ........

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தகமைகள் கொண்டுள்ள இலங்கை வங்கியின் ரண் கெகுளு மற்றும்' ரண் கெகுளு வெளிநாட்டு நாணய சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் பிள்ளைகளின் விண்ணப்ப படிவத்தை பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.



உதவி சிரேஷ்ட முகாமையாளர்(விற்பனை)
16வது மாடி சந்தைப்படுத்தல் பிரிவு இலங்கை வங்கி பிரதான காரியாலயம்
இலங்கை வங்கி சதுக்கம் கொழும்பு 01

கடித உறையின் இடது பக்க மூலையில்
BOC ரண் கெகுளு புலமைபரிசில் 2012 என அல்லது
RKFC புலமைபரிசிலுக்காக விண்ணப்பீர்களாயின்
RKFC புலமைபரிசில் 2012 என குறிப்பிடவும்.

seraidea.lk

www.boc.lk இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01. | அழைப்பு நிலையம் (+94) 011 220 4444 | Fitch Rating AA+(lka)

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# உலக அழிவு குறித்த வேண்டாத அங்கலாய்ப்புகள் அச்சங்கள்...

எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 11மணி 11 நிமிடத்துடன் மாயன் கலண்டர் முடிவுக்கு வருகிறது. இதுகுறித்து மக்கள் மத்தியில் பரவலாகப் பலதரப்பட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. அவற்றில் முதன்மையானதும் முக்கியமானதும் மாயன் கலண்டர் முடிவடைந்த அடுத்த நிமிடமே உலகம் அழிந்துவிடும் என்பதே.

இந்த விவகாரம் இலங்கை உட்பட உலக நாடுகள் அனைத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இலங்கையில் சமீப நாள்களாக வானத்தில் இருந்திருந்தாற் போலிருந்து பிரகாசமான ஒளிர்வுகள் தென்படுகின்றன. சில இடங்களில் எரிகற்கள் விழுந்துள்ளன. அத்தகைய எரி கல்லொன்று வீழ்ந்து காலியில் ஒரு பலாமரம் எரிந்து விழுந்துவிட்டது. தற்பொழுது நாட்டில் காணப்படும் அசாதாரண கால நிலை, அம்பாறையில் இடம்பெறும் நில அதிர்வுகள் போன்றவை மக்கள் மத்தியில் மேலும் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன என்பது ஊடகங்கள் தரும் தகவல்கள்.

ஒவ்வொரு ஆண்டும் வழமையாக டிசம்பர் மத்தியில் ஆகாயம் மிகவும் இருட்டாக இருக்கும். அதனால் எரிகற்களை சாதாரண கண்களால் பார்க்கக்கூடியதாக இருக்கும். எரிகற்கள் அதிகம் உள்ள பாதையில் பூமி தற்போது பயணித்துக்கொண்டிருக்கிறது என்று ஆர்தர் சி கிளார்க் நிறுவனம் தெரிவிக்கிறது.

மாயன் கலண்டருடன் இந்த எரிகற்கள் வீழ்ச்சியும் சேர்ந்து உலகம் அழியப்போகிறது என்ற வதந்திக்கு வலுவூட்டிவிட்டிருக்கிறது. உலகம் முழுவதையும் இது அச்சத்தில் உறையவைத்துள்ளது. 21ஆம் திகதியில் இருந்து மூன்று நாள்களுக்கு உலகம் இருண்டுவிடும் என்று பரப்பப்பட்ட வதந்தியினால், உலக நாடுகளில் பலர் மெழுகுவர்த்திகளை வாங்கிச் சேமிப்பதிலும் பிராணவாயுவை இருப்பில் வைத்துக்கொள்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்பன செய்திகள்.

துருக்கியிலும் பிரான்ஸிலும் உள்ள குறிப்பிட்ட இரு நகரங்களில் உலக அழிவில் இருந்து பாதுகாப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் ஆயிரக்கணக்கானோர் அங்கு விரைந்துகொண்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் மறுபுறத்தே மெக்சிக்கோவில் மாயன் கலண்டரின் முடிவுக்குப் பின்னர் ஆரம்பமாகும் புதிய ஆண்டை குதூகலமாக வரவேற்பதற்கு மக்கள் தயாராகி வருகின்றனர். பெரும் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

கி.மு. 2, 000 ஆண்டுகளுக்கு முன்பு தென் அமெரிக்காவில் மாயா என்ற ஓர் இனத்தவர் வாழ்ந்தனர். 3, 500 ஆண்டுகள் வாழ்ந்த அந்த இனம் 15 ஆம் நூற்றாண்டில் அழிந்துபோனது. அந்த இனத்தவர்கள் விஞ்ஞானிகளைவிடவும் புத்திசாலிகளாக வாழ்ந்தனர் என்று சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. அவர்கள் கட்டடக்கலை, வானசாஸ்திரம், சோதிடம், அமானுஷ்யம், கணித சூத்திரம் போன்ற அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சிபெற்ற வித்தகர்களாக விளங்கினர். தற்பொழுது எம் மத்தியில் புழக்கத்தில் உள்ளது போன்ற ஒரு கலண்டரை அவர்களும் பயன்படுத்தி வந்தனர். அந்தக் கலண்டர் கி.மு.313 இல் தொடங்கி, 2012 டிசம்பர் 21 முற்பகல் 11மணி 11 நிமிடத்துடன் முடிவடைகிறது.

இந்தத் தகவல்தான் உலகம் முழுவதையும் தற்போது அச்சத்தில் உறையவைத்துள்ளது. இதற்கு உறுதுணையாகக் காலநிலை மாற்றங்களும், இயற்கைச் சீற்றங்களும் வலம்வந்து உலகம் முழுவதிலும் இந்த விடயத்தை ஒரு விவாதப்பொருளாக்கிவிட்டுள்ளன.

உலக அழிவு கணிப்புக்குத் துணையாக மற்றொரு விடயமும் தற்போது சேர்ந்துகொண்டுள்ளது. அதுதான் நிபிரு என்ற கிரகத்தின் உலகை நோக்கிய பயணம். இந்தக் கிரகம் உலகை அண்மித்து வரும்போது துருவமாற்றம் நிகழும் என்கிறார்கள். அதனால் பூமியின் சுழற்சி அச்சின் சரிவு மாறி பெரும் அழிவு ஏற்படும் என்று கூறப்படுகிறது.

ஆனால், மாயன் கலண்டர் முடிவில் உலகம் அழியும் என்று அந்தக் கலண்டரில் எந்த இடத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவர்கள் தமது இனத்துக்கு ஏற்படப்போகும் அழிவு குறித்துக் கூட அதில் குறிப்பிடவில்லை. அது அவர்களின் கணக்குப்படி, மெக்சிக்கோ மக்கள் நம்புவது போன்று, யுகமாற்றமாகவே இருக்கலாம். இயற்கைப் பேரழிவுகள் உலகம் தோன்றிய காலம் முதல் அடிக்கடி இடம்பெற்றே வருகின்றன. ஆழிப்பேரலையும் கூட அத்தகைய ஒன்றுதான். மக்களின் இப்போதைய அச்சத்தை வாய்பாகப் பயன்படுத்தி சினிமா உலகமும் திரைப்படங்களை வெளியிட்டுப் பயன்படுத்திக்கொண்டது.

கி.பி. 1, 503 முதல் 1, 566 வரை வாழ்ந்த உலகப் புகழ்பெற்ற தீர்க்கதரிசியான நாஸ்டர் டாமஸ் என்பவர், எப்பொழுது ஏப்ரல் மாதம் வெள்ளிக்கிழமை 25 ஆம் திகதி வருகின்றதோ அன்று உலகம் அழிந்துவிடும் என்று கூறிவந்தார். அதன்பின்பு இதுவரை நான்கு தடவைகள் ஏப்ரல் மாதம் வெள்ளிக்கிழமை 25 ஆம் திகதி வந்து கழிந்தாயிற்று. ஆனால் உலகில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை. உலக அழிவு குறித்த எதிர்வு கூறலை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா தவறான மிகைப்படுத்தல் என மறுத்துள்ளது. உலகம் இருளில் மூழ்கிவிடும் எனக் கூறப்படுவதில் அர்த்தம் இல்லை என்றும் அது அடித்துக்கூறுகிறது.

மத நம்பிக்கையின்படி உலகம் ஒருநாள் அழியத்தான் போகிறது. இந்துக்கள் ஊழிக்காலம் என்கிறார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரண்டாவது வருகை என்கிறார்கள். இஸ்லாத்திலும் உலக அழிவு குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. காலம் குறிக்கப்பட்டு உலகம் அழியும் என்று எந்த மதமும் கூறவில்லை. ஆகவே, இந்த விஞ்ஞான யுகத்திலும் கூட அறிவியல் ரீதியான சிந்தனை அற்றவர்களாகவே மக்கள் உலகளாவிய ரீதியில் வாழ்வது இதன்மூலம் பளிச்செனப் புலனாகிறது. அதனால்தான் வதந்திகளுக்கும் பீதிகளுக்கும் அவர்கள் இரையாகிறார்கள்.

வாழ்வும் சாவும் இறைவன் வகுத்த விதமே நடைபெறும் என்று சமயங்கள் ஆன்மிக வழிநின்று சொல்ல, விஞ்ஞானக் கோட்பாடுகளைக் கேள்விகளாக்கும் வகையில் உலக அழிவு குறித்து அது வருமுன் 'பிதற்றும்' போக்கு ஒரு வகையில் சிரிப்புக்கு இடமாகியும் விட்டது...

இயற்கையின் சீற்றங்களை முற்றுமுழுதாகத் தடுத்துத் தவிர்த்துக் கொள்வது மனிதனுக்கு இயலாத ஒன்று என்பதனைப் புரிந்து கொண்டால், வேண்டாத அச்சமும் அங்கலாய்ப்பும் அதிர்ச்சிகளும் அற்றுப்போய் விடும்.

# இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் இலங்கை பெற்ற கடன் 62,185 கோடி ரூபா!

## மத்திய வங்கியின் அறிக்கையில் தகவல்

கொழும்பு,டிசெ.18

இந்த ஆண்டின் முதல் பத்து மாத காலத்தில் இலங்கை அரசு பெற்ற மொத்த வெளிநாட்டுக் கடன் 62 ஆயிரத்து 185 கோடி ரூபா என்று, மத்திய வங்கியால் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இலங்கையால் பெறப்பட்டுள்ள கடன்கள் குறுகிய காலக் கடன்கள், நீண்ட காலக் கடன்கள் என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு திறைசேரி உண்டியல்கள் மற்றும் கடன் முறிகள் மூலம் பெறப்பட்டுள்ள குறுகிய காலக் கடன்களின் தொகை 2,097.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

நீண்டகாலக் கடன் தொகை 2613.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்த நிலைப்பாடு சம்பந்தமாக கருத்து வழங்கியுள்ள பொருளாதார நோக்குநர்கள், அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இவ்வாறு வரையறையற்று கடன்களைப் பெறுவதால் எதிர்காலத்தில் பாரதூரமான பொருளாதாரச் சிக்கல்கள் பலவற்றுக்கு வழிசமைக்கப்படுகிறது எனத் தெரிவித்துள்ளனர்.

(ம-22)

# ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை திருவிழா

காரைநகர்,டிசெ.18

காரைநகர் ஈழத்துச் சிதம்பர மார்கழித் திருவாதிரைத் திருவிழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கான விரிவான ஏற்பாடுகளை ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தாக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

நாளை புதன்கிழமை ஆரம்பமாக உள்ள திருவெம்பாவை திருவிழாவில் தினமும் காலை 7 மணிக்கு அபிஷேக ஆராதனைகளும் காலை 9 மணிக்கு விசேட பூசையும் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு திருவெம்பாவை ஓதலும் முற்பகல் 11.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா வரும் காட்சியும் இடம் பெறும்.

இந்த திருவாதிரை திருவிழாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பஞ்சரதபவனியும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இந்த திருவிழாக் காலங்களில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயச் சூழலில் ஒன்று கூட உள்ளனர்.



இதனை கருத்தில் கொண்டு காரைநகர் பிரதேச செயலகம், பிரதேசசபை பக்தர்களுக்குத் தேவையான குடிதண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து பாதுகாப்பு போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முன் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டுள்ளன.

திருவிழாக் காலங்களில் யாழ். நகரில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ் சேவைகள் இடம் பெறவுள்ளன.

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையால் பத்துத் தினங்களும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மணிவாசகர் சபையால் திருவாசக விழா நடத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-250)

# திவிநெகும சட்டத்தின் மூலம் மாகாண சபைகள் பலப்படும்

## இப்படிக் கூறுகிறார் பிரபா கணேசன்

திவிநெகும சட்டத்தின் மூலமாக மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் குறைக்கப்படும் என்ற கூற்றில் உண்மையில்லை.

மாறாக மாகாணசபை முறைமையை இச்சட்டமூலம் வலுப்படுத்தும்.

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மத்திய அரசு திவிநெகும சட்டமூலத்தைக் கொண்டுவருவதன் மூலம் மாகாண சபைகளின் அதிகாரத்தைக் குறைக்க முற்படுவதாக எதிர்க்கட்சிகள் கோஷமிடுவது பிழையானதாகும்.

திவிநெகும சட்டமூலத்தின் மூலம் எந்தவித உட்கட்டமைப்பு அபிவிருத்திகளையும் செய்ய முடியாது. பாதைகள் போடுவதும், பாலங்களை அமைப்பதும் திவிநெகும சட்டமூலத்தின் நோக்கமாகும்.

திவிநெகும திணைக்களத்தின் மூலமாக கிராமிய அபிவிருத்திப் பணிகளை கிராம மக்கள் மூலமாக கிராம மக்களின் வாழ்க்கையில் எழுச்சியை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். மாகாணசபையில் எந்தவித அதிகாரத்திலும் திவிநெகும திணைக்களம் தலையிட்டு போவதில்லை.

கடந்த வாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இடம் பெற்ற கலந்துரையாடலில் எமது கட்சியான ஜனநாயக மக்கள் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன தங்களது பிரதிநிதிகளுடன் கலந்து கொண்டன.

இந்தச் சந்திப்பின் போது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இச்சட்டமூலத்தை எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி நிறைவேற்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தின் மூலமாக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தச் சட்டமூலத்தின் மூலமாக கிராமிய மக்களுக்கு கிடைக்கவிருக்கும் நன்மைகளை விரிவான முறையில் எடுத்துரைத்தார்.

அதே போல் எந்தவொரு சமயத்திலும் மாகாணசபை அதிகாரங்களில் இச்சட்டமூலம் தலையிடாது என்பதைத் தெளிவுபடுத்தினார்.

எங்களது வேண்டுகோளுக்கிணங்க மாகாண பிரதான செயலாளர் களை திவிநெகும திணைக்களத்துக்குள் இணைத்துக்கொள்ளவும் இணக்கம் தெரிவித்தார்- என்றார். (ம)

# சிங்கப்பூர் வேலைவாய்ப்புக்கு ஆங்கில தேர்ச்சி இனி அவசியமில்லை

கொழும்பு,டிசெ.18

சிங்கப்பூரில் வேலைவாய்ப்புகளுக்காகச் செல்வோருக்கு ஆங்கில மொழி இனி அவசியம் இல்லை.

இதுவரை காலமும் சிங்கப்பூருக்கு வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் கட்டட நிர்மாணத்துறை வேலை வாய்ப்புகளுக்காகச் செல்வோருக்கு ஆங்கிலத்தில் உரையாடும் ஆற்றல் கட்டாயமாக்கப்பட்டிருந்தது.

இனிவரும் காலங்களில் இது அவசியப்படமாட்டாது என்று சிங்கப்பூர் மனிதவள அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுச் சேவைகள் செயற்பிரிவுக்குப் போன்றே வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி மற்றும் நலனோம்பு அமைச்சுக்கும் அது பற்றி தெரியப்படுத்தியுள்ளதாக சிங்கப்பூரின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் சங்கத்தின் தலைவி திருமதி கே.ஜயபிரேமா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து அந்த நாட்டுக்குச் செல்லும் ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு ஆங்கில மொழியறிவு அத்தியாவசியமானது என்று இலங்கையின் வெளிநாட்டுச் சேவைகளுக்கான செயற்பாட்டுப் பிரிவால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனை விரைவிலேயே நீக்கிக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக இலங்கையின் வெளிநாட்டுச் சேவைகள் மற்றும் நலனோம்பு அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம-22)

# நயினாதீவு ம.வி. பிரதான வீதிக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

நயினாதீவு மகா வித்தியாலய பிரதான வீதிக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த மின் இணைப்பை மேற்கொள்வதற்கு வசதியாக நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவல் சபையினர் இரண்டரை லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளனர் என்று வேலணை பிரதேச சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதான வீதிக்கு கடந்த பல வருடங்களாக வீதி விளக்குகள் இன்மையால் இரவில் பயணிப்போர் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் விருப்பப்படியே வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பு

## அமைச்சர் றிசாத் கருத்து

வவுனியா, டிசெ.18

வன்னி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மக்களின் விருப்பத்தின் படியே தெரிவு செய்யப்பட வேண்டும்.

வன்னிமாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

'வன்னி வசந்தம்' என்னும் தொனிப்பொருளில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா மாவட்டத்தில் சகல பிரதேசங்களும், எந்தவித பாகுபாடுகளுமின்றி அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இதில் இனம், மதம், பார்ப்பதில்லை, எங்கு தேவை இருக்கின்றதோ அங்கு முன்னுரிமைப்படுத்தி அபிவிருத்திகளைச் செய்கின்றோம்.



'வன்னி வசந்தம்' என்னும் தொனிப் பொருளில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் அபிவிருத்தி கூட்டம் நடைபெற்றது.

பிரதேசத்தில் அபிவிருத்திகளைச் செய்கின்ற போது, மக்களின் தேவைக்கு முன்னுரிமையளித்து சகல மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் உள்வாங்கி திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். இந்த மாவட்டம் இன்று அமைதியாக காணப்படுகின்றது. ஆனால் சிலருக்கு மீண்டும் பயங்கரவாதத்தைத் தோற்றுவிக்கத் தேவையாகவுள்ளது. அதற்கு இடம்கொடுக்க முடியாது.

ஜனாதிபதி தான் வன்னி மாவட்டத்துக்கான நிதிகளை நாம் கேட்கின்ற போதெல்லாம் ஒதுக்கித் தருகின்றார் என்பதை இங்குள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாவட்டத்தின் மின்சாரம், சுகாதாரம், வீதி, கல்வி, மக்களின் வாழ்வாதாரத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு நாம் நிதிகளை வழங்கி மாவட்டத்தை முன்னேற்றகரமான பாதைக்கு இட்டுச் செல்கின்றோம்.

எனவே சகலரும் மக்களுக்கான இந்த அபிவிருத்திகளை முன்னெடுக்க உதவிகளை வழங்குங்கள்-என்றார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் உட்பட மாகாண அமைச்சின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளும் அங்கு சமுகமளித்திருந்தனர். (வ-12)

## 3 வருடமாக பஸ்தரிப்பிடமின்றி தவிக்கும் முசலிப் பகுதி மக்கள்

மன்னார், டிசெ.18

பயணிகள் பஸ்தரிப்பிடம் இல்லாமல் கடந்த 3 வருட காலமாக மழையிலும் வெயிலிலும் சிறு பிள்ளைகளை வைத்துக்கொண்டு தங்கிநிற்க இடம் இல்லாமல் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக முசலி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட நிரந்தர சமாதானத்தின் பின்பு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அனைத்து மக்களும் மீளக் குடியமர்த்தப்பட்டனர். அதனைத்தொடர்ந்து கடந்த 2011 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்ற பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச செயலகம் என்பனவற்றின் நிர்வாகம் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது.

அரசால் செய்து கொடுக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதியினால் சீரான முறையில் போக்குவரத்தும் இடம்பெற்று வருகின்றது.

நாளாந்தம் மன்னாரிலிருந்து பயணிக்கின்ற பஸ்கள் பொற்கேணி, வேப்பங்குளம் மற்றும் சிலாவத்துறை ஆகிய பிரதேசங்களில் நிறுத்தி பயணிகளை ஏற்றிச்செல்கின்றன. கொழும்பு, புத்தளம் ஆகிய இடங்களுக்குச் செல்கின்ற பஸ்கள் சிலாவத்துறையினூடாகச் செல்கின்றன.

எனினும் பயணிகள் பஸ்தரிப்பிடம் இல்லாமல் கடந்த 3 வருட காலமாக மழையிலும் வெயிலிலும் சிறு பிள்ளைகளை வைத்துக்கொண்டு தங்கி நிற்பதற்கு இடம் இல்லாமல் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே பயணிகள் நலன் கருதி பஸ் தரிப்பிடத்தை அமைத்துத் தருமாறு முசலி பிரதேச சபையிடமும் இது சம்பந்தமான அதிகாரிகளிடமும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-12)

## மாற்றுத்திறனாளிகள் தொடர்பான செயலமர்வு



மன்னார்,டிசெ.18

மன்னார் மற்றும் வவுனியா ஊடகவியலாளர்களுக்கு 'கன்டிக்கப்' இன்டர்நஷனல் நிறுவனத்தின் ஊடாக மாற்றுத்திறனாளிகள் தொடர்பான செயலமர்வு வவுனியா புலோஸ் ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

ஊடகங்கள் வாயிலாக மாற்றுத்திறனாளிகளின் செய்திகளை வெளிப்படுத்தல் தொடர்பில் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் உள்ளீர்க்கப்பட வேண்டும், அபிவிருத்தியில் மாற்றுத்திறனாளிகள் பங்காளிகளாக உருவாக்கப்பட வேண்டும், மாற்றுத்திறனாளிகளுக்கான சட்டங்கள் மற்றும் கட்டடங்களை எதிர்காலத்தில் அமைக்கும் முறைகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன.

'கன்டிக்கப்' இன்டநஷனல் நிறுவனத்தின் வடபிராந்திய திட்ட முகாமையாளர் பிரேம் வளவாளராகக் கலந்துகொண்டு செயலமர்வை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (எ-12)

## முசலிப் பிரதேச அபிவிருத்திக்கு 281 மில்லியன்

மன்னார்,டிசெ.18

முசலிப் பிரதேச சபைக்கு 281 மில்லியன் ரூபா நிதியை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளதாக முசலிப் பிரதேச சபைச் செயலாளர் ஏ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

500 வீதி விளக்குகள், 450 மலசல கூடங்கள், முக்கியமான 10 வீதிகள், நீர்ப்பம்பிகள் கொள்வனவு மற்றும் காட்சிப்பூங்கா போன்ற திட்டங்களை நடைமுறைப் படுத்த முதல் கட்டமாக இந்த நிதி வழங்கப்படுகிறது.

குறித்த திட்டம் 2013 ஆம் ஆண்டு முதல் பகுதியில் நடைமுறைப்படுத்தி அறிக்கையிடவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-41)

## பரு. - துணுக்காய் இடையேயான போக்குவரத்துச் சேவை சீரில்லை

### அரச அதிபர்களுக்கு துணுக்காய் மக்கள் மனு

துணுக்காய், மாங்குளம், பருத்தித்துறை ஊடான போக்குவரத்தைச் சீர்செய்து தருமாறு துணுக்காய் பிரதேச பொதுமக்களால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும், முல்லை மாவட்ட அரச அதிபர், யாழ்.மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

போர்க்காலத்துக்கு முன்னர் அரச தனியார் சேவைகள் இரு தடவைகள் நடைபெற்றன. ஆனால் போருக்குப் பின்னர் 2010 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் முல்லை மாவட்ட தனியார் பஸ் சங்கத்தினரால் துணுக்காயில் இருந்து பருத்தித்துறை நோக்கிய சேவை நடைபெற்றது.

குறித்த சேவை பருத்தித்துறை தனியார் சங்கத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த ஒரு சில நாள்களாக அந்தச் சேவையும் தடைப்பட்டுள்ளது. குறித்த சேவை தடைப்பட்டுத் தற்போது பல மாதங்களைக் கடந்தும் தீர்வு எடுக்கப்படவில்லை.

போருக்கு முன்னர் மல்லாவியில் உற்பத்தியாகும் விவசாயப் பொருள்கள், பருத்தித்துறையில் உற்பத்தியாகும் பனை உற்பத்திப் பொருள்கள் உட்பட சிறுகைத்தொழில் பொருள்களையும் பெருமளவில் சந்தைப்படுத்தி வந்தோம். இவற்றைவிட அன்றைய காலத்தில் கடமையிலீடுபட்ட அரச உத்தியோகத்தர்கள் உரிய நேரத்துக்கு வருகை தந்தனர்.

சமாதானம் ஏற்பட்ட இந்தக் காலப் பகுதியில் இவை சாத்தியமற்று இருப்பது வேதனையைத் தருகின்றது. மேலும் தற்போது துணுக்காய் கல்வி வலயம், கிளிநொச்சி கல்வி வலயம் உட்பட அரச உத்தியோகத்தர்கள் தினமும் கடமைக்கு வந்து செல்வதால் அவர்களும் போக்குவரத்தில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே மாணவர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட பொது மக்களின் நலன் கருதி எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்தாவது சீரான முறையில் போக்குவரத்துச் சேவையை இடம்பெற வழிவகுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (வ-422)

## மன்னார் மாவட்ட பயிலுநர் பட்டதாரிகள் 172 பேருக்கு நியமனம்

மன்னார், டிசெ.18

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் மன்னார் மாவட்ட பட்டதாரி பயிலுநர்களை ஆள்சேர்ப்பதற்கான நிகழ்வு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 172 பட்டதாரிகளுக்கான நியமனங்கள் முதற்கட்டமாக வழங்கப்பட்டன.

அமைச்சர் றிசாத் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திர உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டு நியமனங்களை வழங்கினர். (வ-12)



அண்மையில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வன்னியின் புதுமாத்தளன், முல்லைத்தீவு பகுதிகளில் மீண்டும் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் [illegible] தலைமையில் உலர் உணவுப் [illegible] முல்லைத்தீவு [illegible] அரச அதிபர்களின் [illegible]

## நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத கிளிநொச்சி–கல்லாறு பிரதான வீதி

### பயணிப்போர் விசனம்

கிளிநொச்சி-கல்லாறு பிரதான வீதி கடந்த பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாத நிலையில் பெரியளவில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் குறித்த வீதியூடாக தினமும் பயணிக்கும் சுமார் 300 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு, ஏ-35 வீதியான சுண்டிக்குளம் சந்தியில் இருந்து கல்லாறு கிராமத்துக்குச் செல்லும் சுமார் 4 கி.மீ நீளமான பிரதான வீதி கடந்த பல வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மேற்படி கல்லாறு கிராமத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் இங்குள்ள பொதுமக்கள் தமது சொற்ப தேவைகளைப் பூர்த்தி செய்வதாயினும் பரந்தன் அல்லது கிளிநொச்சி, விசுவமடு ஆகிய பகுதிகளுக்கு இந்த வீதியூடாகவே செல்ல வேண்டும்.

குறித்த வீதி புனரமைக்கப்படாமையினால் மேற்படி வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே சம்பந்தப்பட்டோர் இதனைக் கவனத்தில் எடுத்து புனரமைக்க ஆவன செய்ய வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுவா பரீட்சார்த்த செய்கை யாழ். மாவட்டத்தில் ஆரம்பம்

அச்சுவேலி, டிசெ.18
யாழ்.மாவட்டத்தில் பரீட்சார்த்தமாகக் கறுவா பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேலணை, புங்குடுதீவு, மருதங்கேணி பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட விவ சாயிகள் மூலம் கறுவாப் பயிர்ச் செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கறுவாப் பயிர் அதற்கான இரசாயன உரப்பசளை என்பன வழங்கப்பட்டு பயிர்ச் செய்கை தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட கறுவாப் பயிர்ச் செய்கை எதிர்பார்த்த அளவுக்கு விளைச்சலைத் தரும் இடத்து கணிசமான அளவு விவசாயிகள் கறுவாப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு ஆர்வம் கொண்டுள்ளனர்.

கறுவாப் பயிர் நல்ல விளைச்சலை யாழ்.மாவட்டத்தில் தரும் என்று எதிர்பார்த்திருப்பதாகவும் இரண்டு வருடங்களில் கறுவா மரத்தில் இருந்து அறுவடையை மேற்கொள்ளலாம் என்றும் பரீட்சார்த்த பயிர்ச் செய்கைக்கு கடற்கரை சுவாத்தியம் உள்ள பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வீடுகளில் கறுவாப் பயிரை நட்டு வளர்க்க விரும்புபவர்கள் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டால் கறுவா நாற்றுக்களை பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களபாட விதான அபிவிருத்தி அதிகாரி இராமலிங்கம் சௌந்தரராஜன் தெரிவித்தார். (ம-11)



யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வருடாந்த அணி வகுப்பினை யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா பொலிஸ் அதிகாரிகள் சகிதம் பார்வையிடுகிறார். (ம-7)

## கோப்பாய் கோமானுக்கு நீர்வேலியில் சிலை

அச்சுவேலி, டிசெ.18
கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் முழு உருவச்சிலை நீர்வேலி வாழைக்குலைச் சங்க முன்றிலில் யாழ்.- பருத்தித்துறை பிரதான வீதியோரத்தில் நிறுவப்படவுள்ளது.

வன்னியசிங்கத்தின் 100 ஆவது பிறந்தநாள் நினைவாக கோப்பாய் பிரதேச வன்னியசிங்கம் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் சிலை நிறுவப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் ஒரேஒரு வாழைக்குலை உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகர் அமரர் வன்னியசிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

முழு உருவச்சிலை திறப்பு விழா வன்னியசிங்கம் நற்பணி மன்றத்தின் தலைவர் இ.சந்திரன் தலைமையில் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (ம-11)

## வலி.வடக்கு பிரதேச சபை 'பட்ஜெட்' நிறைவேறியது

யாழ்ப்பாணம், டிசெ.18
வலி.வடக்குப் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் சபையின் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை சபைத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு சபையில் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு சபை உறுப்பினர்களின் ஆலோசனை பெறப்பட்டது. அதன் பின்பு மக்கள் பார்வைக்காக 14 நாள்கள் வரவு- செலவுத் திட்டம் காட்சிப் படுத்தப்பட்டிருந்தது.

இதில் ஆட்சேபங்கள் எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை சபையில் வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-5)

## 50 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு

### விளைச்சலில் விவசாயிகள் பெரு நம்பிக்கை

அச்சுவேலி, டிசெ.18
இந்த வருடம் யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்குச் செய்கை 50 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த வருடத்திலும் பார்க்க இது இரு மடங்காகும். கடந்த வருடம் 22.5 ஹெக்ரெயர் நிலப் பரப்பில் செய்கை பண்ணப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் பெருமளவில் 'றெட் லைட்சேடா, கல்வைற் ரக விதை கிழங்குகளும் குறைந்தளவில் றெவாறா, அனோவா ரக விதை கிழங்குகளும் பயன்படுத்தப்பட் டுள்ளன.

விதை கிழங்கு 50 கிலோ கொண்ட பொதி 11 ஆயிரம் ரூபாவில் இருந்து 13 ஆயிரத்து 350 ரூபா வரை விலை போனபோதிலும் யாழ். மாவட்ட விவசாயிகள் பெரும் பொருட் செலவில் உருளைக் கிழங்கு உற்பத்தியை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டு மரபு வழியான கன்று அளவையில் ஆயிரம் கன்று நிலத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையை மேற்கொள்ள நான்கு பொதி விதை கிழங்கு தேவை. அத்துடன் நிலம் பண்படுத்தல் இரசாயன உரப்பசளை மற்றும் செலவுகள் உட்பட கிழங்கு நடுகை மட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் ஆயிரம் கன்று நிலத்துக்கு செலவாகியிருக்கும்.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கின் சுவை தனிரகமாக உள்ளதால் தம்புள்ள மத்திய சந்தையில் நல்ல விலை கிடைப்பது வழமையாக இருப்பதால் இந்த வருடம் நூறு வீதத்துக்கு மேல் அதிகரித்த அளவில் உருளைக்கிழங்கு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள ஒரு விவசாயி மட்டும் 40 பொதி விதை உருளைக்கிழங்கு கொள்வனவு செய்து நடுகை செய்துள்ளார். யாழ். மாவட்டத்தில் தற்போது மாரி மழை தொடர்பான காலநிலை முரண்பாடாகக் காணப்படுகின்ற போதிலும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நிலவும் பனிப்பொழிவோடு கூடிய காலநிலை உருளைக் கிழங்கு விளைச்சலுக்கு சாதகமாக இருக்கும்.

இந்த வகையில் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நம்பிக்கை வீண் போகாது என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-11-17)

## 2013 உத்தேச வருமானத்தில் 60 வீதம் அபிவிருத்திப் பணிக்கு

### சாவகச்சேரி நகரசபை தீர்மானம்

தென்மராட்சி, டிசெ.18
சாவகச்சேரி நகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான உத்தேச மொத்த வருமானத்தில் அறுபது சதவீதத்துக்கு மேற்பட்ட நிதி, அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

சபை நிதியிலிருந்து சபைத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரால் வழங்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள் உட்பட்ட திட்ட மதிப்பீடுகளுக்கு 2 கோடி 68 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து ஏழு புனரமைப்பு வேலைகள் உட்பட எட்டு வேலைத்திட்டங்களுக்கு ஒரு கோடி 40 லட்சம் ரூபாவும் 'நெல்சிப்' வேலைத் திட்டத்தில் 5 வீதி புனரமைப்புக் கென நான்கு கோடி 20 லட்சம் ரூபாவும் அரச நன்கொடை நிதியில் 50 லட்சம் ரூபாவும் வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

சபை உறுப்பினர்களால் வழங்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களாக எல்லை வீதி, கச்சாய் வீதி-வடக்கு முதலாம் ஒழுங்கை, சங்கம் வீதி, சண்முகம் வீதி, காண்டைக்காடு வீதி, ஆறுமுகம் வீதி, ஏகாம்பரம் வீதி, பாலையடி விநாயகர் வீதி, செம்மண் தோட்ட ஒழுங்கை, கார்த்திகேசு வீதி வடக்கு ஒழுங்கை, முதலியா வெளி ஒழுங்கை, உதயசூரியன் வீதி, தாளையடியம்மன் கோயில் வீதி, பொலிஸ் நிலையவீதி, சிவன் கோயில் வீதி, புகையிரத நிலைய வீதி, மகிழங்கேணி வீதி, பருத்தித்துறை வீதி முதலாம் ஒழுங்கை, கல்லடிமூட்டு வீதி, நுணாவில் கல்வயல் வீதி, சங்கம் ஒழுங்கை, வீரக்கொடியார் வீதி, தாளையடி அம்மன் இரண்டாம் ஒழுங்கையும் யாழ்.வீதி முதலாம் ஒழுங்கையும் இணைப்பு வீதி, யாழ்.வீதி வடக்கு ஒழுங்கை ஆகியன புனரமைக்கப்பட வுள்ளன.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தில் மாவடிப்புலம் வீதி, சாவகச்சேரி வடக்கு எல்லை வீதி, விளையாட்டு மைதானம் புனரமைப்பு, நகர மண்டபக் கிணறு, திண்மக் கழிவு சுத்திகரிப்பு கொட்டகை அமைத்தல், செல்வ விநாயகர் சனசமூக நிலைய நிர்மாணம், மதுவன் சனசமூக நிலைய நிர்மாணம் ஆகியவையும் நெல்சிப் வேலைத் திட்டத்தில் நுணாவில்-கல்வயல் வீதி, சப்பச்சி மாவடி பிள்ளையார் வீதி, தாளையடி அம்மன் கோயில், 2 ஆம் ஒழுங்கை, வங்களா வீதி, மாவடிப் பிள்ளையார் வீதி ஆகியன திருத்தப்பட வுள்ளன.

அரச நன்கொடை நிதியில் சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் புதிய மீன் சந்தை அமைக்கவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சபை நிதியில் நகர்ப் பகுதியில் ஒரு மில்லியன் ரூபா செலவில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கவும் மதிப்பிடப் பட்டுள்ளது என்று நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ம-9)



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு இயேசு பிறப்பு அலங்காரப் பொருள்களான பாலன் பிறப்புச் சொரூபங்கள், கிறிஸ்மஸ் மரங்கள், அலங்கார மின்விளக்குகள் விற்பனை யாழ். நகரில் களை கட்டத் தொடங்கியுள்ளது. பல விற்பனை நிலையங்களிலும் இவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ம-135)

## வேதாள வெங்காய உண்மை விதை உற்பத்தி

யாழ்ப்பாணம், டிசெ.18
வேதாள வெங்காய உண்மை விதை உற்பத்தி இந்த வருடமும் மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த வருடம் 15 விவசாயிகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட உண்மை வெங்காய விதை உற்பத்தி இந்த வருடம் 20 விவசாயிகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதை உற்பத்திக்கான விதை வெங்காயம் மற்றும் விதைக்கான பூவை பாதுகாப்பதற்கான வலை மற்றும் உரப் பசளை என்பன 50 வீத மானிய விலையில் வழங்கப்பட்டு தொழில்நுட்ப ஆலோசனையும் யாழ். மாவட்ட விவசாயத் திணைக் களத்தால் மேற்கொள்ளப் படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட 20 விவசாயிகளுக்கும் தலா 100 கிராம் விதை உற்பத் திக்கான வேதாள வெங்காயம், 25 மீற்றர் வலை என்பன 50 வீத மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும்போது பொருத்தமான முறையில் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் உற்பத்தி செய்யும் உண்மை விதை விவ[illegible] செய் யப்பட்டு நியாய விலைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

உண்மை வெங்காய விதையைப் பயன்படுத்தி நாற்று மேடை அமைக்கப் பட்டு வெங்காய நாற்றுக் களை மேடையில் குறிப் பிட்ட தினங்களுக்கு பராமரித்து பின்னர் நாற்றைத் தோட்டத்தில் நடுகை செய்ய வேண்டும்.

இதன் மூலம் உற்பத்திச் செலவு மிகக் குறைவாக இருப்பதோடு தரமான வேதாள வெங்காயத்தை உற்பத்தி செய்ய முடியும். அத்துடன் விவசாயிகள் கூடுதலான வருமானத்தையும் பெற முடியும்.

வெங்காயப் பூவை செயற்கைமுறைக் கருக் கட்டல் செய்வதன் மூலம் விதையின் முளை திறன் வீதத்தை அதிகரிக்க முடியும் என்று யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள பாட விதான அபிவிருத்தி அதிகாரி தெரிவித்தார். (ம-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய உளவு அமைப்புகள் மீது மாலிக் பரபரப்பான குற்றச்சாட்டு

## மும்பைத் தாக்குதலைத் தடுக்க தவறியுள்ளனவாம்



டில்லி, டிசெ.18

''மும்பை பயங்கரவாத தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதில் இந்திய உளவு அமைப்புகள் தோல்வி அடைந்து விட்டன'' என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் பரபரப்பான குற்றச்சாட்டை தெரிவித்தார்.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் இந்தியாவில் மூன்று நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருடன் இருதரப்பு உறவு குறித்து பேச்சு நடத்தினார். இந்தநிலையில் அவர், நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற ஒரு விழாவில் பேசுகையில் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தான்-அமெரிக்க பயங்கரவாதி டேவிட் ஹெட்லி, அல்-குவைதா பயங்கரவாதி இலியாஸ் காஷ்மீரியுடனும், அபு ஜிண்டால், ஜபியுல்லா, பாஹிம் அன்சாரி ஆகிய மூன்று இந்திய பயங்கரவாதிகளுடனும் இணைந்து மும்பைத் தாக்குதலுக்கு சதித் திட்டம் தீட்டினார். அவர்கள் இதற்காக இந்தியாவில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்துள்ளனர். எனவே, மும்பை பயங்கரவாதத் தாக்குதல் என்பது அரசு ஆதரவு பெற்ற நடவடிக்கை அல்ல. இது எந்த அரசையும் அல்லது நாட்டையும் சாராத சில தனி நபர்களின் செயலாகும். ஹெட்லி, பாகிஸ்தான் இராணுவத்தில் இருந்து விலகி லஷ்கர் அமைப்பில் சேர்ந் தவரான இலியாஸ் காஷ்மீரி, மூன்று இந்திய பயங்கர வாதிகள் என்ற மூவர் குழுக் கூட்டணியின் நாசவேலை தான் இது.

இந்தியாவைச் சேர்ந்த உளவு அமைப்புகள் இதை முன் கூட்டியே கண்டறிந்து தடுக்கத் தவறி விட்டன. எனவே மும்பை பயங்கரவாத சம்பவத்தை ஒரு நாட்டின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட சம்பவமாக கூறுவது தவறு. எந்தெந்த இடத்தில் தாக் குதல் நடத்த வேண்டும், எங்கு பதுங்க வேண்டும் என்பது உட்பட அனைத்து ஏற்பாடுகளையும் சம்பந் தப்பட்ட இடங்களுக்கே நேரில் சென்று சதித்திட்டம் தீட்டியதுடன் அந்த இடங்களைப் புகைப் படங்களும் எடுத்துள்ளனர்.

அபு ஜுண்டால் இந்திய உளவு நிறுவனம் ஒன்றுக்காகவும் பணியாற்றியுள்ளான். பயங்கரவாதிகளின் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் இந்திய உளவு அமைப்புகளுக்கு தெரியாமல் போனது தான் ஆச்சரி யம். இந்தியா - பாகிஸ்தான் நாடுகள் இடையே சரியான முறையில் தகவல் பரிமாற்றம் இல்லாததும், இதற்கு முக்கிய காரணம்.

பயங்கரவாதம் தொடர்பான எந்தத் தகவல் களையும் மறைக்க வேண்டாம் என்பதே இந்திய அதிகாரிக ளுக்கு நாம் விடுக்கும் கோரிக்கை. இதுதொடர்பான தகவல் களை மறைப்பது பயங்கரவாதசம்பவங்கள் தொடர்வதற்கு தான் வழி வகுக்கும்-என்றார்.

**இந்தியா கண்டனம்**

பயங்கரவாதி அபு ஜுண்டால், இந்திய உளவு நிறுவனத்துக்காகப் பணிபுரிந்ததாக ரகுமான் மாலிக் கூறுவது வேடிக்கையாக உள்ளது. இதனை வன்மை யாகக் கண்டிக்கின்றோம் என்று இந்திய உள்துறை செயலர் தெரிவித்துள்ளார். (வ)

## சியாச்செனில் பனிச்சரிவு 6 ஜவான்கள் சாவு

உலகின் மிக உயர்ந்த போர் பிரதேசமான சியாச்சென் பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 6 ஜவான்கள் உயிரிழந்தனர்.

ஜம்மு- காஷ்மீரில் மிக உயர்ந்த பனிப்பிரதேசமான சியாச்சென் பகுதியில் நேற்று திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தில் ஐந்து ஜவான்கள் உயிரிழந்த தாகவும், ஒருவர் காணாமல் போனதாகவும் இராணுவ வட்டார தகவல்கள் தெரி விக்கின்றன.

இதையடுத்து சியாச் சென் பகுதிக்கு மீட்புப் படையினர் விரைந்துள்ளனர். (வ)

## சீனா தான் சவால் பாகிஸ்தான் அல்ல

**வெளியுறவு அமைச்சர் கருத்து**

இந்தியாவுக்கு பாகிஸ்தானை விட சீனாதான் பெரிய சவால் என்று மத்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

மியான்மரில் 3 நாள் பயணம் மேற்கொண்ட பின் கடந்த ஞாயிற்றுக் கிழமை குர்ஷித் நாடு திரும்பினார். முன்னதாக சிறப்பு விமானத்தில் அவர், பி.டி.ஐ. செய்தியாளருக்கு பேட்டி அளித்தார். இதன் போது சீனாவுடன் இருக்கும் எல்லைத் தகராறா, பாகிஸ்தானுடன் நிலவும் நம்பிக்கையின்மையா, எது பெரிய சவால்? என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு குர்ஷித் பதிலளிக்கையில்,

உலகளாவிய எமது பார்வை என்ற ரீதியில் சீனா மிகவும் முக்கியமானது. பொருளாதாரம், ஸ்திரத் தன்மை என்ற ரீதியிலும் அந்த நாடு முக்கியமானது. சீனாவுடன் நாம் பலதரப்பு உறவுகளைக் கொண்டுள்ளோம். ஆசியாவிலும் ஏனைய பகுதிகளிலும் சீனா முக்கிய மான கூட்டாளியாக விளங்க முடியும் -என்றார்.



பாகிஸ்தானுக்கு எதிரான போரில் உயிர்த்தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி, இராணுவத் தளபதி பிக்ராம்சிங்.

## எழுத்தாளர் ருஷ்டியின் திரைப்படத்தை இந்தியாவில் வெளியிட காங். எதிர்ப்பு




சென்னை, டிசெ.18

பிரபல நாவலாசிரியர் சல்மான் ருஷ்டியின் எழுத்தில் உருவாகியிருக்கும் ஆங்கிலப் படத்தை இந்தியாவில் வெளியிடத் தடை விதிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

பிரபல நாவலாசிரியர் சல்மான் ருஷ்டியின் 'தி மிட்நைட்ஸ் சில்ட்ரன்' என்ற நாவலையே ஆங்கிலத்தில் படமாக எடுத்துள்ளனர். குறித்த திரைப்படத்தில் ஸ்ரேயா சரண், சித்தார்த், அனுபம் கேர், சபானா ஆஸ்மி உள்ளிட்டோர் நடித் துள்ளனர். தீபா மேத்தா இயக்கியுள்ளார்.

கனடாவின் டொரண்டோ திரைப்பட விழா உள்ளிட்ட பல்வேறு திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்ட இப் படத்தைப் பார்த்தவர்கள் சிறப்பாக வந்திருக்கிறது என்று பாராட்டியுள்ளனர். ஆனால் படத்தில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை மோசமானவராகக் காட்டியுள்ளனர் என்று காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

மேற்படி திரைப்படத்தில் இந்திய வரைபடத்தில் காஷ்மீர் இல்லாமல் காண்பிக்கப்பட்டுள்ளமை அரசியல் தலைவர்களைக் காயப்படுத்தியுள்ளது என்று தெரிகிறது.

இந்தநிலையில் குறித்த திரைப்படத்தை இந்தியாவில் வெளியிடத்தடை விதிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

**இந்துக் கடவுளர் பதித்த சேலை அணிந்த விவகாரம்**

## குஷ்பு வீட்டை முற்றுகையிடுவதற்கு முயன்ற இந்துக் கட்சியினர் கைது

சென்னை, டிசெ.18

இந்துக் கடவுள்கள் படம் போட்ட சேலையை அணிந்து சினிமா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நடிகை குஷ்புவைக் கண்டித்து அவரது வீட்டை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த இந்து மக்கள் கட்சியினர் முயன்றனர்.

ஹைதராபாத்தில் அண்மையில் நடைபெற்ற சினிமா இசை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட குஷ்பு, ராமர், அனுமன் படம் பதித்த சேலையை அணிந்திருந்தார்.

இந்துக்கள் மதிக்கும் கடவுள்களின் படங்களைப் பதித்து செய்த சேலையை மார்பில் அணிந்து வந்து இந்துக்களை இழிவுபடுத்தி விட்டார் குஷ்பு என்று உடனடியாக எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன.

இந்த நிலையில் சென்னையில் உள்ள குஷ்புவின் வீட்டை முற்றுகையிட்டு இந்து மக்கள் கட்சியினர் போராட்டம் நடத்த முயன்றனர். அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்திக் கைது செய்து வெளியேற்றினர்.

எனினும் தங்களது போராட்டம் கைவிடப்பட மாட்டாது என்றும் குஷ்பு உடனடியாக மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் பெரும் போராட்டம் நடத்தப்படும் என்றும் அவர்கள் எச்சரித்திருந்தனர். (வ)

## சந்திராயன் 2 செயற்கைக்கோள் அடுத்த வருடம் விண்ணுக்கு

**இஸ்ரோ தலைவர் தெரிவிப்பு**

டில்லி, டிசெ.18

2014 ஆம் ஆண்டில் சந்திராயன்- 2 செயற்கைக் கோள் விண்ணில் ஏவப் படும் என்றும் அதற்கான ஆயத்தப் பணிகள் தீவிரமடைந்துள்ளன என்றும் இஸ்ரோ தலைவர் ராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுகுறித்து சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

2014 ஆம் ஆண்டில் சந்திராயன் 2 செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்படும். அதற்கான ஆயத்தப் பணிகளை விஞ்ஞானிகள் மும்முரமாகச் செய்து வருகின்றனர். சந்திராயன் 1 முழுமையான இந்தியாவின் தயாரிப்பில் உரு வானது.

அதேபோன்று தற்போது சந்திராயன் 2 உம் உருவாகும்.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில், பி.எஸ்.எல்.வி.சி. 20 செயற்கைக் கோளும், ஜி.எஸ்.எல்.வி. டி. 5 செயற்கைக்கோளும் ஏவப்படும். செவ்வாய்க் கிரகத்தை சுற்றி ஆய்வு செய்யும் செயற் கைக்கோள் [illegible] டுள்ளது- என்றார். (வ)

## செய்தியாளருக்கான நுழைவுச் சீட்டில் தீவிரவாதி தாவூத் இப்ராகிமின் படம்




மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவையின் குளிர் காலக் கூட்டத்தொடருக் காக, செய்தியாளர்களுக்கு வழங்கப்படும் நுழைவுச் சீட்டில் மும்பை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடைய தீவிரவாதி தாவூத் இப்ராகிம் படம் இருந்தது பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது.

நாக்பூரில் உள்ள விதான் பவனில் மகாராஷ்டிரா சட்டப்பேரவையின் குளிர் காலக் கூட்டத்தொடர் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. சட்டப்பேரவை நிகழ்வுகள் குறித்து செய்தி சேகரிக்கச் செல்லும் பத்திரிகையாளர்களுக்கு நுழைவு அடையாள அட்டை வழங்கப்படுவது வழக்கம்.


இவ்வாறு செய்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட நுழைவுச் சீட்டு ஒன்றில், மும்பை குண்டுவெடிப்பு சம்பவத்தில் தொடர்புடைய தீவிரவாதி தாவூத் இப்ராகிம் படம் ஒட்டப்பட்டு அதில், சட்டப்பேரவை முத்திரையும் குத்தப்பட்டுள்ளது. கடந்த 10 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட 2246 எண் கொண்ட குறித்த நுழைவுச் சீட்டில் சட்டப்பேரவைச் செயலாளர் மற்றும் முதன்மை பாதுகாப்பு அதிகாரி ஆகியோரின் கையொப்பங்களும் உள் ளன. இந்தச் சம்ப வம் அங்கு அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது.

சட்டப் பேரவை பாதுகாப்பில் துளியும் கவனம் செலுத்தாமல், நுழைவுச்சிட்டை கேட்ட செய்தியாளர் பற்றி எதுவும் விசாரிக்காமல் இந்த சிட்டை விநியோகிக்கப்பட்டுள்ளது என்று குற்றம்சாட்டுகின்றனர் எதிர்க்கட்சியினர். இச்சம்பவம் சட்டப்பேரவை அலுவலர்கள் மற்றும் பாது காப்பு அதிகாரிகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.(வ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஐ லவ் யூ மம்’

**உயிரிழக்க முன்னர் 6 வயதுச் சிறுவனின் உருக்கமான கடிதம்.**




நியூயோர்க், டிசெ.18
அமெரிக்காவில் ஆரம்பப் பாடசாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 6 வயதுச் சிறுவன், தனது தாய்க்குக் கடைசியாக கடிதம் ஒன்றை எழுதியியுள்ளான்.

அமெரிக்காவில் கனெக்டிகட் நகரில் உள்ள சாண்டி ஹுக் பள்ளியில் ஆடம் லான்சா நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 20 குழந்தைகள் துடிதுடித்து உயிரிழந்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் பலியான 6 வயதுச் சிறுவன் பிரையனும் உயிரிழந்தான். பிரையன் சாகும் முன்பு தனது புத்தகத்தில் தாய்க்கு சிறு கடிதமொன்று எழுதி வைத்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில், ‘ஐ லவ் யூ மம். நான் சந்தோஷமாக இருக்கின்றேன். நல்ல மகனாக இல்லாததற்காக மன்னிக்கவும். நான் சொர்க்கத்தில் இருந்து உங்களை நேசிப்பேன்’’- என்று எழுதியுள்ளான்அந்தச் சிறுவன்.



உயிரிழந்த சிறுவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் உறவுகள்...

## பப்புவா— நியூகினியாவில் நிலநடுக்கம்

மெல்பேர்ன், டிசெ.18
ஆஸ்திரேலியா அருகே பசிபிக் கடலில் உள்ள பப்புவா-நியூகினியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிச்டர் அளவு கோலில் 6 ஆக இந்த நிலநடுக்கம் பதிவானதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிலநடுக்கம் ஏற்பட்ட நேரத்தில் வீடுகளில் உள்ள பொருள்கள் வீழ்ந்ததால் மக்கள் பதற்றம் அடைந்து வீடுகளை விட்டு வெளியேறினர். நிலநடுக்கத்தில் சேதங்கள் ஏதும் ஏற்பட்டனவா என்பது குறித்த தகவல்கள் தெரியவரவில்லை. பூமிக்கு அடியில் 35கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 1,000ஐ தாண்டி விட்ட ‘போபா’ உயிரிழப்புகள்

### தொடர்ந்தும் உடல்கள் மீட்பு



‘‘போபா புயலால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்கள் 1000 ஐ தாண்டியது. மேலும் 850 பேரைக் காணவில்லை. மீட்புப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இந்த எண்ணிக்கை இன்னமும் அதிகரிக்கலாம். நேற்றுமுன்தினம் உடைந்த கட்டடங்கள் மற்றும் வீடுகளுக்கு அடியில் புதையுண்டு இருந்த அதிகளவு உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.’’ என்று பிலிப்பைன்ஸ் சிவில் பாதுகாப்புப் பொறுப்பாளர் பெனிட்டோ ராமொஷ் தெரிவித்துள்ளார்.

போபாவால் பிலிப்பைன்ஸின் தெற்கே உள்ள மின்டனாவோ தீவு அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. காணாமற்போனவர்களில் அதிகமானோர் புயல் தாக்க முன்னர் மின்டனாவோவில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களாகும்.

உயிரிழப்புக்கள் குறித்து பிலிப்பைன்ஸின் தேசிய இடர் நிவாரண அமைப்பு தகவல் அளிக்கையில் 1020 பேர் இறந்துள்ளனர் என்று உறுதிப்படுத்தியது.

## ஜப்பான் பொதுத் தேர்தல்

### எதிர்க்கட்சி பெரு வெற்றி



டோக்கியோ, டிசெ. 18
ஜப்பானில் பொதுத்தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 480 ஆளுநர்கள் பதவிக்காக நடைபெற்ற இந்தத் தேர்தலில் தற்போதைய பிரதமர் யோஷிஹோகோ நோடா தலைமையிலான ஜப்பான் ஜனநாயகக் கட்சி படுதோல்வியைச் சந்தித்துள்ளது. எதிர்கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சி 300 இடங்களைப் பெற்றுப் பெரு வெற்றி பெற்றுள்ளது.

ஜப்பான் பொருளாதாரத்தில் புதிய சீர்திருத்தங்களை ஏற்படுத்துவோம் என்ற முழக்கத்துடன், இந்த தேர்தலை சந்தித்த எதிர்க்கட்சியான லிபரல் ஜனநாயக கட்சி, பல தொகுதிகளில் முன்னிலை வகித்து வெற்றி வாய்ப்பை நெருங்கி உள்ளது. 480 இடங்களைக் கொண்ட ஜப்பான் நாடாளுமன்றத்தில், கடந்த தேர்தலில் 230 இடங்களை கைப்பற்றிய ஜப்பான் ஜனநாயகக் கட்சி, இந்த முறை 57 இடங்களை மட்டுமே பெற்று படுமோசமான தோல்வியைச் சந்தித்துள்ளது.

118 உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சியாக செயல்பட்ட லிபரல் ஜனநாயக கட்சி, இந்த தேர்தலில் 300 இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாக டோக்கியோ ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜப்பான் புனரமைப்பு கட்சி என்ற புதிய கட்சி 54 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. அந்தக் கட்சியுடன் கூட்டணி அமைத்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்ற லிபரல் ஜனநாயகக் கட்சி தலைவர், ஷின்சோ அபே பேச்சுக்களை நடத்தி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. வெற்றி பெற்றுள்ள ஷின்சோ அபே ஜப்பானின் 7ஆவது பிரதமராக விரைவில் பதவியேற்பார்.

# சிரிய வன்முறைகள்; எச்சரிக்கிறது ஐ.நா.

## பொதுமக்கள் மீதான தாக்குதலை உடன் நிறுத்துமாறு வலியுறுத்து

நியூயோர்க், டிசெ.18
‘‘சிரியாவில் வன்முறைகள் மோசமான அளவில் அதிகரித்துள்ளன. சிரிய இராணுவம் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான ஏவுகணைத் தாக்குதலை மேற்கொள்கிறது. இதன் காரணமாக பொதுமக்களின் உயிரிழப்புகள் வெகுவாக அதிகரித்துவருகின்றன. இது ஓர் ஆபத்தான விடயம். பொதுமக்கள் மீது அல்லது பொதுமக்கள் நிலைகொண்டுள்ள பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதைப் போர்க்குற்றமாகவே கருதமுடியும்.’’- என்று தெரிவித்துள்ளார் ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கீ மூன்.



கடந்த சனிக்கிழமை டமஸ்கஸ் அருகே சிரிய இராணுவத்தின் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன.


இது தொடர்பாக பான் கீ-மூனின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாவது:-

‘‘ஐ.நா. பொதுச் செயலாளர் சிரிய விடயங்களை உன்னிப்பாக அவதானித்து வருகிறார். கடந்த சில நாள்களாக உயிரிழப்புகளின் எண்ணிக்கை வியத்தகு அளவில் அதிகரித்துள்ளது. இது ஓர் ஆபத்தான விடயமாகும். சிரிய இராணுவம் பொதுமக்கள் மீது நீண்ட தூர இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்துவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் நிலைகள் மீது சிரிய இராணுவம் ஏவுகணை மற்றும் விமானத் தாக்குதல் நடத்தியமைக்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன. இது அசாத்துக்கு நெருக்கடிகளை உருவாக்கும்.’’ என்று தெரிவித்தார்.

இதேவேளை, நேட்டாவின் அமெரிக்கப் படைத் தளபதி துருக்கியின் எல்லைப் பகுதிக்கு விரைந்துள்ளார். ஏவுகணை எதிர்ப்பு நடைமுறையை செயற்படுத்தும் நோக்கிலேயே அவர் அங்கு சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்மூலம் சிரியாவின் ஏவுகணைகளை வானில் வைத்து அழிக்க முடியும் என்றும் கூறப்பட்டது. துருக்கி எல்லைப்பகுதி யில் 400 அமெரிக்கப்படை வீரர்களும் நிலைகொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்புகள்

### 5 பேர் சாவு; 25 மேற்பட்டோர் காயம்



பாக்தாத், டிசெ. 18
ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்றுமுன்தினம் நடந்த தொடர் வெடிகுண்டு தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். பாக்தாத்திலிருந்து 250 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிர்குக் நகரில் வானொலி நிலையம், ஷியா மசூதி உள்பட 7 இடங்களில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன.

இந்த சம்பவங்களில் இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளனர். 25இக்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த தாக்குதத்களுக்கு எந்த இயக்கமும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

## பிஜியைத் தாக்கியது சூறாவளி குட்டித் தீவுகள் கடலில் மூழ்கும்?

சுவா, டிசெ.18
பசிபிக் கடலில் உருவாகியுள்ள சூறாவளி பிஜி தீவை மிகக் கடுமையாக தாக்கி உள்ளது. புயல் காரணமாக பிஜி தீவை சுற்றியுள்ள குட்டித் தீவுகள் மூழ்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பசிபிக் கடலில் மையம் கொண்டுள்ள புயலால் பிஜி தீவில் 300 கிலோமீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று வீசுகிறது. இதனால் அந்த நாட்டுக்கான விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

புயல் காரணமாக 4 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புயலைத் தொடர்ந்து பலத்த மழை பெய்வதால் மலைப் பகுதிகளில் நிலச் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் மக்கள் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ளத் தேவையான உதவிகளை வழங்கும்படி, பிரான்ஸ் மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகளிடம் பிஜி தீவின் இரா[illegible] [illegible]னிமராமா கோரியுள்ளார்.

## அரசமைப்பு திருத்தத்தை ஆதரிக்கும் எகிப்தின் முதல்கட்ட வாக்குப் பதிவு

கெய்ரோ, டிசெ.18
எகிப்தின் சர்ச்சைக்குரிய அரசமைப்பு திருத்தம் குறித்த மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பின் முதலாவது கட்ட வாக்களிப்பின் அதிகார பூர்வமற்ற முடிவுகள் அங்கீகரிக்கப்படும் என்று சமிக்ஞை காட்டுகின்றன.



இரண்டாவது கட்ட வாக்களிப்பு மிகவும் பழமைவாத கிராமப் புறங்களில் எதிர் வரும் சனிக்கிழமை நடக்கவிருக்கின்றது.

அதன் பிறகே அதிகார பூர்வ முடிவுகள் வெளியாகும். ஒப்பீட்டளவில் அமைதியாக நடந்த முதலாவது கட்ட வாக்களிப்பில், வாக்களிப்பு வீதம் மிகவும் அதிகமாகக் காணப்பட்டது.

அதேவேளை, வாக்களிக்கும் தினத்தன்று எதிர்க்கட்சியான வாப்ட் கட்சியின் தலைமை அலுவலகம் தாக்குதலுக்கு உள்ளானது. அந்தத் தாக்குதல் குறித்து கடும்போக்கு இஸ்லாமியவாதிகள் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது.

புதிய அரசமைப்பை ஜனாதிபதி முர்சியும், அவரது முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியும் ஆதரிக்கின்றன. அது மிகவும் கடுமையாக இஸ்லாமியத் தன்மை கொண்டது என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருது வழங்கும் நிகழ்வில் கேத்



லண்டன், டிசெ.18

பிரிட்டன் இளவரசர் வில்லியமின் மனைவி கேத் இரு வாரங்களுக்கு பின் முதன் முதலாக விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டார்.

கேத் கர்ப்பம் தரித்துள்ளதாக அறிவிக்கப்பட்ட பின்னர் எந்தப் பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவில்லை.

கேத் கடந்த இருவாரங்களுக்கு முன் மருத்துவமனையில் தங்கி வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் எந்தவொரு பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் நேற்று முன்தினம் நடைபெற்ற விளையாட்டு வீரர்களுக்கான விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டார். இந்த விருது வழங்கும் விழா செயின்ட் ஜேம்ஸ் மாளிகையில் நடந்தது.

# சுவிஸில் கறுப்புப் பணம் பதுக்கமுடியாது விரைவில் வரவிருக்கிறது தடைச் சட்டம்

சூரிச், டிசெ.18

தமது நாட்டு வங்கிகளில் கறுப்புப் பணத்தை பதுக்க முடியாதபடி தடைச் சட்டம் கொண்டு வரப்பட உள்ளது என்று சுவிற்ஸர்லாந்து அரசு தெரிவித்துள்ளது.




சுவிற்ஸர்லாந்து கறுப்புப் பணம் பதுக்குவோர்களின் புகலிடமாக உள்ளது என்று உலக நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன.

இதன் காரணமாகவே இந்தத் தடைச்சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தடைச் சட்டத்திற்கான வரைவு பிரேரணையை எதிர் வரும் ஆண்டில் வழங்குமாறு சுவிஸ் நிதி அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்தால் வங்கிகள் மட்டுமல்லாது சுவிற்ஸர்லாந்தில் நிதி நிறுவனங்கள் உட்பட எந்த ஒரு அமைப்பும் கணக்கில் வராத பணத்தை எந்த நாட்டில் இருந்தும் பெற முடியாது நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ரூ.2770 கோடி செலவில் 'அரண்மனை' விமானம்

### அரேபிய சவூதி இளவரசருக்கு

ரியாத், டிசெ. 18

சவூதி அரேபியா இளவரசருக்கு ரூ.2770 கோடி செலவில் அரண்மனை வடிவிலான பறக்கும் விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் வளம் கொழிக்கும் சவூதி அரேபியாவின் இளவரசர் அல்வாலீத் பின் தலால். இவர் சவுதி அரேபியாவின் கோடீசுவரர் ஆவார்.

இவர் அதிநவீன ஏ380 சூப்பர் ஜம்போ விமானத்தை விலைக்கு வாங்கியுள்ளார். அதை அரண்மனை போன்று சகல வசதிகளுடன் மிக பிரமாண்டமாக மாற்றியமைத்து வருகிறார். அதற்கான செலவு ரூ.2770 கோடி. இதை பறக்கும் அரண்மனை என்று அழைக்கின்றனர்.

இந்த விமானம் கடந்த 2009ஆம்



ஆண்டு வாங்கப்பட்டு அரண்மனை போன்று மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. அதற்கான பணிகள் 2013 ஆம் ஆண்டு முடிவடையவுள்ளது.

பறக்கும் அரண்மனை வடிவிலான இந்த விமானத்தில் 4 படுக்கைகள், மிகப் பெரிய அளவிலான படுக்கைகள் கொண்ட 5 அதி நவீன அறைகள், பிரார்த்தனை அறை, கணினி வசதிகளுடன் கூடிய வரவேற்பறை, 'ரோல்ஸ் ரோய்' கார் நிறுத்தும் சொகுசு அறை ஆகியவை உள்ளன.

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெர்ரி?

நியூயோர்க், டிசெ.18

அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் பதவிக்கு செனட்டர் ஜோன் கெர்ரியை ஜனாதிபதி ஒபாமா பரிந்துரைக்க போவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஓய்வு பெறுவதையடுத்து அவரது பதவிக்கு செனட் வெளிவிவகார குழுவின் தலைவராகவும், மசாசூசெட்ஸ் செனட்டராகவும் இருக்கும் ஜான் கெர்ரியை (வயது 69) ஜனாதிபதி ஒபாமா பரிந்துரைக்கவிருக்கிறார்.

தனக்கு பேருதவியாக உள்ள கெர்ரியை வெளிவிவகாரத் துறை அமைச்சராக அடுத்த வாரம் ஒபாமா பரிந்துரைப்பார் என்று தெரிகிறது.



ஒபாமாவின் பரிந்துரையை செனட் ஏற்றுக் கொண்டால் வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி கெர்ரி வெளிவிவகாரத்துறை அமைச்சராகப் பதவி ஏற்பார்.

இந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஜோன் கெர்ரி, ஒபாமாவுக்கு பெரும் உதவியாக இருந்து தேர்தல் சவால்களை முறியடிக்க உறுதுணையாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி

**புஸ்கலாதேவி ஈஸ்வரலிங்கம்**

கடந்த 20.11.2012 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (20.12.2012) வியாழக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். இந் நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் வீதி,
சுன்னாகம்.

சி.ஈஸ்வரலிங்கம்
குடும்பத்தினர்.

## மாலியில் புதிய அரசு அறிவிப்பு

மாலியில் புதிய அரசை கடந்த சனிக்கிழமை அறிவித்தார் இடைக்காலப் பிரதமர் டையங்கோ சிப்ஸகோ.

மாலியில் கடந்த சிலநாள்களுக்கு முன்பு நடைபெற்ற இராணுவப்புரட்சியில் பிரதமராக இருந்த சீக் மோடிபோ டயாரா கைது செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து நாட்டில் மக்களாட்சியை ஏற்படுத்த இடைக்கால அரசின் பிரதமராக டையங்கோ சிப்ஸகோ பொறுப்பேற்றார். இதன் தொடர்ச்சியாக புதிய அரசை கடந்த சனிக்கிழமை சிப்ஸகோ அறிவித்தார்.

புதிய அரசில், இராணுவப் புரட்சியில் ஈடுபட்ட இராணுவத் தளபதி அமாதெ சானாகோவுக்கு நெருக்கமானவர்களுக்கு பாதுகாப்பு, நீதி ஆகிய துறைகளில் பதவி வழங்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய அரசு அறிவிக்கப்பட்டுள்ளநிலையில், பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மாலியின் வடக்குப் பகுதியை மீட்க மாலி இராணுவத்தினர் நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 . 06 . 1941



மறைவு
21 . 12 . 2001

அமரர் **பொன்னம்பலம் விஜயரட்ணம்**

( சாலைப்பரிசோதகர் இ.போ.ச. கோண்டாவில்)

திதி. 18.12.2012

*வாழ்விலே எமக்காக யாவற்றையும் அர்ப்பணித்து எமை வாழ வைத்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

கலைவாணி வீதி,
கோண்டாவில்வடக்கு,
கோண்டாவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவமயம்



## காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்

(ஈழத்துச் சிதம்பரம்)

## திருவெம்பாவை உற்சவ விஞ்ஞாபனம்

**19.12.2012 முதல் 28.12.2012 வரை**

**தினமும்**

காலை: 7 மணிக்கு அபிஷேகம் 9 மணிக்கு காலை பூசை
10 மணிக்கு திருவெம்பாவை ஓதுதல்
11.30 மணிக்கு வசந்தமண்டப பூசை
மாலை 4.30 மணிக்கு பூசை 5 மணிக்கு திருவெம்பாவை ஓதுதல்
22.12.2012 சனிக்கிழமை கைலாசவாகனத் திருவிழா
27.12.2012 வியாழக்கிழமை தேர்த் திருவிழா
காலை 6 மணிக்கு அபிஷேகம் 7 மணிக்கு காலைப் பூசை தொடர்ந்து வசந்த மண்டப பூசை
10.30 மணியளவில் தேர் திருவீதி புறப்படுதல்
பின்னிரவு 2 மணிக்கு ஆர்த்திரா அபிஷே கம் ஆரம்பமாகும்
28.12.2012 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு திருவூடல்
5 மணிக்கு தீர்த்தோற்சவம்

**குறிப்பு:** எமது ஆலயத்தின் நித்தியபூசை, திருப்பணிகளுக்கு நிதியுதவி செய்யவிரும்பும் அடியவர்கள் காரைநகர் இலங்கை வங்கிக் கணக்கான 1) சேமிப்புக் கணக்கு இல. 7643771 2) நடைமுறை கணக்கு இல. 73025228 ஆகிய இரண்டில் ஏதாவது ஒரு கணக்குக்கும் அன்னதானத்துக்கு நிதியுதவி அளிக்கவிரும்புபவர்கள் மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபைக் கணக்குக்கும் பணம் அனுப்புமாறும் இந்தக் கணக்குகள் தவிர்ந்த ஏனைய எக்கணக்குக்கோ அல்லது வேறு எச்சபைகளுக்கோ நிதி உதவி செய்யவேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆ. அம்பலவிமுருகன், மு. சுந்தரலிங்கம்**
**ஆதீனகர்த்தாக்கள்**

(சி/2641)(45..7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலகீனம், பலகீனம் அல்ல!

(1)

வரலாற்றில் சில மனிதர்களைப் பற்றிப் படிக்கும்போது சில விஷயங்கள் நமக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றன. தெருவில் ஒருவன் காக்கை வலிப்பு நோயால் அவதிப்படுவதைப் பார்க்கின்ற போது அந்த மனிதன் மீது நமக்கு இரக்கம் ஏற்படுகின்றது. அவன் உடற்கட்டுடைய மனிதனாக இருப்பின், இப்படிப்பட்டவனுக்கு இது மாதிரி ஒரு நோயா என்று நாம் அங்கலாய்க்கிறோம்.

காக்காய் வலிப்பு நோய்க்கு இந்தக் காலத்தில் எத்தனையோ மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. அந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட முடியும் என்றும், தொடர்ந்து மருந்து சாப்பிடுவதன் மூலம் அந்த நோயின் தொல்லைகளை இல்லாது செய்துவிட முடியும் என்றும், மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இந்தமாதிரி மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத காலத்திலேயே இந்த நோயுள்ள ஒருவன் மாவீரனாகத் திகழ்ந்திருக்கிறான். பல பேர்களை வென்றிருக்கிறான். பல நாடுகளைக் கைப்பற்றி ஒரு சாம்ராஜ்யத்தை அமைத்து இருக்கிறான். அவன் தான் வரலாற்றுப் புகழ் பெற்ற ஜூலியஸ் சீசர். அவனுடைய வாழ்க்கை வரலாறு காக்காய் வலிப்பு நோயால் அவதிப்பட்டவனாக அவனைச் சித்தரிக்கிறது.

போர்க்களத்தில் போர் புரிகின்றவனுக்கு இப்படி ஒரு நோய் இருந்திருக்க முடியுமா? இருந்திருந்தால் அதை அவன் எப்படிச் சமாளித்து போர்களை நடத்தினான்? இந்தக் குறைபாட்டுடன் ஒரு பெரிய நிர்வாகத்தை எப்படி ஏற்று, வெற்றிகரமாக அவனால் செயற்பட முடிந்தது-

உலக வரலாற்றில் புகழ் பெற்ற தளபதிகளுள் ஒருவனாக ஜூலியஸ் சீசர் குறிப்பிடப்படுகிறான்.

இந்த நோயை வெற்றி கொண்டு அவனால் எப்படிச் சாதனை புரிய முடிந்தது, என்பதற்கு, நான் படித்த வரையில் வரலாற்றுக் குறிப்பு எதுவுமில்லை. ஆனால் அவனைப் பற்றிச் சொல்லப்படுகின்ற மற்ற குண இயல்புகளை வைத்துப் பார்க்கும் போது அவனுடைய சாதனைகளுக்கு இந்தக் குறைபாடு ஏன் ஒரு தடையாக இருக்க வில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இலட்சியக் கனவுகள் காண்கின்றவனாக ஜூலியஸ் சீசர் இருந்திருக்கிறான். கனவு காண்பதோடு மட்டும் அவன் நின்று விடவில்லை. அந்தக் கனவுகளை நனவாக்கும் திட்டங்களை உருவாக்குவதிலும், அவற்றைச் செயல்படுத்துவதிலும் அவன் பெரும் பொழுதைக் கழித்திருக்கிறான். அதாவது, தன்னுடைய நோயைப் பற்றி சிந்திரிப்பதற்கு நேரமில்லாமல் அவன் உழைத்திருக்கிறான். ஆகவே, நோயின் கடுமை தன்னை பாதிக்க அவன் அனுமதிக்கவில்லை.

இரண்டாவது உலகப் போருக்குக் காரணமாக இருந்த ஹிட்லர் ஓவியம் வரைவதில் கெட்டிக்காரனாக இருந்தான். காலண்டர்களுக்கு ஓவியம் வரைந்து அதிலிருந்து கிடைக்கும் ஊதியத்திலிருந்து அவன் வாழ்க்கை நடத்தி இருக்கிறான். வறுமையில் அவன் வாடிய காலமே மிகுதி. ஆனாலும், வாழ்க்கையில் அவன் ஏற்படுத்திக் கொண்ட இலட்சியம் அவனுக்கு வழிகாட்டிக் கொண்டே இருந்தது. அவனுடைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அதுவே காரணமாயிற்று. அதனால் அவனுக்கு இருந்த நோய் அவனை பாதிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

என்னுடைய அனுபவத்தில் நடந்த ஒரு சம்பவத்தை வைத்து மேலே சொல்லியுள்ள விஷயங்களை என்னால் உறுதிப்படுத்தி முடியும். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த போது என்னுடன் விடுதியில் ஒரு நண்பர் இருந்தார். விடுதியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மாணவப் பிரதிநிதியாக அவர் விளங்கினார். அவரைப் போல் சுறுசுறுப்பான ஒரு மனிதரைப் பார்க்க முடியாது. மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் தன்னுடைய வேலைகளை கவனிப்பார். எப்போதும் செயல்பட்டுக் கொண்டே இருப்பார். ஆனால் அவருக்கு திடீர் திடீர் என்று மயக்கம் வந்து விடும். மயக்கம் வருகின்ற உணர்ச்சி தோன்றியவுடன் எவரிடமும் பேசாமல் நீட்டிப் படுத்துக் கொள்வார். சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்து அவராகவே எழுந்து விடுவார்.

ஆரம்பத்தில் முதன் முறையாக அவருக்கு அப்படி மயக்கம் ஏற்பட்டபொழுது நாங்கள் பயந்து போனோம். பிறகு அவருக்கு மயக்கம் வருவது எங்களுக்கும் பழக்கமாகி விட்டது. அவர் சொன்ன ஒரு விளக்கம் இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய நினைவுக்கு வருகின்றது. வைத்திய பரிசோதனையில் அவருக்கு எந்தக் குறையும் இல்லை என்று சொல்லி விட்டார்களாம். ஆனாலும் நடைமுறையில் அவர் ஒரு உண்மையைத் தெரிந்து கொண்டார். கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தால் அடிக்கடி அவருக்கு மயக்கம் வருவது இல்லையாம். வேலை செய்யாமல் நிற்கும் பொழுது அடிக்கடி மயக்கம் வருமாம். ஆகவே ஏதாவது ஒரு பொறுப்பினை எடுத்துக் கொண்டு, முழுமையான கவனத்துடன் அதைச் செய்வதை அவர் ஒரு பழக்கமாக்கிக் கொண்டாரம்.

அவருடைய இந்தக் கூற்றைப் பற்றி யோசிக்கும் போது ஒரு விஷயம் தெளிவாகிறது. நம்முடைய குறைபாடுகளில் இருந்து கவனத்தை வேறு திசையில் நாம் திருப்புகின்ற போது அந்தக் குறைபாடுகள் பெரிதாக நம்மை பாதிப்பதில்லை.

எந்த விதமான குறைபாடுகளும் இல்லாமல் இருந்தால் தான் சாதனைகள் புரிய முடியுமென்து வெறும் கற்பனையே. சில வாழ்க்கை வரலாறுகள் முறையா எழுதப்படவில்லை. என்றே நான் கருதுகின்றேன்.

பி.சி.கணேசன்

(தொ [illegible])

# நோய்கள் குறித்த விழிப்புணர்வைப் பரப்பி அவற்றை முழுவதுமாகத் தடுக்க உழைக்க வேண்டும்

## உலக எயிட்ஸ் தின நிகழ்வில் உரை

தென்மராட்சி, டிசெ.18

தவறான பழக்க வழக்கங்களால் ஏற்படும் எயிட்ஸ் நோயைத் தடுக்கவும், சுற்றாடலைப் பாதுகாத்து டெங்கு நோய் வராமல் தடுக்கவும் சுகாதாரப் பகுதியினர் பெரு முயற்சி எடுத்து வருகின்றனர். பொது மக்களாகிய நாம் இந்த நோய்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளைப் பரப்பி அவற்றை இல்லாது ஒழிக்கச் செய்ய வேண்டும்.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெற்ற உலக எயிட்ஸ் தின நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நமது முன்னோர்கள் காலத்தில் மனித உடலில் பல்வேறு நோய்களின் தாக்கம் காணப்பட்டுள்ளது. அவ்வேளையில் மருத்துவத்துறையில் போதிய வளர்ச்சி காணப்படாததால் பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்பட்டன.

குறிப்பாக திடீரென உடல் மெலிந்து உருக்குலைந்து போனால் செய்வினை, சூனியம் என தெரிவித்து மாந்திரீகர்களை நாடியுள்ளனர். திடீரென மூன்று தினங்கள் இரத்த வாந்தி எடுத்து மரணித்தால் பேய், பிசாசு, முனி அடித்து மரணித்ததாக கூறப்படுகிறது.

விஞ்ஞான மருத்துவ ஆராய்ச்சியின் பயனாக குறுகிய காலத்தில் உடல் மெலிவு ஏற்பட்ட நோயாளிக்கு காசம் மற்றும் எயிட்ஸ் எச்.ஐ.வி.கிருமியின் தாக்கம் ஏற்பட்டுள்ளதும், இரத்த வாந்தி எடுத்து மரணிப்பவருக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளதாகவும் கண்டுபிடித்து பெயரிட்டுள்ளனர்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் சமய, கலாசார விழுமியங்கள் பண்டைக் காலம் தொடக்கம் பேணப்பட்டு வருகின்றன. இதனால் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் வாழ்க்கை முறை எமது மத்தியில் அழியாமல் தொடர்ந்து கொண்டு வருகிறது. மேற்குலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது தமிழ்ப் பிரதேசத்தில் எயிட்ஸ் போன்ற ஆட்கொல்லி நோயின் தாக்கம் குறைந்து காணப்படுகிறது. இருப்பினும் யாழ். மாவட்டத்தில் 43 பேர் இனங்காணப்பட்டு இவர்களில் 27 பேர் மரணமடைந்துள்ளமை கவலை தரும் விடயம். இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களும் அவர்களுடன் பாலியல் தொடர்பு வைத்தவர்களுமாக உள்ளதாக புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

### மாப்பிள்ளையின் இரத்த மாதிரியை கேட்கும் பெண்கள்

இந்தியாவின் பல மாநிலங்களில் உள்ள இளம் பெண்கள் தமக்கு திருமணம் பேசி வருபவர்களிடம் மாப்பிள்ளையின் குருதிப் பரிசோதனை அறிக்கை கேட்பதாக அறிய முடிகிறது. இது வேடிக்கையாகக் காணப்பட்டாலும், அந்த இளம் பெண்களிடையே ஏற்பட்டுள்ள எயிட்ஸ் விழிப்புணர்வு தான் காரணம் என உணர முடிகிறது.

நோய் வந்த பின்னர் அவதியுறுவதை விட வருமுன் காப்போம் என்ற கொள்கை பாராட்டத்தக்கது.

எமது பிரதேசத்தில் வெளிநாட்டு மாப்பிள்ளை என்றால் பல லட்சம் ரூபாவை வாரி வழங்கி பெண்ணுக்கு மணம் முடித்து விடுகின்றனர். அவர்களுக்கு எயிட்ஸ் நோய் ஏற்பட்டு தமது நிலையை நினைத்து மனமுடைந்து சிலர் நோய்க் காவிகளாக இங்கு வந்துள்ளனர். சிலர் அந்த நாட்டில் தற்கொலை செய்துள்ளனர்.

### இறுதிச் சடங்கில் உறவினரும் இல்லை

அண்மையில் வடமராட்சிப் பகுதியில் விசர் நாயினால் கடியுண்டு உரிய சிகிச்சை பெறாமல் மரணித்த ஒருவரின் மரணச் சடங்குக்கு சென்றபோது உறவினர்கள் எவருமற்ற நிலை காணப்பட்டது. விசாரித்த போது தமக்கும் விசர் நோய் ஏற்பட்டு விடுமென்ற அச்சத்தால் வரவில்லை என அறிந்த போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வற்ற செயலை தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளது.

எயிட்ஸ் நோய் தொற்றும் நோய் என பலர் கருதுகின்றனர். ஏனெனில் எயிட்ஸ் நோயாளியை இனங்கண்டால் அவரை வெறுத்தொதுக்கும் மனப்பான்மை எமது மத்தியில் உள்ளது. இந்த எண்ணத்தை மாற்ற வேண்டும். எயிட்ஸ் தொற்று நோயல்ல.

உலக எயிட்ஸ் தின விழாவில் கலந்து கொள்ளக்கூட மக்கள் விரும்பவில்லை என்பதை இங்கு காணமுடிகிறது. நல்ல விடயங்களை கருத்துக்களைத் தெரிவிக்கும் இவ்வாறான நிகழ்வுகளைத் தவிர்ப்பது வருந்தத்தக்கது - என்றார். (எ-9)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 77 மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வில் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுடன் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ, தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா உட்பட லயன்ஸ் கழக உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (9)

# எழுவைதீவு பொது நூலக போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை பிரதேசசபை பொது நூலகங்களின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

**கதை சொல்லல்**

1 ஆம் இடம் - கெ.ஜெனுசா (எழுவைதீவு முருகவேள் வித்தி.), 2 ஆம் இடம் - அ.கமிலஸ் (எழுவைதீவு றோ.க.த.க.பாடசாலை), 3 ஆம் இடம் - வ.சார்மிகா (எழுவைதீவு முருகவேள் வித்தி.)

**பேச்சுப் போட்டி**

1 ஆம் இடம் - கி.[illegible], 2 ஆம் இடம் - வி.மேரிடிஷாளினி, 3 ஆம் இடம் - வி.மேரிசகுந்தலா (மூவரும் எழுவைதீவு றோ.க.த.க.பாடசாலை).

**சித்திரப் போட்டி**

1 ஆம் இடம் - ம.கஜீபன், 2 ஆம் இடம் - ய.தனுசன், 3 ஆம் இடம் - ச.சௌமியா (மூவரும் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்).

**கட்டுரைப்போட்டி கீழ்ப் பிரிவு**

1 ஆம் இடம் - ம.கொண்சலா, 2 ஆம் இடம் - ய.யனுசன், 3 ஆம் இடம்- அ.அன்ரனி அரியதாஸ் (மூவரும் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்).

**பொது அறிவுப் போட்டி**

1 ஆம் இடம் - அ.மேரிஅஜந்தா, 2 ஆம் இடம் -கி.கிளின்ரன்பெனான்டோ, 3ஆம் இடம் - ம.ஸ்ரெலா (மூவரும் 4 ஆம் வட்டாரம், எழுவைதீவு). (எ)

# நெறியாளர் குழு

பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. நெறியாளர் குழுவின் தலைவர் ந.சுந்தரமூர்த்தி, உபதலைவர் சி.ஸ்ரீரஞ்சன், உறுப்பினர்கள்- இரா.செல்வராசா, த.தயாரூபன், ந.சுந்தரமூர்த்தி, எஸ்.அரியரத்தினம், சி.ஸ்ரீரஞ்சன், கி.சுபாகரன், ஆ.தங்கராசா (ம)

# நிர்வாக உறுப்பினர் தெரிவு

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவாலி தெற்கு ஜெ/136 கிராம அலுவலர் பிரிவில் முதியோர் சங்க உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக சி.சிவராசா, செயலாளராக இளைப்பாறிய ஆசிரியர் அ.பதுமைநாயகம், பொருளாளராக வை.துரைச்சாமி உட்பட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (எ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலுசந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்புசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஜா ட்ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# மருண்டவன் கண்ணுக்கு...

விடிந்துவிட்டது. படுக்கையிலிருந்து எழுந்தவர் பதறிப்போனார். அவருடைய பொய்ப் பல் 'செற்றைக்' காணவில்லை. வழமையாக நித்திரைக்குப் போகும் முன்னர் கட்டிலுக்கு பக்கத்திலுள்ள மேசையில் அதைக் கழற்றி வைப்பார். அந்த மேசையிலும் 'பல் செற்' இல்லை. கட்டிலிலும் காணவில்லை. இரவு 'பல்செற்றை' கழற்றி வைத்த நினைவும் இல்லை. "ஒருவேளை நித்திரையில் 'பல் செற்றை' விழுங்கி விட்டேனோ?" என்ற எண்ணம் அவருக்குள் எழுந்தது. அவ்வளவுதான். அடி வயிற்றில் ஏதோ இனம்புரியாத வலி எழுந்தது. நேரம்போகப்போக அவரது வயிற்றுவலி அதிகரித்துக்கொண்டே போனது.

செய்யாத வைத்தியங்கள் இல்லை. ஒன்றுக்கும் வயிற்று வலி குணமாகவில்லை. உணவும் தொண்டைக் குழியால் இறங்க மறுத்தது. 'எக்ஸ் - றே' எடுத்துப் பார்த்தபோது, 'பல் செற்' வயிற்றில் இல்லை என்ற முடிவே கிடைத்தது. ஆனாலும் அதை அவர் ஏற்கவில்லை. ஒருவேளை அது கரைந்து கல்சியமாகி குடலோடு படிந்திருக்கலாம் என்று நம்பினார். நோயும் வலியும் அதிகரித்துக்கொண்டே போனது. அவர் எலும்பும் தோலுமாக மாறிப்போனார். கடைசியில் "உயிரைக் காப்பாற்றுவது கடினம்" என்று வைத்தியர்களும் கைவிரித்து விட்டனர். இந்த நிலையில் தான் ஒருநாள் வீட்டுக் கூரையில் எலிகளின் நகக் கீறல் படிந்த நிலையில் அவரது 'பல் செற்றை' வேலைக்காரன் கண்டுபிடித்தான். அதைக் கண்டதும் வயிற்று வலி பறந்துபோனது. வைத்தியர்களால் 'இனி பிழைக்கவே மாட்டார்' என்று கைவிடப்பட்டவர் அடுத்தநாளே எழுந்து நடமாடத் தொடங்கிவிட்டார்.

எது உண்மையென்று மனதார நம்புகிறோமோ, அந்த நம்பிக்கை உளரீதியாகவும்,உடல் ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. குறித்த விடயம் யதார்த்தத்தில் பொய்யாக இருந்தாலும் கூட, அதனை உண்மையென்று மனதுக்குள் வரித்துக் கொண்டால், அந்தப்பொய் கடைசியில் யதார்த்த உண்மையை கொன்றுவிடும். பின்னர் பொய்யே உண்மையாகிவிடக்கூடிய அபத்தம் நிகழ்ந்துவிடும். அதனால் தான் மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பர். பேய்க்கு பயந்த ஒருவன் அல்லது பேய் இருப்பதாக நம்புபவன் இருளில் எது அசைந்தாலும் அதனையும் பேயாகவே நம்பி, ஏங்கிப்போவான். குலைப்பன் அடித்து பாயில் படுக்கையாகிக் கிடக்கும் அவனை பின்னர் ஒரு தாயத்தோ அல்லது கோயில் விபூதியோ தான் எழும்ப வைக்கும்.

மனிதனுக்கு நம்பிக்கை இருப்பது அவசியமானது. ஆனால் கண் மூடித்தனமாக எல்லாவற்றையும் நம்புதல் அவனை படுகுழியில் தள்ளிவிடும். இத்தகைய மூடத்தனமான நம்பிக்கைகளில் ஒன்றின் விளைவே "டிசெம்பர் 21 ஆம் திகதி உலகம் அழியப்போகுதாம்" என்ற வதந்தியின் பரவுகை.

விஞ்ஞான ரீதியாக எந்தவித நிரூபணமுமற்ற இந்தக் கட்டுக்கதையை இன, மத, தேச வேறுபாடின்றி கோடிக் கணக்கானோர் நம்புகின்றனர்.

"பெரிய கல்லொண்டு வந்து விழப்போகுதாம்"

"மூண்டு நாளைக்கு சூரியனைக் காணமுடியாதாம். ஒரே இருட்டாய் இருக்குமாம்"


"வெளிநாடுகளில பணக்காரர் எல்லாம் சுரங்கம் தோண்டி அதுக்குள்ள போகப்போறாங்களாம்"

என்பன போன்ற, பூமியின் அழிவுக்கான புதிய புதிய ஆருடங்களை இந்த வதந்திகள் சுமந்து வருகின்றன. அவற்றை எந்தவித கேள்வியும் இன்றி அப்படியே நம்புபவர்கள் சும்மா இருப்பதில்லை. தங்களுடைய உலக அழிவு பற்றிய பயங்களை பிறரோடு பகிர்வதிலேயே குறியாக அலைகிறார்கள்.தங்களின் கதையைக் கேட்பவர்களை எப்படியாவது தங்கள் வழிக்கு கொண்டுவந்து, "அப்ப உண்மையில உலகம் அழியத்தான் போகுது" என்று அவர்கள் வாயாலேயே ஒத்துக் கொள்ளும்வரை இந்தக் கதை பரப்பிகள் ஓய்வதில்லை.

இந்தக் கதை பரப்பிகளின் நம்பிக்கையின்படி உலகத்தின் ஆயுள் இன்னும் மூன்று நாள்கள் மாத்திரமே. இந்த மூன்று நாள்களுக்குள் எந்தக் கல்லும் பூமிக்குள் வருவதற்கான சாத்தியம் துளியும் இல்லை. மூன்று நாள்கள் இருள் உலகை மூடும் என்றால் அது இன்றைக்கே நடந்திருக்க வேண்டும். ஆனால் இந்தப் பத்தியை நீங்கள் வாசிக்கும் அளவுக்கு ஒளி பரவியே உள்ளது. சூரியனை இன்றும் நீங்கள் கண்ணாரக் காணலாம்.

ஆனால் சில வேளைகளில் இந்தக் கதை பரப்பிகளின் வதந்திகளை எல்லோரும் நம்பியிருந்தால் ஏங்கியே செத்திருப்பார்கள். கல்லால் உலகம் அழிவதை விட இந்த வதந்திகளால் அழியும் என்று சொன்னாலாவது கொஞ்சம் நம்பலாம்.

# தமிழருக்குத் தீர்வு இன்றேல் பிரச்சினை தொடர்ந்து வரும்



கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆற்றிய உரையில், வடக்கு - கிழக்கில் இராணுவப் பிரசன்னம் குறித்து உண்மையில் அவர் என்ன கூறியிருந்தார்....? அவரது உரையின் முழுவிவரம் வருமாறு:-

பல தசாப்தங்களாக வடக்குக் கிழக்கைச் சீரழித்த போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. போரைத் தள்ளிவைத்துவிட்டு தங்கள் வாழ்வை மேம்படுத்த தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள். ஆயுதப் படைகள் வடக்கு, கிழக்குக்கு வெளியே தான் இருக்கவேண்டும் என்பதையே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள் என்ற தவறான எண்ணக்கருத்து இந்த நாட்டில் சிலருக்கு இருப்பதாகவே தோன்றுகின்றது. அது சரியானதல்ல.

இந்த முழு நாட்டிலும் இருப்பதைப் போன்று வடக்கு, கிழக்கிலும் ஆயுதப் படைகளின் பிரசன்னம் இருக்கலாம் என்பதை நாம் உணர்ந்து ஏற்றுள்ளோம். அதனைப் பதிவு செய்ய நான் விரும்புகிறேன். தமிழ் மக்களை கீழ்மைப்படுத்தும் விதத்திலோ, அல்லது அவர்கள் தாங்கள் இந்த நாட்டில் சமத்துவமான பிரஜைகள் அல்லர் என உணரும் வகையிலோ, அல்லது அவர்கள் இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட பிரஜைகள் என வெதும்பும் முறையிலோ அங்கு ஆயுதப் படைகளின் பிரசன்னம் இருக்கக்கூடாது என்பதையே நாம் கோருகின்றோம். அத்தகைய வகையில் படைகளின் பிரசன்னம் இருப்பதை நாம் விரும்பவில்லை.

தமிழர்களாகிய நாங்கள் வடக்கு, கிழக்கில் சுயகௌரவத்துடனும் மரியாதையுடனும் வாழ, அதேசமயம் ஆயுதப்படையினரும் தேவைப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் - நியாயமான, அவசியமான எண்ணிக்கையில் - வடக்கு, கிழக்கில் பிரசன்னமாகவிருந்து தங்கள் வேலைகளைச் செய்யவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர் போராட்டத்தின் வரலாறு குறித்து நான் பேசவேண்டி உள்ளது. தமிழர் போராட்டம் சுதந்திரத்துக்குச் சற்றுப் பின்னர் தொடங்கியது. அதற்கு நீண்ட சரித்திரம் உண்டு. அது உருவானதற்குப் பல காரணங்கள், ஆதாரங்கள் உள்ளன. அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க, அமரர் டட்லி சேனநாயக்க போன்ற இந்த நாட்டின் உயர்ந்த தலைவர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியாயமான ஆதாரங்கள் காரணமாகவே அது தொடங்கியது. பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்பாடு இருந்தது. டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் உடன்பாடு இருந்தது. அந்த உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமானால் நாடு இன்று இந்த நிலையில் இருந்திருக்காது.

நாங்கள் எப்போதுமே வன்முறையாளர்கள் அல்லர். நியாயமான சட்டரீதியான, ஜனநாயக, அறவழி அரசியல் போராட்டங்களையே நாம் முன்னெடுத்தோம். நாம் சத்தியாக் கிரகத்தைக் கைக்கொண்டோம். அகிம்சையைப் பின்பற்றினோம். நாங்கள் அதனை எல்லாம் மேற்கொண்டபோது வன்முறை தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது. அது 1956 இல் நடந்தது, 1958 இல் நடந்தது, 1961 இல் நடந்தது, 1977 இல் நடந்தது, 1981 இல் நடந்தது. 1983 இல் தமிழர் இனவழிப்புத் திட்டமே முன்னெடுக்கப்பட்டது. இவை சர்ச்சைக்கு அப்பாற்பட்ட விடயங்கள்.

பிரிக்கப்படாத, ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் நியாயமான அரசியல் தீர்வுக்கு நாங்கள் தயாராகவே இருந்தோம். எமது தலைவர் செல்வநாயகம் இந்த நிலைப்பாட்டை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார். அது குறித்து எந்தக் கேள்விக்கும் இடமில்லை. இந்த விடயம் குறித்து யாரும் மறுத்துக்கூற முடியாது. [illegible] அறிஞர் [illegible] அகிம்சை நெறியில் முன்னெடுக்கப்பட்ட நியாயமான அரசியல் கோரிக்கைகளுக்கு உரிய இடமளிக்க மறுத்து, தமிழர் விரோத நடவடிக்கைத் திட்டங்கள் நீண்ட காலமாகத் தொடர்ந்த பின்புலச் சூழ்நிலையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உருவானது. விடுதலைப் புலிகள் உருவானதற்கான உண்மையான சந்தர்ப்ப சூழ்நிலையைப் புரிந்து கொள்ளவேண்டும்.

புலிகள் இயக்கம் தமிழர்களால் உருவாக்கப்பட்டதல்ல. நியாயமான அபிலாசைகளுக்கு இடமளிக்க மறுத்து வந்த தொடர்ச்சியான அரசுகளாலேயே புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்டது என்பதே எப்போதும் எனது கருத்து நிலைப்பாடாக இருந்து வருகிறது. அதுதான் புலிகள் உருவானதற்குக் காரணம். புலிகள் தோற்றம் பெற்றமைக்கு நியாயமான காரணங்கள் உள்ளன. அதனை யாரும் மறுக்க முடியாது.

அந்த அமைப்பு, குடிமக்களை - சிங்களக் குடிமக்களை, தமிழ் குடிமக்களை, முஸ்லிம் குடிமக்களை - சிவிலியன் தலைவர்களை - தாக்கியபோதே அது பயங்கரவாத அமைப்பு என வர்ணிக்கப்பட்டது.

அவர்கள் மனித உரிமைகளை அனுஷ்டிக்கவில்லை; அவர்கள் எப்போதும் ஜனநாயகத்தைப் பின்பற்றவில்லை. அதுதான் அவர்களின் தோல்வி. புலிகளை அழித்தமைக்கு பலர் உரிமை கோருகின்றனர். ஜனநாயகத்தைப் பின்பற்றாததால் மனித உரிமைகளைப் பின்பற்றாததால் புலிகள். இயக்கம் தன்னைத் தானே அழித்துக்கொண்டது என நான் கூறுகிறேன். அதுதான் உண்மை.

எனது நண்பரும் அதிகம் மதிக்கப்படும் முன்னாள் எம்.பியுமான லக்ஷ்மன் கதிர்காமரே புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்துவதை உறுதிப்படுத்தி, செயலிழக்கச் செய்யவைத்து, உலகம் முழுவதும் பல நாடுகளில் உள்ள புலிகளின் கட்டமைப்புக்களை அகற்றச் செய்ததில் முன்னணிப் பங்கு பணியாற்றினார். புலிகள் இயக்கத்தை இலங்கை தோற்கடிப்பதற்கு சர்வதேச ஆதரவு முழு அளவில் கிடைத்தமைக்கு பெருமளவில் அவரே காரணம். லக்ஷ்மன் கதிர்காமர் இன்று உயிருடன் இருப்பாரானால் இன்று நடைபெறும் பல விடயங்கள் குறித்தும் இன்று கூறப்படும் பல விடயங்கள் சம்பந்தமாகவும் அவர் அதிகம் வெறுப்படைந்திருப்பார். எனவே நாம் இதனை நினைவில் கொள்ள வேண்டும்.

எனது தலைவர்கள், எனது சொந்த சகாக்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். நானும் புலிகளின் கொலைப் பட்டியலில் இடம்பெற்றிருந்தேன். ஏன்? நீங்களோ எங்களைப் புலிகளின் பிரதிநிதிகள் என்று அழைக்கின்றீர்கள். புலிகளால் கொல்லப்பட வேண்டியவர்களாக நாங்கள் இருந்தமையால்தானா நீங்கள் எங்களை புலிகளின் பதிலி (பிரதிநிதிகள்) என்று அழைக்கின்றீர்கள்? புலிகளின் கொலைப் பட்டியலில் நாங்கள் இடம்பெற்றிருந்த காரணத்தினால்தான் நீங்கள் எங்களை புலிகளின் பிரதிநிதிகள் என அழைக்கின்றீர்கள்? அவர்கள் யுத்த நிறுத்தத்துக்கு முன்வந்து பேச்சு நடவடிக்கைகளுக்குள் நுழைந்தபோது பிணக்குக்கு அரசியல் ரீதியான அமைதித்தீர்வு ஏற்படுவதற்காக எல்லோரும் அவர்களோடு சேர்ந்து பணியாற்றவேண்டியிருந்தமை இயல்பானதே. இப்போது புலிகள் இல்லை. புலிகள் இயக்கம் அகற்றப்பட்டுவிட்டது, போய்விட்டது. ஆனால், சிலர் தமிழர் பிரச்சினையும் அத்தோடு போய்விட்டதாகக் கருதுகின்றார்கள். தமிழர் பிரச்சினை அப்படிப் போய்விடமாட்டாது. தமிழர்களின் பிரச்சினைக்கு நியாயமான சாத்தியமான, ஏற்றுக்கொள்ளத்தக்க நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று காணப்படும்வரை தமிழர் பிரச்சினை இருந்தே தீரும். புலிகளின் மறைவின் பெறுபேறாக தமிழர் பிரச்சினை மேலும் அறவலிமையையும் விசாலமான சட்டபூர்வ நியாயத்தையும் பெற்றமையே விளைவு. தமிழர் பிரச்சினை வெறுமனே அகன்று விடாது.

நான் மற்றொரு விடயத்தைக் குறிப்பிட விழைகிறேன். என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்காக ஒரு நினைவு தினத்தை அனுஷ்டிப்பதில் என்ன தவறு உள்ளது? இந்த வருடம் நவம்பர் 27ஆம் திகதி, இறைவன் முருகனுக்கு இந்துக்கள் தீபமேற்றி வணங்கும் மத தினமாகவும் சந்தர்ப்பம் அமைந்துவிட்டது. கார்த்திகைத் தீபம் ஒரு மேன்மையான பண்டிகை. அது, புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கான நினைவு தினமாகவும் கூட இம்முறை அமைந்துவிட்டது.

ஒரு சகோதரன் உயிரிழந்த தனது

(21 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்துகரத்து ஆனைமுகனுக்கு உகந்த பெருங்கதை விரதம்



வேதத்தின் சாரமாகவும், முடிவாகவுமுள்ள ஓங்காரத்தின் பிரணவப் பொருளாகவும் விளங்கும் பெருந்தகை ஐங்கரன், ஓங்காரத்தின் ரூபமாய், ஓசை ஒலியெல்லாமாகி நாதவிந்து கலாதி நவோ நமவென்று நான்மறை உச்சரிக்கும் ஞானம், மோட்சம், இருப்பிடம் என்பவற்றை குறைவின்றிக் கொடுக்கும் தத்துவரூபமாய் விளங்குகின்றார். மனம், வாக்கு, காயம் எனும் நிலை கடந்து சுக்லாம் பரதரம் விஷ்ணு சசிவர்ணம் சதுர்புஜமாக, வும், விக்னோப சாந்தமாகவும் விளங்குகின்ற விக்னேஸ்வரன் தம்மை வழிபடும் அன்பர்க்கு எளிமையான வடிவில் வந்து சகல வல்லமைகளையும் வாரி அளித்திடும் சர்வவல்லமை கொண்டவராகத் திகழ்கின்றார்.

பேழைபோல் வயிறும், பொருத்த காத்திரமும், தாழ்துளைக் கையும், தழைமுறச் செவியுமாய் அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கி, விண்டுவின் மைந்தனாய் விஸ்வரூபமெடுத்து விளங்கும் கணபதிக்குரிய விரதங்களில் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுவது பெருங்கதை விரதமாகும். இது, கார்த்திகை மாத கிருஷ்ணபட்ச கிரகம் என்று சொல்லப்படுகின்ற மார்கழி மாத சுக்கிலபட்ச சஷ்டி சதுர்த்தி கிரியை வரையில் இருபத்தொரு நாள்கள் அனுஷ்டிக்கப்படும் விரதமாகத் திகழ்கின்றது. சஷ்டி தொட்டு சதயம் வரை நோற்கப்படும் இந்த நோன்பானது, இருபத்தொரு முடிச்சுக்களை கொண்ட நூலை ஆடவர் வலது மணிக்கட்டிலும், பெண்டிர் இடது மணிக்கட்டிலும் அணிந்து விநாயகரை அனுதினம் திருமஞ்சனமாட்டி, பல்வேறு வகையான நிவேதனங்கள் படைத்து இல்வாழ்வுக்கு ஏற்றதான இனிதான வரங்களை அவரிடத்தில் இறைஞ்சி நிற்கும் இன்பமயமான நோன்பாகும். இந்தப் பெருங்கதை விரதத்தை நோற்றதன் பயனாலேயே இராமன் சீதையை அடைந்ததும், உருக்குமணி சிசுபாலனை அடைந்ததும், அட்ட தேவதைகள் அட்ட போகங்கள் பெற்றதும் புராணங்கள் கூறும் உண்மை நிகழ்வுகளாகும். நாமும் முத்தி, சித்தி, புத்தி தரும் வெங்கரி முகமும், வியன்புழைக் கையும் கொண்ட ஐங்கரக் கடவுளை வணங்கி பெருங்கதை விரதம் அனுட்டித்து விநாயகப் பெருமானின் அருள் பெற்று உய்வோமாக.

-எம்.சுகா, அச்சுவேலி.



# முதலாம் தரத்துக்கான பாடசாலை அனுமதியும் இடம்சார் பாடசாலை அபிவிருத்தியும்....

■ நடே சு தபாபவன்

இன்று இலங்கைப் பாடசாலைக் கல்வி முறையின் சமகாலக் கல்விப் பிரச்சினைகளில் முதன்மையான ஒன்றாக விளங்குவது முதலாம் தரத்துக்குப் பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறுவது தொடர்பான பெற்றோரின் போட்டி நிலைசார் பிரச்சினையாகும். இன்று நாடு முழுவதும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் கல்விச் சேவையை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ள போதிலும் ஒரு சில பாடசாலைகளில் அனுமதிபெறுவது தொடர்பிலேயே போட்டி நிலை நிலவுகின்றது. அதிலும் குறிப்பாக முப்பத்தொன்பது பாடசாலைகளில் அனுமதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலேயே அதிகரித்த போட்டி நிலை நிலவுகின்றது என இலங்கையின் கல்விப் புலம் சார்ந்தோர் குறிப்பிடுகின்றனர். இந்த நிலைக்குக் காரணமாக அமைவது யாதெனில் இந்தப் பாடசாலைகளின் வெளியீடுகள் உயர்ந்த மட்டத்தில் இருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

முதலாம் ஆண்டுக்கான அனுமதியை கோரவுள்ள குடித்தொகை தொடர்பான சரியான எதிர்வு கூறல்களும் கணிப்பீடுகளும் வினைத்திறனான வகையில் மேற்கொள்ளப்படாமை, அதற்கேற்ப பாடசாலைகள் கட்டமைக்கப்படாமை என்பன அனுமதிக்கான பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதில் பங்காற்றுவதாயுள்ளன. கல்வியோர் அடிப்படை உரிமையாகவுள்ள நிலையில் அதனை எல்லோரும் சமநீதியுடன் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் அவசியமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆண்டு ஒன்றுக்கு அனுமதி பெற முனையும் மாணவர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையான மாணவர்கள் தமக்கு விருப்பமற்ற பாடசாலைகளில் திருப்தியற்ற நிலையில் பாடசாலைக் கல்வியைத் தொடர்வது என்பது கல்வியில் சமசந்தர்ப்பம் என்பதைக் கேள்விக்குறியதாக்குகிறது. தரம் ஒன்றுக்கான அனுமதியானது பெற்றோரைப் பொறுத்தவரையில் சவாலான விடயமாக மாறியுள்ளது. பிரபல பாடசாலைகளில் அனுமதியைப் பெறுவதற்காக செல்வாக்கும் பணமும் தேவையானவர்களாக அவர்களை மாற்ற அவர்கள் துன்பத்துக்குள்ளாகின்றார்கள். பாடசாலையைப் பொறுத்தவரையில் பாடசாலை நிர்வாகங்கள் விமர்சனத்துக்குள்ளாகின்றன. பாடசாலை அதிபர்கள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் நீதிமன்றத்துக்கும் செல்ல வேண்டியவர்களாகின்றார்கள். பிஞ்சு உள்ளங்கள் தமது வசிப்பிடம் தொடர்பில் பொய் கூறத் தூண்டப்படுகிறார்கள் என்பதோடு பாடசாலைக் கல்வியைப் பெற முன்னரே நேர்முகப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தப்பட வேண்டியவர்களாகின்றார்கள். இதன் காரணமாகக் குழந்தை உளவியல் பற்றிய சிந்தனைகள் கேள்விக்குறியாகின்றன. இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு பாடசாலை அபிவிருத்தி தொடர்பில் புதிய தந்திரோபாயங்கள் களநிலைமைகளுக்கேற்ப பொதுக் கொள்கையில் இருந்து விலகாத வகையில் கையாளப்பட வேண்டும். இதற்குப் புதிய அறிவு திறன் நடுநிலை பயிற்சி உடையவர்களாகக் கொள்கை வகுப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் விளங்குதல் அவசியமாகும்.

பாடசாலைக்கு மாணவர்கள் அனுமதி பெறுவது தொடர்பான போட்டி நிலையை எதிர்கொள்வதிலிருந்து குறிப்பிட்ட சில பாடசாலைகளையும் தமது பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்குவதற்குப் பொருத்தமானது எனப் பெற்றோர் கருதும் பாடசாலைகளையும் உருவாக்குவதில் இடம்சார் ஒழுங்கமைப்புப் பெரும் பங்காற்றுவதாயுள்ளது.

இன்று உலகில் முக்கியத்துவமுடையதாக விளங்குவது நிலப்பயன்பாட்டியலும் அது சார்ந்த விடயங்களுமாகும். மக்கள் தொகை அதிகரித்து வரும் நிலையில் மக்களின் [illegible] முறைகள் வாழ்க்கைத் [illegible]களில் ஏற்படும் செயற்பாடுகள் அபிவிருத்தி நோக்கி முக்கியத்துவமுடையதாக உள்ளன.

இலங்கையின் இருபத்தைந்து மாவட்டத்திலுமுள்ள பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் குடிசன அடர்த்தியானது பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடுவதைக் காணலாம். இவ்வாறு பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபாடான மக்கள் தொகையைக் கொண்டிருந்த போதிலும் இந்த மக்கள் தொகைப் பரம்பலைக் கருத்தில் கொண்டதாக பாடசாலைகள் அனைத்து வசதிகளுடனும் அனைவரது எதிர்பார்க்கைக்கும் ஏற்ப அபிவிருத்தி செய்யப்படாமை ஒரு குறைபாடாகும். இந்த நிலையைப் போக்க வேண்டுமானால் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான பிரதேச திட்டமிடல் சிறப்பான முறையில் இடம்பெற வேண்டும்.

பாடசாலைச் செயன்முறையின் சிறப்பான செயற்பாட்டுக்கு அவசியமான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வளர்ச்சியடைந்த நவீன முறையான புவியியல் தகவல் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தலாம். இம்முறையைப் பயன்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பாடசாலைகளின் அமைவிடத்தையும் இனங்கண்டு கொள்ள [illegible] ...லேயே அமைந்துள்ள ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளை இனங்காணல் குறிப்பிட்ட தூரம் அல்லது சனத் தொகை அடர்த்திக்கேற்ப அபிவிருத்தி செய்ய வேண்டிய பாடசாலைகளைத் தீர்மானித்தல் அவற்றின் அமைவிடத்தைத் தீர்மானித்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். இதற்குப் புவியியல் தகவல் தொழில் நுட்பத்திலுள்ள இடந்தேடல் செயற்முறையைக் கையாளலாம். இதன் மூலம் அபிவிருத்தி செய்ய வேண்டிய பாடசாலைகளுக்காக நாம் விதிக்கும் நிபந்தனைகளைப் பயன்படுத்தி பொருத்தமான இடத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பாடசாலையை இனங்காணலாம். இவ்வாறு இனங்கண்ட பாடசாலைகளை முழுமையான அபிவிருத்திக்குட்படுத்துவதன் மூலம் அனுமதிக்கான நெருக்கீட்டு நிலைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஒரு பாடசாலையில் பிள்ளைகளின் அனுமதிக்கு பாடசாலைச் சுற்றுவட்டாரத்திலுள்ள பிள்ளைகளில் ஐம்பது வீதமானவர்களை அனுமதிக்கலாம் என்ற சுற்றுநிருப நிபந்தனையை விதித்த பின்னர் ஒரு சில பாடசாலைகளை நோக்கி வளங்களை அதிகரித்த அளவில் வழங்கிக் கொண்டிருத்தல், பல்வேறு செயற்றிட்டத்தினூடாக மேற்கொள்ளக் கூடிய அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளையும் குறித்த பாடசாலைகளுக்கே திசை திருப்புதல், சமூகத்திலிருந்து பங்களிப்புக்களையும் ஆதரவுகளையும் பெறக் கூடிய பாடசாலைகளின் மீது அபிவிருத்தி பற்றிய சிந்தனையையும் பார்வையையும் கொண்டிருத்தல், அனுமதிக்குப் போட்டி நிலவும் பாடசாலைகள் தொடர்பாக உயர்ந்த புலக்காட்சியைக் கல்வி முகாமையாளர்கள் தோற்றுவிப்பதன் மூலம் எங்கோ நீண்ட தூரத்திலுள்ள வளர்ச்சியடைந்த பாடசாலையில் தமது பிள்ளையை இணைத்து கல்வி பயிற்றுவிப்பதற்காகப் பிள்ளையின் பெற்றோர்கள் அனுமதி பெறப் போட்டியிடுவதும் சமூகத்தில் பாரதூரமான விளைவுகளையே உண்டுபண்ணும். தற்போதைய வீதிக் கட்டமைப்பு அபிவிருத்தியானது போக்குவரத்தை இலகுபடுத்துவதாயுள்ள நிலையில் நீண்ட தூரம் சென்று கல்வி கற்பதிலுள்ள தடைகள் நீங்குதல், மத்திய தரவர்க்கத்தினர் எண்ணிக்கை அதிகரித்தல், கல்விக்காகச் செலவு செய்வதற்கான பெற்றோரின் சாதக மனப்பாங்கு அதிகரித்துச் செல்லல் என்பன அனுமதிக் கோரிக்கையை அதிகரிக்கும் என்பதால் பிரதேச ரீதியான புதிய பாடசாலைகளில் பௌதிக பண்புத்தர அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டியதாயுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டதாகவே அபிவிருத்திக்கான பாடசாலைகளின் இடந்தேடல்கள் இடம்பெற வேண்டும். பிரதேசமொன்றில் தேவைக்கேற்ற வளநிலையுடன் பெற்றோரின் எதிர்பார்ப்புக்கேற்ப பாடசாலை இல்லாத நிலையானது பாடசாலை அனுமதி தொடர்பான நெருக்கீடுகளைத் தோற்றுவிப்பதாகவே இருக்கும். அது மட்டுமன்றி அதிகரித்த மாணவர்களைக் கொண்ட வகுப்பறையுடைய பாடசாலைகள் குறைந்தளவான மாணவர்களைக் கொண்ட வகுப்பறையுடைய பாடசாலைகள் என்ற இரண்டு முரண்பட்ட பாடசாலைகள் செயற்படும் நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி செய்வதற்குரிய பாடசாலையைத் தெரிவு செய்யும்போது சமூக நீதியையும் கல்வியில் சம வாய்ப்பினையும் பிரதேச அபிவிருத்தியையும் இலக்காகக் கொள்வதன் அவசியமாகும் என்பதோடு செலவு நன்மை அணுகு முறையைத் தவிர்த்தலோடு சுயமான முறையில் வளர்ந்து செல்லக் கூடிய நிலையிலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தித் திட்டங்களுள் உள்வாங்கப்படுவது தவிர்க்கப்படுவதோடு வேறு புதியதோர் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பிலே கவனம் செலுத்தப்படுவதும் அவசியமாகும். இதன் மூலமே பாடசாலை பற்றிய பெற்றோரின் புலக்காட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தி அனுமதி தொடர்பான நெருக்கீடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பும் இயல்பே

இறப்பு- இந்த வார்த்தையை உச்சரிப்பதற்குக் கூட எனக்கு அச்சமாக இருக்கும்.

மரணத்தைப் பற்றி நினைத்தாலே எனக்குக் குலை நடுங்குகிறது. உலகில் உயிர் வாழ்க்கையில் நிச்சயமாக, வந்தே தீரும் என்று சொல்லக்கூடிய ஒரே விடயம் மரணம். மரணம் என்பது அஞ்சி நடுங்கக்கூடிய ஒரு விடயமல்ல என்பதை நீ உணர்ந்து கொள். பிறப்பைப் போல,இறப்பும் இயல்பான ஒன்றே.

இறைவன் திருவருளால் அளிக்கப்பட்ட இந்த உடல், உயிர் அணிந்து கொள்ளும் சட்டை போன்றது. சட்டை கிழிந்து விட்டால், நாம் வேறொரு சட்டை அணிந்து கொள்வது போல, உடலாகிய இந்தச் சட்டையை விட்டு, உயிர் வேறொரு உடலை அதாவது மற்றொரு சட்டையை அணிந்து கொள்கிறது.

இதுவே இறப்பும் பிறப்பும் ஆகும். ஓர் உயிர்க்கே பல பிறவிகள் உண்டு. இதனைப் பெரும்பாலான மதங்களும் ஒப்புக் கொள்கின்றன. ஓர் உயிர் மற்றொரு பிறவிக்குச் செல்லப் பெரிதும் துணை நிற்பது இறப்பு. உடலென்னும் சட்டையை என்றேனும் களைந்துதானே ஆகவேண்டும்.

சட்டையை ஒத்த இவ்வுடலைத் தள்ளும் முன்னே நான் சகச நிட்டையைப் பெற்று ஐயா நிர்விகற்பம் காண்பேனோ? என்பார் தாயுமானவர்.

உடலை ஆடையாக உடுத்திக் கொண்டு, உயிர் உலாவுகிறது. அந்த ஆடையை மெய்யென்று எண்ணுகிறது மனம். மனம், உடலை மெய் (உண்மை)யென்று எண்ணுவதால் தான் உடலுக்கு 'மெய்' என்று பெயர் வந்ததோ?

ஆடையை, உடல் களைந்து விட்டு, வேறொரு ஆடையை அணியவில்லையென்றால் அதன் பெயர், நிர்வாணம்.

அதுபோல் உயிர், உடலாகிய ஆடையைக் களைந்துவிட்டு, வேறொரு உடலை அடையாமல் இறைவன் திருவடியை அடைந்தால் அதுதான் மோட்சம். மோட்சத்துக்கும் 'நிர்வாணம்' என்றொரு பெயருண்டு.

உயிர், உடலாகிய ஆடையைக் களைந்து விட்டு, நிர்வாணத்தை (மோட்சத்தை) அடையவேண்டும். உயிர், வேறொரு ஆடையைச் சூடிக்கொள்வதற்கும் நிர்வாண நிலையை அடைவதற்கும் துணை புரிவது இறப்பு.

வாழும் காலத்தில் மனத்தில் நினைத்த ஆசைகளை அனுபவித்துத் தீர்ப்பதற்குள் இயமன் வந்து உயிரைக் கவர்ந்து சென்றுவிடுகிறான். பேணிக்காத்து வளர்த்த உடல், சொந்தமில்லாமல் போய்விடுகிறது.

உடல் மட்டுமல்ல, பாடுபட்டுத்தேடிய பொருள், பதவி,சொந்தம் என்று அனைத்தும் போய்விடுகிறது. ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல எமது வாழ்நாளில் ஒவ்வொரு நாளாகக் குறைந்து கொண்டே வருகிறது.

**தினமே செலச் செல வாழ்நாளும்**
**நீங்க செகத்து இருள் சொப்ப**
**பனமே எனவெளி கண்டே**
**இருக்கவும் பாசபந்த**
**இனமே துணையென் றிருந்தோம்**
**நமன்வரின் என்செய்குவோம்**
**மனமே நம் போலவுண் டோசுத்த**
**மூடரிவ் வையகத்தே**

என்பார் தாயுமானவர்.

உயிரை உடலிலிருந்து கவர்ந்ததும், பேச்சு மூச்சற்றுக் கிடக்கும் இவ்வுடலுக்குப் 'பிணம்' என்று பெயர். பிணத்தைச் சில மணி நேரத்துக்குள் அகற்றிவிட வேண்டும். இல்லையேல் துர்நாற்றம் அடிக்கும்.

உற்றாரும், உறவினரும் கூடி அழுது புலம்புவர். பின் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று எரிப்பர் அல்லது புதைப்பர்.

**''ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டுச்**
**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே''**

என்பார் திருமூலர்.

இறப்பு என்பது தூக்கம் வருவது போலவும், பிறப்பு என்பது தூங்கி விழிப்பது போலவும் என்பார் திருவள்ளுவர்.

''உறங்குவது போலும் சாக் காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

என்பது திருக்குறள்.

தூக்கம் என்பது எப்படி இயல்பான ஒன்றோ, அதுபோல் இறப்பும் இயல்பான ஒன்றே. அதற்காகத் துக்கப்படுவதும் வேதனைப்படுவதும் அறியாமையின் விளைவே. மரணத்தை எண்ணி நீ அஞ்சாதிரு. ஒன்று நடந்தே தீரும் என்றால் அதற்காக நீ வருத்தப்பட்டு என்ன பயன்?

இறப்பைக் கண்டு வருந்துவதை விடுத்து, இறப்புக்குப்பின், (கருப்)பையூருக்கு மீண்டும் வராமல் மெய்யூருக்குச் (இறைவன் திருவடி) செல்ல இந்தப் பிறவியைப் பயன்படுத்திக்கொள்.

உடல் என்பது நிரந்தரமானது அன்று. எனினும் நிலையான வீடு பேற்றை அடைய, நிலையற்ற இந்த உடல் ஒரு கருவியாகப் பயன்படுகிறது.



இந்தப் பிறவியைப் பயன்படுத்து இறைவன் திருவடியை அடைவதற்கு. இறப்பு என்பது கொடுமையல்ல. ஆன்மா விடுதலை அடைவதற்கான ஒரு வரம்.

**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# சமய நல்லிணக்கத்தை வளர்க்கும் திருநெல்வேலி சவேரியார் ஆலயம்




(கடந்தவாரத் தொடர்ச்சி.....)

**எஸ்.யேசுதாஸ்**

தென்கிழக்கு ஆசியாவில் பல்லாயிரம் மைல்கள் நடந்து இயேசுவின் நற்செய்தியைப் போதித்து சகுந்தல வலிமையால் அஞ்ஞானத்தை ஒழித்து மெய்ஞான தீபத்தை ஒளிரச்செய்த புனித பிரான்சிஸ் சவேரியாருக்கு திருநெல்வேலியில் கல்லினாலான பெரிய ஆலயம் அமைக்கும் முயற்சியை சுவாமி ஞானப்பிரகாசர் மேற்கொண்டார்.

அப்போது யாழ்.ஆயராக இருந்த மேதகு கென்றி யூலன் (அ.ம.தி) ஆண்டகையால் 1910 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி ஆலயத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. யாழ்.ஆயர் மற்றும் யாழ்.நகரப்பகுதி கத்தோலிக்க மக்களின் பங்களிப்புடன் ஆலயப் பணிகள் பூர்த்தியடைந்தன. 1915 ஆம் ஆண்டு முதல் சவேரியார் திருநாளை மாசி 2 ஆம் ஞாயிறு தினத்திலும் கொண்டாடும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆலயத்திற்கான குருமனையும் கட்டப்பட்டு 1916 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி புதிய ஆலயத்தில் முதல் திருப்பணி ஒப்புக்கொடுக்கப்பட்டது. சகோதரர் மனுவல் பணிமனைக்கு ஓடுபோடும் பணியைச் செய்து உதவினார்.

முற்றிலும் இந்து சமய சகோதரர் வாழும் சூழலில் அமையப் பெற்றுள்ள மேற்படி ஆலயத்தில் 1925 ஆம் ஆண்டளவில் 100 இற்கும் மேற்பட்டோர் கிறிஸ்தவர்களாகக் காணப்பட்டதாக ஆலய வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1915 ஆம் ஆண்டுமுதல் இந்த ஆலயத்தில் தங்கி இதை நடுநிலையமாக வைத்து பல இடங்களுக்கும் மறை பணியாற்றி நல்லூர் சுவாமி என சிறப்புப் பெயர் பெற்ற ஆலயஸ்தாபகர் ஞானப்பிரகாசர் சுவாமிகள் 1947 ஆம் ஆண்டு தைமாதம் 22 ஆம் திகதி இறையடி சேர்ந்தார். அவரது அரை உருவச் சிலை ஆலய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**இந்தப்பகுதி மாணவர்களின் கல்வி, சமய,அறிவை மேம்படுத்தும் நோக்கில் ஞானப்பிரகாசர் அடிகளாரினால் தோற்றுவிக்கப் பட்ட திருநெல்வேலி றோமன் கத்ரோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆலய வளாகத்தில் இயங்கி வருகிறது**

வேண்டும் வரங்களை வாரி வழங்கும் புனித சவேரியார் ஆலயத்தின் சிறப்பு வழிபாட்டு நிகழ்வாக அருள்வேண்டி செபித்தபடி நடந்துவரும் பாரம்பரியம் 1915 ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை நடை பெறுகிறது. இந்த ஆலயத்தின் நிர்வாகப் பங்கின் கீழுள்ள கோப்பாய் தெற்கு அமல உற்பவமாதா ஆலயம், கோப்பாய் வடக்கு புனித சூசையப்பர் ஆலயம், கொக்குவில் புனித சின்னப்பர் ஆலயம், கோப்பாய் தோட்டவெளி குழந்தையேசு சிற்றாலயம் மற்றும் யாழ். நகரப்பகுதிகளைச் சேர்ந்த மக்களும் இப்பாரம்பரியத் திருவிழாவில் வருடாந்தம் மாசி 4 - 12 வரை பங்குபற்றுவர்.

அமலமரித் தியாகிகள் சபையால் நிர்வகிக்கப்பட்டு வரும் இப்பங்கு ஆலயங்களின் பங்குத் தந்தையர்களாக ஞானப்பிரகாசம் சுவாமிகளைத் தொடர்ந்து எல்.அந்தோனிப்பிள்ளை பிலிப்ஸ், ஜே.ஏ.[illegible], பி.[illegible]பிள்ளை, ஜே.ஏ.பிரான்சிஸ், எல்.ஆர்.அன்ரனி (அண்மையில் மறைந்த ஆயர்), பிரான்சிஸ் குலாஸ் ஹென்றி ஜெலாண்ட், எஸ்.லோறன்ஸ் சேவியர், எஸ்.எஸ்.வில்வரசிங்கம், ஜே.ஏ.எக்ஸ்.தேவதாசன், எம். கருணாகரன், ஜே.எல்.செல்வரட்ணம், ஜே.எப். ஜெயசீலன், பிலிப் பொன்னையா, அன்ரன் றெக்ஸ், ஜே.எம்.ராஜகாரியர், பிரான்சிஸ் குலாஸ், பீ.சந்தியாப்பிள்ளை, ஏ.சகாயதாசன், எம்.குணசீலன், டானியல், செலஸ்ரின் மஸ்கிறிஞ்ஞ, சந்திரபோஸ் ஆகிய குருக்கள் கடமையாற்றியுள்ளனர்.

குறித்த ஆலயத்தின் வளர்ச்சியில் ஆயர்கள் , பங்குத் தந்தையர்களுடன் புனித பத்திரிசியார் கல்லூரியில் பணியாற்றிய குருக்கள் விடுதி மாணவர்கள் யாழ்.நகர கத்தோலிக்க மக்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தற்போதைய பங்குத் தந்தையாக அருட்திரு ஞா.வென்சஸ் சிலோஸ் (அ.ம.தி) அடிகள் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் வழிநடத்தலில் பணியாற்றி வருகிறார்.

குருவானவர் பணிமனை 1988 ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப்பட்டு அப்போதைய யாழ்.ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு ஆலய பீடப்பகுதி புனரமைப்புச் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கிறது.

இந்தப்பகுதி மாணவர்களின் கல்வி, சமய,அறிவை மேம்படுத்தும் நோக்கில் ஞானப்பிரகாசர் அடிகளாரினால் தோற்றுவிக்கப்பட்ட திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆலய வளாகத்தில் இயங்கி வருகிறது. தரம் 5 வரை இந்தப்பாடசாலையில் கல்வி புகட்டப்படுகிறது. அடிகளாரின் சமய, சமூகப் பணிகளைக் கௌரவிக்கும் வகையில் ஆலயப்பகுதியில் உள்ள வீதிக்கு ஞானப் பிரகாசர் வீதி எனப் பெயரிடப்பட்டுள்ளது.

புனித சவேரியார் அலய வருடாந்த திருவிழா டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. நவநாள் வழிபாடுகள் இந்தப்பங்கைச் சேர்ந்த ஆலயங்களுக்கும் ஆயர், ஆலய மற்றும் கத்தோலிக்க அமைப்புகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவது சிறப்பம்சமாகும். அத்துடன் புனிதரின் திருவிழாவுக்கான ஆயத்தப் பணிகளில் இந்தப்பகுதியைச் சேர்ந்த இந்துசமய இளைஞர்கள், பெரியவர்கள் எவ்வித வேறுபாடுகளுமின்றி சரீர ஒத்துழைப்பு , நிதி ஆதரவுகளை வழங்கி வருவது மதங்களுக்கிடையிலான நல்லுறவின் வெளிப்பாடாக உணரப்படுகிறது.

ஆலய தாபகரின் இலக்கு நிறைவேறும் வகையில் புனிதரின் பாதுகாவலில் அநேகமான கத்தோலிக்கர் பக்தி விசுவாசத்துடன் வாழ்ந்து வருகின்றனர். பிறமதத்தவர்களுடன் இணைந்து சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு புனித சவேரியாரின் மறைபோதக, பிறர் நலப் பிணிகளுக்கு சான்று கூறி அவரது அருள் வளங்களை நிறைவாகப் பெற்று இறைவனைப் போற்றுகின்றனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை மாவட்ட நில அதிர்வுகள்:

# பல்வேறு கோணங்களிலும் விரிவான ஆய்வுகள் அவசியம்

**பேராதனை பல்கலையின் பூகற்பவியல் பேராசிரியர் சொல்கிறார்**

அம்பாறை,டிசெ.18

அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் உணரப்படுகின்ற நில அதிர்வுகளுக்கான காரணத்தைக் கண்டறிவதற்கு விரிவான அடிப்படையில் ஆய்வுகள் நடத்தப்படுவது மிக அவசியம்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பூகற்பவியல் பேராசிரியர் கபில தஹநாயக்க நேற்று முன்தினம் இதனை வலியுறுத்தினார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சில பிரதேசங்களில் கடந்த சில நாள்களாக நில அதிர்வு உணரப்படுவது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அதிர்வுகளுக்கு பிரதேசத்தில் குழாய்க் கிணறுகளின் பாவனை அதிகரிப்பே காரணமாக அமைய முடியும்.

அதன் காரணத்தினால் நில அதிர்வுகள் உணரப்படுகின்ற பிரதேசத்தின் மழை வீழ்ச்சி, நீர்ப்பாவனை, குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை, நாளாந்த வெப்ப நிலை, நில அமைப்பு, காலநிலை ஆகிய விடயங்களில் விசேட கவனம் செலுத்தி ஆய்வுகள் நடத்தப்படுவது அவசியம்.

குழாய்க் கிணறுகள் பூமியில் பாறைகள் வரை அமைக்கப்படுகின்றன. இதனூடாகப் பாறைகளின் கீழ் இருந்தே நீர் பெறப்படுகின்றது. அங்கு நீர் குறையும்போது வெற்றிடம் ஏற்படும். அதனால் பாறையில் அழுத்தம் ஏற்படும். அதன் விளைவாகப் பாறைகளில் வெடிப்புகள் ஏற்படலாம். அந்த வெடிப்புக்களின் சத்தம் அதிர்வாக வெளிப்பட முடியும்.

எனினும் இதுகுறித்து



விரிவான அடிப்படையில் ஆய்வு நடத்தும்போதுதான் இந்த அதிர்வுகளுக்கான காரணத்தைச் சரியாகக் கண்டறியக் கூடியதாக இருக்கும்.- என்றார்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் கடந்த சனிக்கிழமை இரண்டு சிறிய நில அதிர்வுகள் உணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ. மன்சூர் புல்மோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் சென்று வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

## அம்பாறை மாவட்ட வைத்தியர்களும் பகிஷ்கரிப்பில்

அம்பாறை,டிசெ.18

அம்பாறை மாவட்ட வைத்தியசாலைகள் பலவற்றின் வைத்தியர்கள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

மேலதிக வேலை நேரத்துக்கான கொடுப்பனவை வழங்காமையை கண்டித்து இந்தப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளனர் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் நவீன் த சொய்சா தெரிவித்தார்.

அம்பாறை பிரதேச வைத்தியர்கள் மற்றும் தெஹிஅத்தகண்டிய, மகாஓய ஆகிய பொது வைத்திய சாலையைச் சேர்ந்த வைத்தியர்கள் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு உரியவர்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைந்துள்ளது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச)

## மலை உச்சியில் சிக்கிய

# பல்கலை மாணவர் காப்பாற்றப்பட்டனர்

கண்டி, ஹந்தானை மலைப்பகுதியை பார்வையிடுவதற்காக சென்று, திரும்ப முடியாது தவித்துக் கொண்டிருந்த மாணவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களே இவ்வாறு மலைப் பகுதியில் சென்றிருந்த நிலையில் திரும்ப முடியாது தவித்துள்ளனர். மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இந்த மாணவர்கள் மலைப் பகுதியில் சிக்கிக் கொண்டனர்.

இவ்வாறு 250 பல்கலைக் கழக மாணவர்கள் மலை உச்சியில் தவித்துக் கொண்டிருந்தனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இவர்களை மலையடி வாரத்துக்குக் கொண்டு வரும் பணி பொலிஸ் மற்றும் இராணுவத்தினரது ஒத்துழைப்புடன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் மாணவர்கள் அனைவரும் நேற்று திங்கட்கிழமை அதிகாலை பாதுகாப்பாகத் திரும்பினர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

## புதையல் அகழ்ந்த ஆறு பேர் சிக்கினர்

திருகோணமலை,டிசெ.18

திருகோணமலை, உப்புவெளி, ஆனந்தகுளம் பிரதேசத் தில் புதையல் அகழ்ந்து கொண்டிருந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நபர்கள் புதையல் அகழும் நடவடிக்கைக்காக நிலத்தை அகழ்ந்து கொண்டிருக்கும் போதே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## விபத்தில் சிக்கி ஆலய பிரதமகுரு படுகாயம்



எருவில்,டிசெ.18

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆலய பூசகர் ஒருவர் தலை, கை, கால்களில் படுகாயமடைந்துள்ளார்.

கல்லடி, இராமகிருஷ்ண மிஷனுக்கு அருகில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் பழுகாமம், மாவற்குடா பிள்ளையார் ஆலயத்தின் பிரதமகுருவே படுகாயமடைந்துள்ளார்.

இவர் பூசையை முடித்துவிட்டு மட்டக்களப்பில் உள்ள தனது வீட்டுக்குச் மோட்டார் சைக்கிளில் சென்றபோது, வீதியில் ஏற்பட்ட சறுக்கல் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-31)

## இணைந்து செயற்பட்டால் குற்றச்செயலை தடுக்கலாம்

**களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆலோசனை**

எருவில்,டிசெ.18

பொலிஸாருடன் இணைந்து பொதுமக்கள் செயற்படும் போதே குற்றச்செயல்களை தடுக்கமுடியும் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி. ஆர்.மானவடு தெரிவித்தார்.

மட்டக்களப்பு, குருமண்வெளி சித்திவிநாயகர் ஆலய முன்றிலில் மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள், ஆலயங்களின் நிர்வாகிகள், கிராமசேவகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருட்டுச் சம்பவங்களை தடுக்கும் நோக்கிலேயே மக்களை விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## அனைவரையும் கவர்ந்த கல்முனை மாநகர 'பட்ஜட்'

**பிரதி முதல்வர் நிசாம் காரியப்பர் தெரிவிப்பு**

எருவில்,டிசெ.18

கல்முனை மாநகர முதல்வர் முன்வைத்துள்ள வரவு - செலவுத் திட்டமானது மாநகர சபை எல்லைக்குள் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுடைய கருத்துக்களைப் பெற்றுத் தயாரிக்கப்பட்ட வெளிப்படைத் தன்மை கொண்ட திட்டமாகும். இதனை அனைவரையும் கவர்ந்த பட்ஜட் என்றும் சொல்லலாம்.

இவ்வாறு கல்முனை மாநகர பிரதி முதல்வர் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவு மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப்பால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முதல்வர் இந்த வரவு - செலவுத் திட்டத்தை சபையில் முன்வைப்பதற்கு முன்னர், பொதுமக்கள், கல்வி அதிகாரிகள், சட்டத்தரணிகள், மாநகர சபை உறுப்பினர்கள் என அனைத்துத் தரப்பினருடனும் பலமுறை கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி தயாரிக்கப்பட்டது.

இதில் ஒரு சில குறைபாடுகள் காணப்பட்டபோதிலும் மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு சிறந்த வரவு - செலவுத் திட்டமாக அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறு சகல தரப்பினருடனும் கலந்துரையாடி கருத்துக்களை உள்வாங்கி வரவு - செலவுத் திட்டத்தை முன்வைப்பது எதிர்கால முதல்வர்களுக்கு சிரமமாக அமையும்.- என்றார். இந்த வரவு - செலவுத் திட்ட முன்மொழிவு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறப்பு

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று நேற்று திங்கட்கிழமை திறந்து விடப்பட்டுள்ளது.

மலையகத்தில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் இந்த வான்கதவு திறந்து விடப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நுவரெலியா மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது. (ச)

# தமிழரசுக் கட்சியின் மட்டு.இளைஞர் அணி

**நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம்**



எருவில்,டிசெ.18

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணி அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தநிகழ்வு மட்டக்களப்பு, நல்லையா வீதியிலுள்ள தமிழரசுக் கட்சி மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், மாகாண சபை உறுப்பினர்களான கி.துரைராஜசிங்கம், மா.நடராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கின் சகல மாவட்டங்களிலும் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி அமைக்கப்பட்டு வருவதுடன், அடுத்த வருடம் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## மலையகத்தில் மழை தொடர்ந்தால் ஆபத்து அதிகம்

கண்டி,டிசெ.18

கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை ஆகிய மாவட்டங்களில் மழையுடன் கூடிய காலநிலை தொடருமானால், குறித்த பிரதேசங்களில் ஆபத்துக்கள் ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் மண்சரிவு மற்றும் மலை சரிந்து விழும் அபாயங்கள் இருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே இந்தப் பிரதேச மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அந்த நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை மாத்தளை பிரதேசத்தில் மண்சரிவு காரணமாக 16 வயதான சிறுமி உயிரிழந்துள்ளார். சிறுமியின் தாயார் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிட்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்:** காலைப் பொழுதிலிருந்தே மகிழ்ச்சி கிடைக்கும். குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். வீதிகளைக் கவனமாகக் கடந்து செல்லுங்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் விரையம் வரும். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கடகம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். விருந்தினர்களின் வருகை உண்டு. சகோதர வகையில் மகிழ்ச்சி கிட்டும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களின் ஆதரவு கிட்டும். கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**கன்னி:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். உடன்பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

**நாளை**

மார்கழி -04 புதன்கிழமை 19.12.2012
திதி: ஸப்தமி பி.இ 04.25 வரை
நட்சத்திரம்: சதயம் பி.ப 01.29 வரை
சுபநேரம்: 04.54- 06.24 வரை .
ராகுகாலம்: 12.24- 01.54 வரை

**துலாம்:** உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய் வழி உறவினர்களின் ஆதரவு கிட்டும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**தனுசு:** நீண்ட நாளாக தள்ளிப்போன காரியங்கள் இன்று முடியும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.

**மகரம்:** எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. குடும்பத்தில் சண்டை, சச்சரவு வந்து போகும். பணம், நகையை கவனமாகக் கையாளுங்கள். சிக்கனமாக இருங்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியத்தைத் தவிருங்கள்.

**கும்பம்:** உறவினர்கள், நண்பர்களின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். வியாபாரத்தில் வேலையாள்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் அதிகாரியிடம் விவாதத்தைத் தவிருங்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 9 | 2 | 7 | | 4 | | |
| 4 | | | 8 | 9 | | | 2 | 5 |
| | 1 | 2 | | | | 7 | | |
| | | 7 | | 2 | | | | 9 |
| 5 | | | | 3 | | | | 2 |
| 6 | | | | 8 | | 5 | | |
| | | 4 | | | | 6 | 5 | |
| 9 | 6 | | | 5 | 7 | | | 3 |
| | | 5 | | 6 | 2 | 9 | | 1 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 2 | 3 | 6 | 1 | 9 | 4 | 7 |
| 4 | 3 | 9 | 5 | 8 | 7 | 6 | 1 | 2 |
| 1 | 6 | 7 | 2 | 4 | 9 | 5 | 3 | 8 |
| 3 | 1 | 8 | 7 | 5 | 2 | 4 | 9 | 6 |
| 7 | 9 | 6 | 8 | 3 | 4 | 2 | 5 | 1 |
| 2 | 4 | 5 | 9 | 1 | 6 | 7 | 8 | 3 |
| 6 | 5 | 3 | 4 | 2 | 8 | 1 | 7 | 9 |
| 8 | 7 | 1 | 6 | 9 | 5 | 3 | 2 | 4 |
| 9 | 2 | 4 | 1 | 7 | 3 | 8 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# மரண அறிவித்தல்

## திருமதி சண்முகம் கண்மணி (அன்னம்மா)



புத்தூர் வடக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கண்மணி 16.12.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணை- முத்தம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் பரிமளம், பரமகுரு ஆகியோரின் சகோதரியும், வசந்தாவின் தாயும், சந்திரசேகரத்தின் மாமியும், சண்முகலிங்கம் நித்தியகலாவின் பெரியதாயும் ஆவார்.

அவரது இறுதிக் கிரியைகள் இன்று(18.12.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புத்தூர் கிந்திட்டி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

(26885)(5-6-7)

குடும்பத்தினர்.


## வீதி அகலிப்பு வாய்க்காலுக்குள் வீழ்ந்து குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி,டிசெ.18

வீதி அகலிப்புக்காக வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த வாய்க்காலிலுள் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

வீதியில் வாகனங்களின் வெளிச்சம் கண்களை மறைத்ததால் சைக்கிளை வீதியோரமாக நிறுத்திய போது போடப்பட்டிருந்த வாய்க்காலுக்குள் தவறி வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலியைச் சேர்ந்த செல்லத்துரை நாகராசா (வயது-49) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (3-9)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
215671111



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
தம்பு சிதம்பரநாதன்
(குமரபுரம்,பரந்தன்)
(பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற ஊழியர்)

பிறப்பு
31★12★1945

இறப்பு
18★11★2012

மலேரியாத் தடுப்பு இயக்கப் பணியாளர், சிதம்பரநாதன் சந்திரகுமார் அவர்களின் தந்தை தம்பு சிதம்பரநாதனின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம். இன்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை நடைபெறும் நினைவு தினத்தில், அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மலேரியாத் தடுப்பு இயக்க பணிமனை-கிளிநொச்சி.

ஊழியர் நலன்புரி சங்கம் மலேரியா தடுப்பு இயக்கம்-கிளிநொச்சி.



# ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு
02.07.1985

இறப்பு
18.12.2007

அமரர்
நாகரட்ணம்
மயூரன்
(யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவ மாணவன்)

ஓய்ந்து விட்டது டைலை என்றெண்ணலாமோ.
ஐந்தாண்டு சென்ற பின்னும் அலைவில்லையடா
உன் நினைவலைகள் மாலை வந்ததும் சூரியன் மறைந்தாலும்
எம் மனதை விட்டு மறைய வில்லையடா உன் உருவ நினைவலைகள்
மரணபயம் எமக்குள்ள போதும் மனம்
கலங்காமல் நீயிருந்தாயடா அன்று
மீளாத துயரை எமக்கு தந்து விட்டு சென்றுவிட்டாயடா
என்றும் உன் ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.

325, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்கார் நேற்று திங்கட்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

# கடன் வழங்குவதை நிறுத்தியது சீனா

கொழும்பு,டிசெ.18

இலங்கைக்கு நீர் மின் சாரத் திட்டத்துக்காக வழங்கப்படவிருந்த 8.9 பில்லியன் ரூபா கடனை சீனா நிறுத்தியுள்ளது.

இலங்கை அரசு சீனாவின் காப்புறுதி நிறுவனத்துக்கு காப்புறுதிக் கட்டணமாக செலுத்தவுள்ள 627 மில்லியன் ரூபாவைச் செலுத்தும் வரை இந்தக் கடன் வழங்குவதை சீன அரசு நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் தேசிய மின்சாரத் துறை உபகரணக் கூட்டுத்தாபனம், அங்குள்ள வங்கி ஒன்றின் ஊடாக களனி கங்கை நீர்மின்சார திட்டத்துக்காக இலங்கைக்கு கடன் வழங்குவதாக உறுதியளித்திருந்தது.

எனினும் இதனை வழங்குவதற்கு முன்னர் இலங்கை அரசு, குறித்த தொகையில் 7 வீதமான 627 மில்லியன் ரூபாவை காப்புறுதிக் கட்டணமாக சீன காப்புறுதி நிறுவனத்துக்கு செலுத்தவேண்டும் என்று சீன அரசு கோரியுள்ளது. இந்தநிலையில் குறித்த காப்புறுதித் தொகை செலுத்தப்பட்டால் மாத்திரமே கடனை வழங்க முடியும் என்று சீன அரசு இலங்கைக்கு அறிவித்துள்ளது. (ச)

# வாகன விபத்தில் மூவர் சாவு; 10 பேர் காயம்

கொழும்பு,டிசெ.18

கடுவளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடுவளை, வெலிவிட்ட என்னுமிடத்திலேயே இந்த விபத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற திருமண வீடொன்றுக்கு சென்று யட்டியந்தோட்டைக்கு திரும்பிக்கொண்டிருந்த வான், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மற்றும் லொறி ஆகியவற்றுடன் ஒன்றோடு ஒன்று மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் முல்லேரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# நட்டத்தை ஈடு செய்யவே பெற்றோல் விலை அதிகரிப்பு

## அமைச்சர் சுசில் கூறுகிறார்



கொழும்பு,டிசெ.18

நட்டத்தை ஈடு செய்யும் நோக்கிலேயே பெற்றோலின் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்று பெற்றோலிய வளத் துறை அமைச்சர் சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோல் இறக்குமதி செய்யும் போது 10 முதல் 12 ரூபா வரையில் நட்டம் ஏற்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார். இந்த நட்டத்தை ஈடு செய்யும் நோக்கிலேயே விலை அதிகரிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

ஒரு லீற்றர் டீசல் இறக்குமதி செய்யும் போது 16 ரூபாவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் இறக்குமதி செய்யும் போது 26 ரூபாவும் நட்டம் ஏற்படுகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மசகு எண்ணெய் இறக்குமதியால் ஒரு லீற்றருக்கு 40 ரூபா நட்டம் ஏற்படுகிறது. இந்த நட்டங்களை ஈடு செய்வதற்காகவே பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

இதேவேளை, எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்க் கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஐ.தே.க.பதவிகளில் ஜனவரியில் மாற்றம்

## செயற்குழுவில் எதிர்ப்பு வெளியிடப்பட்டால் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்கிறார் திஸ்ஸ

கொழும்பு,டிசெ.18

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் உட்பட பிரதான பதவிகளுக்கு தகுதி உடையோர் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் நியமிக்கப்படுவர் என்று ஐ. தே. க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

3 பிரதான பதவிகளுக்கும் ஆள்களை நியமிக்கும் போது முழு செயற்குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் எதிர்ப்பு வெளியிட்டால், மற்று மொரு பெயர் பிரேரிக்கப்படும். அதற்காக வாக்கெடுப்பும் நடத்தப்படும் என்று அவர் கூறினார்.



செயற்குழுவில் 92 பேர் உள்ளனர். இதில் 31 பேர் பிரேரிக்கும் வேட்பாளருக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதான மூன்று பதவிகளில் இரு பதவிகளுக்காக கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் விஜேவர்தனவின் பெயரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவின் பெயரும் முன்வைக்கப்படும் என்று ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

# தீ விபத்தில் இரு பிள்ளைகளும் தாயும் சாவு

கொழும்பு,டிசெ.18

இரத்மலானையில் ஏற்பட்ட தீ விபத்தால் தாயும் அவரின் இரண்டு பிள்ளைகளும் உயிரிழந்துள்ளனர்.

இரத்மலானை, கல்தேமுல்லைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே நேற்று திங்கட்கிழமை காலை இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக் கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்று பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

# வடமத்திய மாகாணத்தில் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம்

கொழும்பு,டிசெ.18

அடுத்த வருடம் பூர்த்தியாவதற்குள் வடமத்திய மாகாணத்திலுள்ள சகல வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வடமத்திய மாகாண முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவி ஏற்கும்போது வடமத்திய மாகாணத்தில் 40 வீதமான கிராமங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்பொழுது 98 வீதமாகக் காணப்படுகிறது என்று அவர் கூறினார்.

இதேவேளை அடுத்த வருட ஆரம்பத்தில் பொலநறுவை மாவட்டத்திலுள்ள சகல கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வந்துரம்பையிலும் சிவப்பு மழை!

கொழும்பு,டிசெ.18

காலி,வந்துரம்பையில் நேற்று திங்கட்கிழமை சிவப்பு மழை பெய்துள்ளது என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

காலி, வந்துரம்பையிலேயே சுமார் 15 நிமிடங்கள் சிவப்பு மழை பெய்துள்ளது.

ஏற்கனவே பொலனறுவையில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த சிவப்பு மழை காரணமாக நாய்கள் பல இறந்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை நாட்டின் வேறுசில இடங்களிலும் அண்மைக் காலத்தில் சிவப்பு மழை பெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பஹ்ரெய்னில் இலங்கைத் தூதரகம்

கொழும்பு,டிசெ.18

பஹ்ரெய்னில் இலங்கை தூதரகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பஹ்ரெய்னில் சுமார் 20,000 இலங்கையர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கைத் தூதரகம் ஒன்றை அமைப்பதன் மூலம் பஹ்ரெய்னில் வாழும் இலங்கையர்கள் கூடுதல் நன்மை அடைவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கைக்குண்டுடன் ஒருவர் மாட்டினார்

கொழும்பு,டிசெ.18

மிட்டியாகொட, அளுத்வெல சந்தியில் கைக்குண்டு ஒன்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அளுத்வெல சந்தியில் ஓட்டோ ஒன்றை சோதனையிட்ட பொலிஸ் அதிகாரிகள் அதிலிருந்து இந்தக் கைக்குண்டை மீட்டுள்ளனர்.

சந்தேகநபர் பலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளில் மிட்டியாகொட பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# கணித பாட வினாத்தாள் முன்பே வெளியானதா?

## விசாரிக்கின்றனர் பொலிஸார்

ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற கணித பாட வினாத்தாள் தொடர்பில் பரீட்சைக்கு முன்னர் சில பிரதேசங்களில் தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரால் எடுத்துக் கூறப்பட்டு கலந்துரையாடப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பரீட்சைகள் ஆணையாளரால், பொலிஸாருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே இந்த விசாரணை மெற்கொள்ளப்பட்டது.

சிதுல்கல,நாவலப்பிட்டிய போன்ற பிரதேசங்களில் இவ்வாறான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன என்று கூறப்பட்டது. எனினும் இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்தஆசிரியரிடம் விசாரணை செய்தபோது, வினாத்தாள் பரீட்சைக்கு முன்னர் வெளியிடப்படவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை விஞ்ஞான பாட வினாத்தாள் பரீட்சைக்கு முன்னராக வெளியாகிவிட்டதா? என்பது தொடர்பிலும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சட்டக் கல்லூரியும் முஸ்லிம் மயமாகிறது

## தேசிய புத்திஜீவிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.18

சட்டக் கல்லூரியை முஸ்லிம் மயமாக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் துணை நிறுவனமான தேசிய புத்திஜீவிகள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

சட்டக் கல்லூரி அனுமதிக்கான போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் மூலம் இந்த முஸ்லிம் மயமாக்கல் அம்பலமாகியுள்ளது.

இந்தமுறை பரீட்சை வினாத்தாள் மதிப்பீடுகளில் முறைகேடு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று அந்தச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் மீண்டும் பரீட்சை நடத்தப்பட வேண்டும். ஆண்டுதோறும் நடைபெறும் போட்டிப் பரீட்சைக்காக 11,000 பேர் விண்ணப்பித்தபோதிலும், 300 வரையிலான மாணவர்களே சட்டக் கல்லூரியில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர் என்று தேசிய புத்திஜீவிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சிங்கள மொழி மூலம் 80 வீதமானவர்களும், தமிழ் மொழி மூலம் 5 வீதமானவர்களும், ஆங்கிலமொழி மூலம் 15 வீதமானவர்களும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இந்தமுறைப் பரீட்சையில் 309 பேர் சட்டக் கல்லூரிக்காக சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். அதில் 191 சிங்கள மாணவர்களும், 40 தமிழ் மாணவர்களும், 78 முஸ்லிம் மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர். தமிழ், முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை சடுதியான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது என்று தேசிய புத்திஜீவிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட 50 மாணவர்களில் 28 பேர் முஸ்லிம்களாகும்.

முதல் முறையாக பிரதான இடங்களைப் பெற்றுக் கொண்ட மூன்று மாணவர்களும் முஸ்லிம்கள் என்று தேசிய புத்திஜீவிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# விபத்தில் மூவர் காயம்

வலி வடக்கு, டிசெ. 18

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் மூவர் படுகாயங்களுக்கு ஆளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்மூலம் அனுப்பி வைக்கப்பட்டார்.

நேற்று காலை 8.15 மணியளவில் சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள பொது நூலகத்துக்கு அண்மையில் இந்த விபத்து இடம் பெற்றது.

காங்கேசன்துறை வீதிவழியாக வந்த மோட்டார் சைக்கிள் சுன்னாகம் பிரதேச செயலக ஒழுங்கையில்திரும்பிய வேளையில் பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது.

உடுவில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அலுவலரான வாகீசன் (வயது 42) என்பவர் தலையில் காயத்துடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

(ம-86)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

15.12.2012 அன்று கொழும்பு
யோன் டி சில்வா அரங்கில்
"கலாபூஷண" விருதினைப் பெற்ற

**திரு.ஆறுமுகம் சிவலிங்கம்**

அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி
மா.பாலசுப்பிரமணியம்
குடும்பத்தினர்.

நாவலடி வீதி,
திருநெல்வேலி.

[26888][24]


## நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டொன்று ஆனது



அமரர்
**தேசிங்கம் குலேந்திரராசா** (குட்டி)
(மல்லிகா ரான்ஸ்போட் உரிமையாளர்)
திதி:- பூர்வபக்க ஷஷ்டி

குலம் மகிழ 27.05.1954
குவலயம் நெகிழ 30.11.2011

எம் குடும்பத்தின் மூத்த குலவிளக்காய்
எமக்கெல்லாம் ஒளி தந்து நல்வழி காட்டிய
எம் தீபம் அணைந்து ஓராண்டு கடந்தாலும்
எம் நினைவினிலே என்றும் எம்மோடு வாழ்ந்து
எமை வழிநடத்திச் செல்வீரப்பா
மாறாது உம் நினைவு ஆறாது எம் துயரம்

'தேவி பவனம்' வல்லியாவத்தை,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.
தொ.பே.: 021 321 8677

குடும்பத்தினர்.

25567/5.7


## இதோ! புலமைப் பரிசில் முன்னணிக் கையேடு வெளிவந்துவிட்டது

புலமை 10

17.12.2012 - 23.12.2012

**புலமைச்சுடர்**

திங்கட்கிழமை தோறும் வெளிவரும் முதற்தரக் கையேடு

புலமை : 10 பக்கங்கள் : 20

பிரபல ஆசிரியர்களின் ஒன்றிணைந்த படைப்பு

தரம் 4, 5 மாணவர்களுக்குரியது



இவ்வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் கிழக்குமாகாணத்தில் 188 புள்ளிகளைப் பெற்ற மட்/மீரா பாலிகா தேசிய பாடசாலை மாணவி செல்வி முஹம்மது லாபிர் பாத்திமா நிஃபாஸுடனான நேர்காணல் 02 ஆம் பக்கத்தில் பிரசுரமாகின்றது. இவரை இந்நிலைக்கு உயர்த்திய பெற்றோருக்கும், பாடசாலைச் சமூகத்தினருக்கும் புலமைச்சுடர் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள
உதயன், சுடர்ஒளி முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855
வடமாகாணத்தொடர்புகளுக்கு - 0... ...22



## தேவை

கணினி அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு: 021 222 7885

(சி/2644)(2.4)


## மரண அறிவித்தல்

### இளையதம்பி குமாரசாமி



அராலியைப் பிறப்பிடமாகவும், 521, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி குமாரசாமி நேற்று (17.12.2012) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சாந்திக்குமார் மற்றும் செல்வக்குமார் (உதயன், உதவி ஆசிரியர்), உதயகுமார் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசிலாதேவி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் புத்தூர் பிரதேச சபை), அருந்தவலட்சுமி (ஆசிரியை, புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும், பிறைவாணன், அபிஷா, கேதுயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், கு. செல்வக்குமார், கு. உதயகுமார்.

521, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2647)(3.14)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 21.08.1954
ஆண்டவன் திருவடியில் 25.12.2006

**தம்பிராசா தம்பிநாயகம்** (மாத்தையா)

(769 இலக்க மினிபஸ் சாரதி)
(திதி - ஷஷ்டி)

ஆறு ஆண்டுகள் மறைந்தாலும் எங்கள் அன்புத் தெய்வமே அப்பா
உங்கள் அன்பும் பாசமும் எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை
கண்களில் கண்ணீர் மல்க மனமே தவிக்கின்றது
பண்பிற்கும் பாசத்திற்கும் கல்விக்கும் அயராது உழைத்த தெய்வமே அப்பா
உறங்கும் போதெல்லாம் ஒளிவிளக்காய்
வாழ்ந்த தெய்வமே மறப்போமா உங்கள் நினைவுகளை அப்பா
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

A.G.A Office Lane,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்.

26744 6.10

## மரண அறிவித்தல்

### சதாசிவம் பத்மநாதன்

(பம்பா முன்னாள் பங்காளர், கொழும்பு,புறக்கோட்டை ,5ஆம் குறுக்குத்தெரு விஜயா ரேடிங் ஏஜென்சியின்)



யாழ். சுண்டுக்குளி விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிட மாகவும் கொண்ட சதாசிவம் பத்மநாதன் 14.12.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் யாழ். சுண்டுக்குளியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சதாசிவம்-சீதை (சுருவில்) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், ஆனைப்பந்தியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும்,விமலாதேவியின் அன்புக் கணவரும், ரவிசங்கர், அர்ச்சுனா ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும்,லண்டனில் வசிக்கும் யோகராஜா,ராணி,அருணகிரி, ரகுநாதன்,ரதி(கனடா), ரேவதி, நாவேந்தன், அம்பிகா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரயோகி, துவாரகா ஆகியோரின் அருமை மாமனாரும், ஜற்றின், தருண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(19.12.2012)புதன்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30,விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
வி.சச்சிதானந்தன்
(ஓய்வு நிலை அதிபர்
ஒன்றுவிட்ட சகோதரன்)

லண்டன் தொடர்புகளுக்கு:
ரவிசங்கர் (பிரித்தானியா)
தொ.பே.: +4420 8908 0551,செ.பே.: +4479 3920 2518
யோகராஜா (பிரித்தானியா)
தொ.பே: +4420 8723 4900, செ.பே.: +4479 5428 7327

(26886)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# இதுவரை காலத்தில் எந்த நாட்டிலும் பயன்படுத்தாத இரசாயன ஆயுதங்களை இலங்கை பயன்படுத்தியது

## பி.பி.சி செய்தியாளர் ஹரிசன் குற்றச்சாட்டு

பாதுகாப்பு வலயத்தில் வைத்து ஆட்டிலறிகள், மோட்டார்கள், றொக்கட் லோஞ்சர்கள், சுப்பர் சொனிக் ஜெட்களைப் பயன்படுத்தியே இலங்கைப் படையினரால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதுவரை எந்த நாட்டிலும் பயன்படுத்தப்படாத, கொடூரமான இரசாயன ஆயுதங்களை இலங்கை அரசு போரில் பயன்படுத்தியுள்ளது என்று பி.பி.சி செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்த நான்காம் கட்டபோர் குறித்து ஹரிசன் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழியாக்கம், ''ஈழம்: சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்'' என்ற தலைப்பில், கடந்த சனிக்கிழமை சென்னையில் வெளியிடப்பட்டது.

அந்த நிகழ்வில் கொழும்பில் முன்னர் பி.பி.சி செய்தியாளராகக் கடமையாற்றிய நூலாசிரியர் பிரான்சிஸ் ஹரிசன் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரின் விளைவுகளைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு, புனரமைப்புப் பணிகளைச் செய்ய, இலங்கை அரசு முன்வந்தால் தான், அமைதியான சமூகத்தை அந்த நாட்டில் கட்டியெழுப்ப முடியும். இலங்கையில் போர் முடிந்து நான்கு ஆண்டுகளாகின்றன.

ஆனால், போரில் இறந்தவர்கள் எத்தனை பேர், படுகாயம் அடைந்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு, காணாமற் போனவர்கள் கதி என்ன என்பன போன்ற விவரங்கள் வெளியாகவே இல்லை.

போர் இறப்பு குறித்து, ஐ.நா. வெளியிட்ட முதல் தகவலில், 40 ஆயிரம் பேர் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், கடந்தவாரம் வெளியான ஐ.நா.வின் இன்னொரு அறிக்கையில், 70 ஆயிரம் பேர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



நூல் வெளியீட்டின் போது...

உலக வங்கியின் புள்ளி விவரங்களின்படி, 2006 முதல் 2010ம் ஆண்டு வரை, ஒரு லட்சம் பேர், வன்னியில் காணாமற் போயுள்ளனர். இதுவரை அவர்கள் என்னவாயினர் என்றும் தெரியவில்லை.

இந்த உயிரிழப்புகளும், மனித பாதிப்புகளும், 35 சதுர கி.மீ பரப்பளவில் 130 நாள்களில் நடந்துள்ளன.

இலங்கை அரசு, எந்தப் புள்ளிவிவரங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவோம் என்று கூறும் இலங்கை அரசு, குறைந்தபட்ச உண்மைகளைக் கூட ஏற்க மறுப்பதால், புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவோம் என்ற வாக்குறுதியை, அனைத்துலக சமூகம் நம்ப மறுக்கிறது.

போரில் பாதிக்கப்பட்ட பலரை நான் சந்தித்தேன். சிலரது விவரங்களையும், செவ்விகளையும் மட்டுமே, நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

கொலைக்கும், தற்கொலைக்கும் அஞ்சாதவர்கள் விடுதலைப் புலிகள். குறிப்பாக, கடற்புலிகள் எதற்கும் நிலைகுலையக் கூடியவர்கள் அல்லர்.

ஆனால், அவர்களே, போரில் நடந்த கொலைகளைப் பார்த்து நிலைகுலைந்து போய் உள்ளனர்- என்றார்.

இந்த நிகழ்வில் காயத்துக்கு மருந்திடத் தாமதித்ததால், உயிரிழந்த ஒரு மதகுருவின் நிலை, தனது குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த ஒரு தாயாரின் மரணத்தின் இறுதி நிமிடங்களைக் கண்ட ஒரு செய்தியாளரின் பதிவு ஆகியவற்றையும் பிரான்சிஸ் ஹரிசன் மிகத் தெளிவாக விவரித்திருக்கிறார். (3)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (3)

## மணியந்தோட்டத்துக்குச் சென்றார் யாழ்.ஆயர்

கொழும்புத்துறை,டிசெ.18

மீள்குடியமர்ந்த மணியந் தோட்டம் கிராமத்துக்கு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை நேற்று முன்தினம் வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

அதன்போது மணியந்தோட்டம், உதயபுரம், வசந்தபுரம் பகுதிகளைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்களுக்கு உறுதி பூசுதல், திருவருள் சாதனம் வழங்கும் சடங்கு கர்த்தர் ஆலயத்தில் ஆயர் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. 60 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள், பெரியோருக்கு உறுதிபூசுதல் வழங்கப்பட்டது.

அதே வேளை மணியந் தோட்டம் கிராமத்தின் குறை நிறைகளை மக்களிடம் ஆயர் கேட்டறிந்து கொண்டார்.

சேதமடைந்த கர்த்தர் ஆலயத்தைக் கட்டி எழுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் ஆலய நிர்வாகத்தினரை விரைவில் தனது பணிமனையில் சந்தித்து ஆலய, மற்றும் சமூக நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாட உள்ளதாகவும் ஆயர் அங்கு குறிப்பிட்டார். (3-135)

## பொம்மைவெளி, காக்கைதீவுப் பகுதிகளில் வீதிகளுக்குப் புதிய வடிகால்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

பொம்மைவெளி, காக்கைதீவுப் பகுதியின் வீதிகளுக்கு புதி தாக வடிகால்கள் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இந்தப்பிரதேச அராலி பிரதான வீதியில் அமைக் கப்பட்டு வரும் இந்த வடிகால் வாய்க்கால் மூலம் வெள்ளத்தை கடலுக்கு வழிந்தோடச் செய்ய முடியும்.

மாரி காலங்களில் குடியிருப்புப் பகுதியில் தேங்கும் வெள்ளத்தை அகற்றும் முகமாகவே இந்த வடிகால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது இந்த வடிகால் பொம்மை வெளி பிரதேசத்தில் முதற்கட்டமாக அமைக்கப்படுகின்றது. (3-17)

## மரண அறிவித்தல்

### நாகநாதர் இராசநாயகம்



குப்பிளானைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் இராசநாயகம் 15.12.2012 சனிக்கிழமை குப்பிளானில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - நல்லமுத்து தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - றோகினியம்மா தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், குலசிங்கம், பாலசுப்பிரமணியம் (கனடா), கெங்காதேவி, விமலாதேவி, சத்தியதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், எதிர்நாயகம் (கனடா), கமலநாயகம் (பெல்ஜியம்), தேவநாயகம் (லண்டன்), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேணுகா (கனடா), கௌரி (லண்டன்), ரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனும், யோகமலர், மாலா (கனடா), மனோதீபன் (ஜேர்மனி), கனேசர், காலஞ்சென்ற சரவனமுத்து மற்றும் மகேந்தி ரன் (லண்டன்), பாவநாதன் (லண்டன்), கனகாம்பிகை, தவமணி (கனடா), புனிதவதி (ஜேர்மனி), லீலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், லவன், கிசோன், தரணியா, சஜானா, நவோஷினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் காடா கடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

குருந்தடி வளவு,
குப்பிளான் [illegible], ஏழாலை. (26860)(6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

### தவறிவிட்டது

N.P.VA 9641 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் [illegible] இலக்கத்தகடு 16.12.2012 அன்று புத்தூர்ச் சந்திக்கும் [illegible] தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

ச. அரிகரன்
077 9073 662, 021 222 5601 (28887)(45.7)

### தவறிவிட்டது

[illegible] (882842649 V) [illegible] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

077 928 6654, 077 2719 625 (26902)(45.7)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி மத்திய பகுதியில் A9 வீதியில் 5 பரப்பு (13 ஆயிரம் சதுர அடி) காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொ.பே: 0777441863 (28743)(5.6.7)

### ஆசிரியர் தேவை

தரம் 8 கல்வி கற்கும் மாணவனுக்கு Maths,Chemistry, History (English medium) ஆசிரியர் தேவை.

தொ.பே: 071 894 6461 (26845)(5.7)

### வாடகைக்கு

முல்லைத்தீவு நகரின் மத்தியில் Show room அமைப்பதற்கு 10.000 சதுர அடி இடம் வாடகைக்கு உண்டு.

தொ.பே: [illegible] [illegible](4.7)

### கரைச்சி பிரதேச சபை-கிளிநொச்சி வரவு செலவுத் திட்டம்-2013

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 168இன் பிரகாரம் கரைச்சிப் பிரதேச சபையின் 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 2012.12.18 முதல் 2012.12.24ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை கரைச்சிப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

வைத்திலிங்கம் குகராசா
தவிசாளர்,கரைச்சிப் பிரதேச சபை,கிளிநொச்சி. (கி/2642)(5.7)

### ஈர விழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03.02.1921

மறைவு
30.12.2011

அமரர் தியாகர் அருணாசலம்
(நயினாதீவு)

திதி: 18.12.2012 (பூர்வபக்க ஷஷ்டி)

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து"

ஆண்டு ஒன்று போனாலும்
ஆறவில்லை எம் சோகம்
காலமோ ஓடுகின்றது - இக்காலகோலமதில்
பிறப்பும், இறப்பும் வருவதால்
ஆறி நிற்கின்றோம்...
உங்கள் நினைவடியில் பூதூவி வணங்கி
நீங்கள் காட்டிய பாதையில்
நெறி தவறாது வாழ்ந்திடுவோம் - ஐயா!
கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி நிற்க
இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

117/4, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ILLinois State பல்கலைக்கழகத்துடன் SLIIT கல்வி நிலையம் கைகோர்ப்பு

அண்மையில் SLIIT மற்றும் அமெரிக்காவின் Illinois State University இணைந்து கல்விசார் பகிர்வு மற்றும் கற்பித்தலுக்கான கூட்டாண்மை, ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக்கான பயிற்சிகளை வழங்கும் முகமாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இவ்விரு கல்வி நிலையங்களும் புலமைப்பரிசில்கள் பகிர்தல் மற்றும் மாணவர்கள், பணியாளர்கள் பயனடையக் கூடிய வகையில் பிரிவுகளை அமைத்துக் கொடுத்தல் என்ற அடிப்படையில் செயற்படவுள்ளன. அமெரிக்காவின் Illinois State பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வில், SLIIT நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் லலித் கமகே மற்றும் Illinois State பல்கலைக்கழகத்தின் கல்விசார் பிரிவின் பரதி தலைவர் ஷெரி நொரேன் எவர்ட்ஸ் ஆகியோர் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.



Illinois State பல்கலைக்கழகமானது, Illinois பிரதேசத்தின் மிகப்பழைமையான பொது பல்கலைக்கழகமாக இருப்பதுடன், அமெரிக்காவில் பெருமளவு ஆசிரியர்களை உருவாக்கும் சிறந்த 10 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக உள்ளது என American Association of Colleges of Teacher Education அமைப்பு அறிவித்துள்ளது. இப் பல்கலைக்கழகமானது ஆராய்ச்சிகள் குறித்து அதிக முக்கியத்துவம் வழங்குவதுடன், அதன் தகவல் தொழில்நுட்ப கல்லூரியின் மூலம் கணினி மற்றும் தகவல் தொடர்பாடல் நிபுணர்களுக்கான முதற்தர இளமானிப்பட்டம் மற்றும் பட்டதாரி கற்கைகளை வழங்குகிறது. இத்திட்டங்கள் Computing Accreditation Commission of ABET இன் அங்கீகா ரத்தை பெற்றுள்ளது.

அமெரிக்காவின் தலை சிறந்த 100 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக உள்ள இப்பல்கலைக்கழகத்துடன் மேற்கொண்ட பங்காண்மை குறித்து அறிவிப்பதில் பெருமையடைகிறோம் என SLIIT நிலையத்தின் தலைவர் பேராசிரியர்.எஸ்.கருணாரத்ன தெரிவித்தார்.

## இலங்கையில் முதலீடு ஆர்வத்துடன் பெல்ஜியம்

இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த பெல்ஜியம் நாட்டின் வர்த்தக பரமுகர்கள் குழாம், இலங் கையில் தகவல் தொழில் நுட்ப சேவைகள் சார்ந்த துறையில் தமது முதலீடு களை மேற்கொள்ள ஆர்வ மாக உள்ளதாக இலங்கை முதலீட்டு ஊக்குவிப்பு முகவர் அமைப்பு தெரிவித் துள்ளது.

தற்போது பெல்ஜியம் நாட்டின் முதலீடுகள் இலங்கையில் டயர் உற்பத்தி, மாணிக்கக்கல் வெட்டும் இயந்திர தயாரிப்பு மற்றும் சிகரெட் தயாரிப்பு போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருநாடுகளுக்குமிடையில் வர்த்தக உறவுகளை மேம்ப டுத்தும் வகையில் வரிச் சலுகை, ஏற்றுமதி பாதுகாப்பு குறித்த விடயங்கள் உள்ள டங்கிய உடன்படிக்கை யொன்று கைச்சாத்திடப்பட் டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

## பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு %5 பில்லியன் ரூபா வரை நட்டம்

கடந்த சனிக்கிழமை முதல் பெற்றோலின் (90 ஒக்டேன்) விலை லீற்றருக்கு 10 ரூபாவினால் அதிகரிப்பட்டதுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுசந்த சில்வா விளக்கமளிக்கையில், கடந்த ஒக்டோபர் மாதம் வரை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு %5 பல்லியன் ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கு பரதான காரணம், சர்வதேச சந்தையில் விலை அதிகரிப்புக்கு ஏற்ப இலங்கையில் விலையில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாமை அமைந்திருந்தது. இந்த நிலையை சீர் செய்யும் வகையில் இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டது என்றார்.தற்போது விலை லீற்றர் ஒன்றுக்கு 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், கூட்டுத்தாபனம் இன்னமும் லீற்றர் ஒன்றுக்கு 5ரூபா வீதம் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பட்டார்.

## திருமலையில் ஹீரோ காட்சிகூடம்

திருகோணமலையில் ஹீரோ நிறுவனத்தின் காட்சி அறை திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல.160, மின்சார நிலைய வீதியில் இந்தக்காட்சியறை திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை பொது வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் ஈ.ஜி.ஞானகுணாளன், முன்னணி கணித பாட ஆசிரியர் திருமதி கமலாம்பிகை இராஜகோனுடன் இணைந்து இதனை திறந்து வைத்தார்.



கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தண்டாயுதபாணி முதலாவது வாடிக்கையாளர் காப்புறுதி முகவர் கண்ணனி டம் சாவி வழங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார். (த)

# குத்தகை வசதிக்கு புதிய பரிமாணம்

செலான் வங்கியானது, இலங்கை முழுவதிலும் உள்ள தமது தற்போதைய வாடிக்கையாளர்கள் மற்றும் எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்ளவுள்ளவர்களுக்காகவும் செலான் ஸ்மார்ட் லீஸ் வசதி மூலம் உயரத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது.

செலான் ஸ்மார்ட் லீஸ் வாடகையை செலுத்தும் விடயத்தில், முழுமையான நெகிழ்வுத் தன்மைகளைக் கொண்ட தெரிவு வசதிகளை வழங்கும் மிக நேர்த்தியான ஒரு குத்தகை சேவையாகும்.

அதிக வருமானம் (போனஸ் கொடுப்பனவுகள், பருவ கால வியாபாரம் மற்றும் இதர வருமானம் போன்றவை) கிடைக்கப் பெறும் காலங்களில் நியம மாதாந்த வாடகையை விட அதிகமான தொகையினை செலுத்துவதற்கும் இதனால் எஞ்சியுள்ள மீளச் செலுத்தும், தொகையானது செலுத்தப்பட்ட வாடகை தொகைக்கு அமைய குறைவடைகின்றது.

அதாவது, சம்பந்தப்பட்ட வருடத்திற்குள் குத்தகையின் மிகுதிக் காலப்பகுதிக்காக குறைந்தளவிலான வாடகையையும் ஒருவர் செலுத்த முடியும்.

மோட்டார் கார்கள், வேன்கள், பஸ்கள், ட்ரக் வண்டிகள், லொறிகள், மோட்டார் சைக்கிள்கள், இயந்திர சாதனங்கள் போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்காக செலான் ஸ்மார்ட் லீஸ் வசதியினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

நாடெங்கிலுமுள்ள 14% கிளைகளைக் கொண்ட செலான் வங்கியின் கிளை வலையமைப்பல் பணியாற்றும் ஊழியர்களின் தொழில் சார் மற்றும் பண்பான சேவையானது, 24 மணித்தியாலங்களுக்குள் சிரமமற்ற வகையில் குத்தகை வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான சௌகரியத்தை அளிப்பதுடன், ஒவ்வொருவரதும் தனிப்பட்ட நிதி நிலைமைக்கும் பொருந்தும் வகையில் நெகிழ்வுத் தன்மையானதும் பரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டதுமான வாடகை வசதிகளையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது.

செலான் ஸ்மார்ட் லீஸ் ஆனது தனிநபர்கள் (தொழில் வாண்மையாளர்கள், நிறைவேற்று அதிகாரிகள் போன்றோர்), சிறிய, நடுத்தர முயற்சிகள் (ஏக உரிமையாளர்கள், பங்காளித்துவ முயற்சியாளர்கள் போன்றோர்), கூட்டாண்மை நிறுவனங்கள்; சௌகரியமான வடிவிலமைந்த இந்த குத்தகை வசதியை பயன்படுத்தி வாழ்க்கையை இலகுவாக்கிக் முடியும்.

## வட்டி வீதங்களை குறைக்க நடவடிக்கை

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இறுக்கிப் படித்த இலங்கையின் நாணயக் கொள்கையினை தளர்த்தி விட மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் தற்போது நிலவும் உயர் வட்டி வீதங்களைக் குறைத்து, பணவீக்கத்தினை கட்டுப்படுத்தி, பொருளாதார வளர்ச்சியினை தூண்ட எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது. வணிக வங்கிகளிற்காக மத்திய வங்கி விதித்து வரும் மீள் கொள்வனவு (%.5%) மற்றும் நேர் மாற்று மீள் கொள்வனவு (9.5%) வீதங்களை 25 புள்ளிகள் அடிப்படையில் குறைப்பதன் மூலம் நாணயக் கொள்கையினை தளர்த்தி வட்டி வீதங்களைக் குறைக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சாதாரன வைப்புக்கள் (9.8%), நிலையான வைப்புக்கள் (12.%8%) மற்றும் கடன்களிற்கான (15.38%) வணிக வங்கிகளின் நிறையளிக்கப்பட்ட சாாசரி வட்டி வீதங்கள் கடந்த வார இறுதியிலும் உயர்வு [illegible] குறிப்படத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 75 பல்லியன் ரூபா வரை நட்டம்

கடந்த சனிக்கிழமை முதல் பெற்றோலின் (90 ஒக்டேன்) விலை லீற்றருக்கு 10 ரூபாவினால் அதிகரிப்பட்டதுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுசந்த சில்வா விளக்கமளிக்கையில், கடந்த ஒக்டோபர் மாதம் வரை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 75 பல்லியன் ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கு பரதான காரணம், சர்வதேச சந்தையில் விலை அதிகரிப்புக்கு ஏற்ப இலங்கையில் விலையில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாமை அமைந்திருந்தது. இந்த நிலையை சீர் செய்யும் வகையில் இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டது என்றார்.

தற்போது விலை லீற்றர் ஒன்றுக்கு 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், கூட்டுத்தாபனம் இன்னமும் லீற்றர் ஒன்றுக்கு 5ரூபா வீதம் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பட்டார்.

# பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்கள் முன்னேற்றம்

நாட்டின் எதிர்கால பொருளாதார நிலை குறித்து கடந்த வாரம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் மூலம் வெளியாகியிருந்த இரு வேறு சாதகமான எதிர்வு கூறல்களை தொடர்ந்து பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்களில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. ஆயினும் கடந்த சனிக்கிழமை முதல் பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையால், ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்பு ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றமையால், இவ்வாரம் பங்குச்சந்தை நடவடிக்கைகள் சற்று வீழ்ச்சியடையக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றமையை அனுமானிக்க முடிவதுடன், 2012ஆம் ஆண்டின் இறுதி முழுமையான பங்கு கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் வாரமாகவும் இந்த வாரம் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 5,522.72 ஆகவும், மிலங்கா விலைச் சுட்டெண் 5045.20 ஆகவும், குக ஸ்ரீலங்கா 20 சுட்டி 3022.79 ஆகவும் அமைந்திருந்தன.

டிசெம்பர் 10ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 2,736, 744,514 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 27,780 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 26,379 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 1,401 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் பேருவெல வோல்கின், படிஎல், தங்கரீன், சிஎஃவ்ஜ மற்றும் சிங்க லங்கா போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டிய லிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

ஹன்டர்ஸ், எஸ்எம்ப லீசிங், கொன்வீனியன்ஸ் பூட்ஸ், மெக்வூட்ஸ் எனர்ஜி மற்றும் பசி பார்மா போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

# ஹேலீஸ் பிளான்டேஷனை குறைக்க நடவடிக்கை

பெருந்தோட்ட துறையில் நிபுணத்துவம்பெற்ற முன்னணி பரதம நிறைவேற்று அதிகாரிகளில் ஒருவரான ரொஷான் ராஜதுரை - கஹவத்தை பெருந்தோட்ட கம்பனியிலிருந்து தமது பதவியைத் துறந்து ஹேலீன் பிளான்டேஷன் நிறுவனத்தை சேர்ந்த தலவாக்கலை மற்றும் களனி வெலி ஆகிய பெருந்தோட்ட நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளராக 2013 ஜனவரி 1ஆம் திகதி பொறுப்பேற்கிறார்.

இவர் கஹாவத்தை பெருந்தோட்டக் கம்பனியின் பரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணிப்பாளராகவும் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி முதல் செயலாற்றி வருகிறார். இவர் கஹவத்தை பெருந்தோட்டக் கம்பனியில் 2002ஆம் ஆண்டு பொது முகாமையாளராக இணைந்திருந்தார். சுமார் 30 வருட காலம் பெருந்தோட்ட துறையில் நிர்வாக அனுவத்தை கொண்டுள்ள இவர் வயம்ப பல்கலைக்கழகத்தில் பெருந்தோட்டக் முகாமைத்துவ துறையில் இளமானிப்பட்டம் பெற்றுள்ளதுடன், பேராதனை பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவத் துறையில் மாஸ்டர்ஸ் நிலை கற்கையையும் பூர்த்தி செய்துள்ளார்.

ஹேலீஸ் பிளான்டேஷன் கம்பனி, இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தியில் 4.5 வீதத்தையும், இறப்பர் உற்பத்தியில் 2.5 வீதத்தையும், 25000 ஊழியர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

அந்த கம்பனியின் வசம் மொத்தமாக 44 தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்டங்கள் காணப்படுவதுடன், இவை மொத்தமாக 19,500 ஹெக்டெயர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து நடராஜா



வீரமாணிக்கம், தேவந்துறையைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டித்துறை ஊறணி குடியேற்றத்திட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து நடராஜா (ஓய்வு பெற்ற கடற்படைத் தளபதி) நேற்று (17.12.2012) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்வெட்டித்துறை ஊறணி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊறணி குடியேற்றத்திட்டம்,
வல்வெட்டித்துறை.
0789143019

(சி/2850)(3.14)

தகவல்:
மகன் சிவநேசன்
(குஞ்சன் மெக்கானிக்)

### கிருஷ்ணபிள்ளை வேணுகுமார்



வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் கவுந்தில், கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை வேணுகுமார் நேற்று (17.12.2012) திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், சற்குரு- தேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும் சசிதேவியின் அன்புக் கணவரும், சாருஷன், தர்ஷன், டிலக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமார், செல்வகுமார், இந்துகுமார், லோகுமார், டடிஸ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியபாமா, சதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கவுந்தில்
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(26903)(14)

தகவல்.
குடும்பத்தினர்.

### துரையப்பா இரத்தினேஸ்வரி



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா இரத்தினேஸ்வரிநேற்று (17.12.2012) திங்கட்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-இராசம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா -செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற துரையப்பாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற தயாளன், மற்றும் நகுலாதேவி(ஜேர்மனி),பத்தினிதேவி, சாந்தினி, தயாளினி (சுவிஸ்), காலஞ்சென்ற சுதேசன் மற்றும் நமேசன், குகபாலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயபாலன், சிவகுமாரன், வனஜா ஆகியோரின் அன்பு மாமியும், கோபிகா, மயூரன், ஹரிசன், நிசாந்தி, மதுரா, சியாந், கிருத்திகா, தமிக்கா, காயத்திரி, ஐங்கரன், யானிக்,மதுரசன், தனுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபினயா, துசியா, அஸ்வின் ஆகியோரின் பாட்டி அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(18.12.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34, முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச் சந்தியடி,
நல்லூர்.

(26889)(5-7)

தகவல்:
குடும்பத்தினர்.



கஜமுகாசுர சங்கார நிகழ்வு நேற்று திங்கட்கிழமை தொல்புரம் மடத்தடி பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் சிறப்புற நடைபெற்றது.

# ஆட்சியாளரின் அசமந்தத்தால் சீரழிக்கப்படும் கல்வித்துறை!

## பரீட்சை வினாத்தாள் வெளியாகிய சம்பவம் குறித்து முன்னிலை சோஷலிஸ கட்சி சீற்றம்

கல்வியைப் பணத்துக்காக விற்கின்ற ஓர் அசாதாரணமான நிலை நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளதாலேயே பரீட்சை வினாத்தாள்கள் குறித்த பரீட்சை இடம்பெறுவதற்கு முன்னதாகவே வெளியிடப்படுகின்றன,

ஆட்சியாளர்களின் அசமந்தம் - தவறுகளால் மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் கல்வித்துறையே சீரழிக்கப்படுகின்றது என்று முன்னிலை சோஷலிஸக் கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டின் கல்விக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள், பரீட்சை நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற குளறுபடிகள் ஆகியவற்றுக்கு அரசு உடனடியாகத் தீர்வு காணவேண்டும். அத்துடன், கல்வித்துறை சந்தைப்பொருளாக மாற்றப்படுவதை எதிர்த்துப் போராட அனைவரும் எம்முடன் கைகோர்க்க வாரீர் என்றும் அக்கட்சி அழைப்புவிடுத்துள்ளது.

இது தொடர்பில் முன்னிலை சோஷலிஸக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற விஞ்ஞான பாடப் பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பல மாணவர்கள் பாதிப்புக்குட்பட்டுள்ளனர்.

நாட்டின் கல்வி மற்றும் பரீட்சைக் கட்டமைப்பில் கடந்த பல தடவைகள் இதுபோன்ற குளறுபடிகள் இடம்பெற்றுவந்தன. கடந்த 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் 'இஸட்' புள்ளிகளில் குளறுபடிகள் ஏற்பட்டன. அடுத்ததாக இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களில் குளறுபடிகள் ஏற்பட்டன.

அத்துடன், ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையிலும் குளறுபடிகள் ஏற்பட்டன. இப்போது இடம்பெற்றுவருகின்ற சாதாரண தரப் பரீட்சையிலும் இது தொடர்கிறது.

தனியார் கல்வி நிறுவனமொன்றில் விஞ்ஞான பாடம் கற்பிக்கின்ற ஆசிரியரொருவர் பரீட்சைக்கு முன்னதாக வழங்கிய மாதிரி வினாத்தாளில் குறிப்பிட்டிருந்த 18 வினாக்கள் விஞ்ஞான பரீட்சை வினாத்தாளிலும் இடம்பெற்றிருந்தன.

ஆட்சியாளர்களின் அசமந்தம் - தவறுகளால் மாணவர்களினதும், மக்களதும் எதிர்காலத்திற்குப் பங்களிப்புச் செய்யும் கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளே பாதிக்கப்படுகின்றன. அரசின் ஆட்சிக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் சில துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மோசடிகள் குறித்து அது கவனம் செலுத்துவதுமில்லை; அதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதுமில்லை.

கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதன் ஊடாக சமூகத்தின் அபிவிருத்தியை முடக்கி தமது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள அரசு முயற்சிக்கின்றது. அண்மைக்காலமாக நாட்டின் கல்விக் கட்டமைப்பில் இடம்பெற்றுவருகின்ற பிரச்சினைகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

அத்துடன், ஆட்சியாளர்கள் தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக கல்வித்துறையை அரசியல் மயப்படுத்தியுள்ளனர். கல்வித்துறையின் ஊடாக அதிக லாபம் பெற்றுக்கொள்வதற்காக அதை சந்தைப்பொருளாக்கி விற்பனை செய்கின்றனர்.

அரசின் இந்தச் செயற்பாடுகள் தொடர்ந்தால் நாட்டின் கல்விக் கட்டமைப்பு சீரழிக்கப்பட்டு, மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படும்.

எனவே, இதனை எதிர்த்துப் போராட மக்கள் அனைவரும் எம்முடன் கைகோர்த்து செயற்பட முன்வர வேண்டும் - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்கள் வேலையின்றி திண்டாட்டம் பந்தயம் நடத்தி அரசு கொண்டாட்டம்

## அனுரகுமார எம்.பி. காட்டம்

கொழும்பு, டிசெ.18

உயர்தரம் சித்தியடைந்த இருபது இலட்சம் பேர் நாட்டில் வேலையின்றித் திண்டாடும் நிலையில், பொருளாதார கேந்திர நிலையமான கொழும்பை இழுத்து மூடிவிட்டு பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு அரசு கார் ரேஸ் விளையாடுகின்றது எனக் குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பி., இதுதான் மஹிந்த அரசின் பொருளாதாரக் கொள்கையா என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை பத்தரமுல்லை, பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடும் போதே அக்கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் அநுரகுமார திஸநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஒரு லீற்றர் பெற்றோலின் சாதாரண விலை 89 ரூபா. துறைமுகத்திலிருந்து இறக்குமதி செய்யும் போதும் அதன் விலை 89 ரூபாவாகத்தான் இருக்கின்றது. ஆனால் அவை எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு சென்றடைந்த பின்னர் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 159 ரூபாவாகிறது.

அந்த அடிப்படையில் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு அரசு 70 ரூபாவை அறவிடுகின்றது. பெற்றோலுக்கு வரி விதிப்பதே அரசின் தற்போதைய வருமான மார்க்கமாக மாறியுள்ளது.

மாதாந்தம் சுமார் 80 மில்லியன் லீற்றர் பெற்றோல் விற்பனையாகின்றது. அந்தத் தொகையை அறுபதால் பெருக்கினால் அரசுக்கு பெற்றோலில் மாத்திரம் மாதமொன்றுக்கு 4 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா இலாபம் கிடைக்கின்றது.

அப்படியாயின் வருடமொன்றுக்கு அரசுக்கு இதன்மூலம் 56 ஆயிரத்து 600மில்லியன் ரூபா இலாபம் கிடைக்கின்றது.

எரிபொருள் விலை உச்சத்தை அடைந்துள்ள நிலையில், அரசின் பிரதான இலக்காக இருப்பது எது? கொழும்பை இழுத்து மூடிவிட்டு கார்ரேஸ் விளையாடுகின்றது அரசு. எமது நாட்டில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த இருபது இலட்சம் பேர் இருக்கின்றனர். அவர்கள் வேலையில்லாமல் விரக்தியடைந்துள்ளனர்.

அதேவேளை, விவசாய மக்களின் பிள்ளைகள் விவசாயம் செய்வதற்கு இடமின்றித் தவிக்கின்றனர். திறமையுள்ள பலர் வியாபாரம் செய்வதற்கு நிதியின்றித் தடுமாறுகின்றனர். நிலைமை இப்படியிருக்க, பெருந்தொகையான நிதியை செலவிட்டு அரசு கார் ரேஸ் விளையாடுகின்றது - என்றார் அநுரகுமார திஸாநாயக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி *கனகசபாபதி* அவர்களின் அன்புத் தந்தை

*நாகப்பர் சிவக்கொழுந்து*

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள்
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

(சி/2643)(9.14)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் **திருமதி தேவபாலர் சாந்நாயகம்** அவர்களின் அன்புத் தாய் திருமதி *சற்குணம் சோமசுந்தரம்* அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சுகாதாரச் சங்கம்** (26909)(9.14)

## கண்ணீர் அஞ்சலி



### *உதயகுமார் நிதர்சன்*

எமது வங்கியின் சக ஊழியர் உதயகுமார் நிதர்சன் அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் பங்குபற்றுவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை வங்கி,**
**உரும்பிராய்.** (சி/2652)(9.14)

**முகாமையாளரும்,**
**பணியாளர்களும்.**

## கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்

இலங்கை வங்கி சுன்னாகம் கிளை ஊழியர் **எஸ்.உதயகுமார்** அவர்களின் பாசமிகு புதல்வன்



### *உதயகுமார் நிதர்சனின்*

மறைவுக்கு இலங்கை வங்கி சுன்னாகச் சமூகம் தனது ஆழ்ந்த துயரங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அனைவரினதும் ஈடுசெய்ய முடியாத துயரங்களில் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

*''உள்ளத்துப் பொய்யா தொழுகின் - உலகத்தார் உளத்திலெலாம் உளன்''*

**இலங்கை வங்கி,**
**சுன்னாகம்.** (சி/2651)(9.14)

**முகாமையாளரும்,**
**பணியாளர்களும்.**

## கண்ணீர் அஞ்சலி



### *உதயகுமார் நிதர்சன்*

குப்பிளான் ஏழாலையைச் சேர்ந்தவரும், உரும்பிராய் இலங்கை வங்கியின் ஊழியரும், சுன்னாகம் இலங்கை வங்கியின் உத்தியோகத்தர் உதயகுமாரின் மகனுமாகிய **உதயகுமார் நிதர்சன்** நேற்று முன்தினம் (16.12.2012) ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்தம் குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பு, பண்பு, பணிவு, ஒழுக்கம், பரோபகாரம் முதலிய நற்பண்புகளைக் கொண்ட **செல்வன் உதயகுமார் நிதர்சனுக்கு** மீண்டுமொருமுறை எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*மு.சிவசுந்தரலிங்கம்- உரும்பிராய் கிழக்கு, **ந.கனேசலிங்கம்**- உரும்பிராய் வடக்கு, **க.சேனாதிராசா**- இ.போ.ச கிழக்கு, **ப.முருகையா**- விதானயார் வீதி, உரும்பிராய் வடக்கு, **கி.இறைஞ்சன்**- விதானயார் வீதி, உரும்பிராய் வடக்கு, **க.கணேசலிங்கம்**- உரும்பிராய் மேற்கு, **வ.நவரட்ணம்**- விதானயர் வீதி, உரும்பிராய் வடக்கு, **அ.பிரபாகரன்**- உரும்பிராய் வடக்கு, ஞானசம்பந்தர் ஒழுங்கை.*

(26904)(9.14)

**உரும்பிராய் வடக்கு, கிழக்கு, மேற்கு விவசாயிகள்**

# சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு

தேசிய சுகாதாரவாரத்தை முன்னிட்டு சுகாதார விழிப் புணர்வு கருத்தரங்கு திருகோணமலை நகரசபை மண் டபத்தில் நடைபெற்றது. இந்தக்கருதரங்கில் திருகோணமலை நகரசபை எல்லைக்குட்பட்ட உணவு விடுதிகள் மற்றும் உணவுப் பொருள் தயாரிக்கும் நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கருத்தரங்கில் நோய்கள் பரவாமல் எவ் வாறு பாதுகாப்பாக செயற் படுவது, உணவுப் பொருள்களில் பாதுகாப்பான விநியோகத்தை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. (ச-40)

## திருவாசக முற்றோதல்

திருகோணமலை,டிசெ.18

கொட்டியாபுரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றி யத்தின் ஏற்பாட்டில் மூதூர் பிரதேசத்தில் பத்து சைவாலயங்களில் திருவாசக முற் றோதல் நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

திருவாசக முற்றோதல் தொடர் நாளை புதன்கிழமை கடற்கரைச்சேனைகற்பக விநாயகர் ஆலயத்தில் ஆரம்பமாகும். (ச-40)

## காட்டு யானைகள் அட்டகாசத்தால் மக்கள் பாதிப்பு

திருகோணமலை,டிசெ.18

திருகோணமலை மாவட் டத்தில் குச்சவெளி பிரதேசத் துக்கு உட்பட்ட பெரியகுளம் விவசாயிகளும் பொது மக்களும் காட்டு யானைகளின் படையெடுப்பால் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கொக்காக்குளம், நெருங் கேணி, ஆலங்குளம் போன்ற இடங்களில் இருந்து வரும் யானைகள் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள வீட்டுத்தோட்டத்தை சேதமாக்கி வருகின்றன. (ச-40)

## தனியார் காணி படையினர் வசம்

முல்லைத்தீவு, டிசெ.18

முல்லைத்தீவு சுதந்திரபுரம் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றைப் படையினர் தமதாக்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு சுதந்திரபுரம் சந்திக்கு அண்மித்த பகுதியில் முன்னர் நெற்களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டிருந்த இரண்டு ஏக்கர் தனியாரின் காணியை கடந்த திங்கட்கிழமை முதல் படையினர் ஆக்கிரமித்துள்ளனர்.

குறித்த காணி 'படையினருக்குரிய பூமி'' எனப் பெயர்ப் பலகை நடப்பட்டு தற்போது காவலரண் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, சுதந்திரபுரம் சந்தியில் படையினர் தொடர்ந்து தமது பயன்பாட்டில் வைத்துள்ள மூன்று வர்த்தக நிலையங்களின் கட்டடங்களையும் பெற்றுத்தருமாறு உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-6)

## கட்டைபறிச்சான் வீதி சேதம்; பயணிப்பதில் பெரும் சிரமம்

திருகோணமலை,டிசெ.18

திருகோணமலை மாவட் டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கட்டைபறிச்சான் பிரதான வீதி குண்டும் குழியுமாக காட்சியளிப்பதால் பய ணிகள் சிரங்களுக்கு உட்ப டுகின்றனர்.

கட்டைபறிச்சான், சேனை யூர், சந்தோஷபுரம், அம்ம நகர், கடற்கரைச் சேனை உட்பட பல பகுதி மக்கள் இந்த வீதியியை தினமும் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால், இந்த வீதியால் செல்லும் மக்களும், பாடசாலை மாணவர்க ளும் பெரும் அசௌகரி யங்களுக்கு உள்ளாகின் றனர்.

எனவே விரைவில் கட்டை பறிச்சான் பிரதான வீதியைப் புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச-40)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:- 13.12.1948

மறைவு:- 18.11.2012

### திருமதி சிவநாதன் மங்கையர்க்கரசி

கடந்த 18.11.2012 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி சிவநாதன் மங்கையர்க்கரசி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கராச் றோட், சண்டிலிப்பாய்.

**குடும்பத்தினர்.**
**சி.பிரதாபன்(மகன்).**

(26848)(6.11)

## வருஷாப்திய அழைப்பு



பிறப்பு 12.07.1945

இறப்பு 31.12.2011

### திருமதி சந்தனம்மா கந்தசாமி ஐயர்

மாவிட்டபுரம் வீணியவரை அம்மன் கோயிலடியைச் சேர்ந்த எமது தாயார் கந்தசாமி ஐயர் சந்தனம்மா அவர்களின் வருஷாப்தியம் நிகழும் நந்தன வருடம் மார்கழி மாதம் 4 ஆம் நாள் நாளை (19.12.2012) புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் அத்துடன் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(இந்த அழைப்பைப் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்,
(சிவன் கோயில் அருகில்)
077 3768 523

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(26890)(45.6.

## நல்லூர் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் - 2013 மக்கள் பார்வைக்கு

நல்லூர் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் 18.12.2012 ஆம் திகதியிலிருந்து 24.12.2012 ஆம் திகதி வரை பார்வையிடலாமென சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

- தலைமை அலுவலகம் - கருவப்புலம் வீதி, கொக்குவில்.
- நல்லூர் உப அலுவலகம் - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
- கொக்குவில் உப அலுவலகம் - பிறவுண் வீதி, கொக்குவில்.
- பொது நூலகம் கோண்டாவில் - நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
- பொது நூலகம் கொக்குவில் -பிறவுண் வீதி, கொக்குவில்.
- பொது நூலகம் நல்லூர் - கலாசாலை வீதி, திருநெல்வேலி.

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில். (சி/2983)(3.14)

ப. வசந்தகுமார்
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்குத் தீர்வு இன்றேல்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)



சோதரனுக்காக தீபமேற்றுவதில் என்ன தவறு உண்டு? ஒரு தாய் இறந்த தனது மகனுக்காக அல்லது ஒரு தமிழ்ப்பெண் இறந்த தனது கணவனுக்காக விளக்கேற்றுவதில் என்ன தவறு உள்ளது? ஜே.வி.பி. தங்களது நினைவுதின நிகழ்வை அனுஷ்டிக்கிறார்கள். அது குறித்து யாரும் முறைப்பாடு செய்ததில்லை; எதுவும் செய்யப்படுவதுமில்லை. அதையே நாங்களும் ஏன் செய்ய முடிவதில்லை? அது எமது அடிப்படை உரிமை இல்லையா? அது உலகம் முழுவதும் நடக்கின்றது. நல்ல நோக்கத்துக்காகவோ அல்லது தவறான நோக்கத்துக்காகவோ - நல்ல காரணத்துக்காகவோ - அல்லது தவறான காரணத்துக்காகவோ எதற்காகவாயினும் தங்கள் உயிரை அர்ப்பணித்துத் தியாகம் செய்தவர்களுக்காக அப்படிச் செய்வது உலகின் எல்லா நாடுகளிலும் நடக்கின்றது. அது மக்களுக்கே உரித்தான அடிப்படை உரிமை. அதைத் தடுக்கக் கூடாது. அதுவும் முக்கியமாக பலாத்காரம் மூலம் தடுத்து நிறுத்தக்கூடாது.

யாழ். மாணவர்கள் தொடர்பில் தேவையற்ற சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறித்து வேதனையடைகிறேன். காவலுக்கு எடுக்கப்பட்டுள்ள நான்கு மாணவர்களில் ஒருவர் விடுதலை செய்யப்பட எஞ்சிய மூவரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என அறிகிறேன். அங்கு வன்முறைகள் இடம்பெற்றிருக்காதபோது - அங்கு ஆயுதங்கள் இல்லாதபோது - அங்கு யாரும் வன்முறையில் ஈடுபட்டிருக்காதபோது - பல்கலைக்கழக வளாகத்துக்குள் நவம்பர் 27ஆம் திகதி இராணுவம் நுழைந்தே இருக்கக் கூடாது என்பது தான் எனது வலிமையான வாதமாகும்.

அவர்கள் சில தீபங்களை ஏற்ற விரும்பினார்களாயின் - தங்களின் மறைந்த சோதரர்களுக்காக அமைதி பேணி, வணக்கம் செலுத்தவிருந்தார்களாயின் அப்படிச் செய்வதற்கான உரித்து அவர்கள் இருக்கும் போது - அத்துடன் இறைவன் முருகனுக்கு தீபமேற்றி வணங்கும் கார்த்திகைத் தீபத் திருநாளாகவும் அது அமைந்து விட்ட சந்தர்ப்பத்தில் - இராணுவம் தவறிழைத்து விட்டது என்றே நான் நினைக்கிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் மிகச்சரியான, சட்டப்படியான நடவடிக்கையில் இது அநாவசியமான நுழைவு, தேவையற்ற தலையீடு. அவர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களது விடுதிகள் சேதமாக்கப்பட்டன. அவர்களது சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

அடுத்தநாள் அவர்களில் நால்வர் காவலுக்கு எடுக்கப்பட்டனர். மூவர் இன்னும் தடுப்பில் உள்ளனர். இந்த விடயத்தை மிகக் கவனமாகக் கையாளும்படி நான் அரசை வற்புறுத்திக் கோருகின்றேன். நாங்கள் மோதலை விரும்பவில்லை. அத்தகைய நிலை இந்நாட்டில் கட்டியெழுப்பப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. இந்த விடயத்தை உடன் கவனித்து, காவலில் உள்ள மாணவர்கள் விடுவிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு நாம் அரசைக் கோருகின்றோம்.

நாங்கள் பிறந்து வாழ்ந்த எமது பிரதேசத்தில் நாங்கள் சுயகௌரவத்துடனும் மரியாதையுடனும் வாழ்வதற்கு இடையூறாக வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள ஆயுதப்படையினரின் செயற்பாடுகள் அமைந்திருப்பது குறித்து நாங்கள் கவலையடைந்திருக்கிறோம் என்பது உண்மை. நாங்கள் இராணுவ மயப்படுத்தலை நீக்குமாறு கோருகிறோமே தவிர இராணுவ வெளியேற்றத்தை அல்ல. எனக்குக் கிடைத்த தகவல்களின் படி இலங்கை இராணுவத்தில் உள்ள மொத்தம் 20 டிவிஷன் படையணிகளில் 15 டிவிஷன்கள் வடக்கிலும், இரு டிவிஷன்கள் கிழக்கிலும், ஏனைய மூன்று டிவிஷன்கள் நாட்டின் எஞ்சிய பகுதியிலும் உள்ளன. வடக்கில் 15 டிவிஷன்கள் இருக்குமானால் அதன் அர்த்தம் வடமாகாணத்தில் ஒன்றரை இலட்சம் சிப்பாய்கள் உள்ளனர் என எனக்குக் கூறப்படுகின்றது.

ஏறத்தாழ 6 இலட்சம் மக்கள் வடக்கு மாகாணப் பிரதேசத்தில் உள்ள நிலையில் சிப்பாய்களின் இந்த எண்ணிக்கை மிகமிக அதிகமாகும். இதன் அர்த்தம் ஒவ்வொரு நான்கு சிவிலியனுக்கும் அங்கு ஒரு சிப்பாய் உள்ளார் என்பதாகும். இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இராணுவம் ஏனைய விடயங்களிலும் தலையீடு செய்கின்றது. உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் முதலாவது கூட்டம் நடைபெற்றபோது கூட்டத்துக்காக பாடசாலைக் கட்டடத்தில் கூடியிருந்தவர்களை ஆயுதப்படைகள் நுழைந்து தாக்கி கூட்டத்தைக் குழப்பின. உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்புக்கு முதல்நாள், குறிப்பாக வன்னியில் - கிளிநொச்சி, முல்லைத்தீவில் - அவர்கள் பலவிடயங்களுக்கும் சென்று மக்களின்வாக்காளர் அட்டை மற்றும் அடையாள அட்டைகளைப் பறித்துச் சென்றனர்.

நான் இது குறித்து தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டியிருந்ததுடன் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்த மக்கள் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அண்மையில் கிழக்கு மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போதும் அந்த விடயத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தமது பங்களிப்பைக் காட்டினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக பணியாற்றியவர்களை அவர்கள் அச்சுறுத்தினர். அப்படிப் பணியாற்ற வேண்டாம் என அவர்களுக்குக் கூறப்பட்டது. நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக வேலைசெய்தால் தேர்தல் முடிந்த பின்னர் அதற்கான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி நேரும் - என அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மக்கள் அச்சமடைந்தனர். அவர்களால் தேர்தலில் சுயாதீனமாகப் பங்குபற்ற முடியவில்லை.

இராணுவத்தின் அத்தகைய செயற்பாடுகள் குறித்து நாம் கவலையடைந்துள்ளோம். குறிப்பாக வடக்கிலும் மற்றும் கிழக்கிலும் இராணுவம் பரந்த நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ளது. அங்கு படைமுகாம் கட்டியெழுப்பப்படுவதை நாம் விரும்பவில்லை. நாம் சாதாரண நிலைமையில் வாழ்வதையே விரும்புகின்றோம். எங்கள் பிரதேசத்தில் குழப்பங்கள் ஏற்படுவதை நாம் வரவேற்கவில்லை. நாம் ஆயுதப் படைகளுடன் மோதலை விரும்பவில்லை. நாம் அமைதியான வாழ்வையே வேண்டுகிறோம். அவர்கள் அப்படி அதிக எண்ணிக்கையில் நிலைகொள்வதை நாம் விரும்பவில்லை. ஏனெனில் அப்படி அதிக எண்ணிக்கையில் அவர்கள் இருப்பது அடக்குமுறையே. அத்தகைய பிரசன்னம் எம்மை இழிவுபடுத்துவதாகும். அவர்களது அதீத பிரசன்னம் எமது சுயமரியாதையிலும் கௌரவத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அது சமத்துவமின்மையை உருவாக்கும். அது எம்மை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கும் - அதனையே நாம் விரும்பவில்லை.

எமது மக்கள் வலிகாமத்தில் மீளக்குடியமர முடியாதுள்ளனர். எமது மக்கள் சம்பூரில் மீளக் குடியமர முடியாதுள்ளனர். ஆனால் வலிகாமத்திலும் சம்பூரிலும் மக்கள் மீளக் குடியமரமுடியும் என அரசு உயர்நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளது. முல்லைத்தீவு. கோப்பாப்பிலவு மக்கள் அங்குள்ள தமது நிலங்களில் குடியமர முடியாத நிலையில் வெகுதொலைவில் உள்ள சோம்பாவில் என்ற இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இன்னும் 551 வீடுகளில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் தனியார் காணிகளில் 308 முகாம்கள் உள்ளன. வடக்கில் 153 கிராம சேவையாளர் பிரிவுகளில் இராணுவ முகாம்கள் உள்ளன. இதைத்தான் அளவுக்கு மீறிய பிரசன்னம் என நாம் முறையிடுகிறோம். அவர்கள் அங்கே இருக்கவே கூடாது என நாம் கூறவில்லை. குறிப்பிட்ட முகாம்களில் அவர்கள் இருக்கலாம். போருக்கு முந்திய காலம் போல தமது பணியை அவர்கள் இப்போதும் செய்யலாம். தங்களது புலனாய்வைப் பேணலாம். தங்கள் கண்காணிப்பைத் தொடரலாம். அந்த விடயங்களில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அது அவர்களின் கடமை.

எமது மக்களின் வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் - எங்கள் மக்கள் இந்த நாட்டில் தாங்கள் தாழ்ந்த நிலை மக்கள், சமத்துவமான பிரஜைகள் அல்லர் என்று அவர்களே உணரும் நிலைமையை உருவாக்கும் விதத்தில் - இராணுவப் பிரசன்னம் இருப்பதையே நாம் விரும்பவில்லை; வரவேற்கவில்லை.

இரணைமடுக் குளத்துக்கு மேற்கே ஏ-9 நெடுஞ்சாலைக்கு கிழக்கே 4 ஆயிரத்து 600 ஹெக்டரில் ஏறத்தாழ 12 ஆயிரம் ஏக்கர் காணியில் இராணுவத்துக்கு 10 ஆயிரம் வீடுகள் கட்டப்படுகின்றன. இது இராணுவ முகாம்களுக்குள் இருக்கும் வழமையான நிலைக்கு முற்றிலும் வித்தியாசமான செயற்பாடு. இராணுவத்துக்காக பத்தாயிரம் வீடுகள் கட்டப்படுகின்றன. இது ஒரு மாபெரும் வீடமைப்புத் திட்டம். அவர்களில் மிகப் பெரும்பாலானோர் நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த சிப்பாய்களாக இருக்கப் போகின்றார்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களுடன் வந்து குடியமரப்போகிறார்கள். (குறுக்கீடு) என்னைக் குழப்பாதீர்கள். நீங்கள் பிறகு பேசுங்கள். நாகரிகமாக நடந்துகொள்ளுங்கள். அவர்கள் அங்கு நிரந்தரமாக வசிக்கப்போகிறார்கள். அவர்கள் நிரந்தரமான வாக்காளர்களாகப் போகின்றார்கள்.

இன ரீதியில் நோக்குகையில் இந்த முழு விடயத்திலும் ஒரு சமநிலை இருப்பது போன்று வெளியே காட்டுவதற்காக அண்மையில் தமிழ் யுவதிகளை இராணுவத்தில் சேர்க்கும் வேலையை ஆயுதப்படைகள் ஆரம்பித்தன. மாதாந்தம் அவர்களுக்கு 35 ஆயிரம் ரூபா செலுத்தப்படும். 118 பெண்கள் அண்மையில் இப்படி சேர்க்கப்பட்டனர் கூறப்பட்டது. ஸி.எஸ்.டி எனும் சிவில் பாதுகாப்புப் பிரிவுக்கு மஞ்சளில் ஸி.எஸ்.டி என எழுதப்பட்ட கறுப்பு ரீ சேர்ட்டுடன் மேலும் சிலர் இப்படிச் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆண்களும் பெண்களுமாக 2500 பேர் அண்மையில் இப்படிச் சேர்க்கப்பட்டனர். இவர்களுக்கு வேதனமாக மாதா மாதம் 18 ஆயிரம் ரூபா செலுத்தப்பட்ட போதும் அவர்கள் பெரும்பாலும் இராணுவ முகாம்களில் தொழிலாளர்களாகவே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எங்கள் மக்கள் எதிர்பார்க்கும் பொருளாதார நடவடிக்கை இத்தகையது அல்ல. எங்கள் மக்கள் தங்களின் விவசாயத்தை, மீன்பிடியை ஆரம்பிக்கவே விரும்புகின்றனர். எமது மக்கள் தமது பண்ணைகளை, கால்நடை விவசாயத்தை ஆரம்பிக்கவே விரும்புகின்றார்கள். தங்கள் தொழிற்சாலைகளைத் தொடங்கவே அவாக் கொண்டுள்ளனர்.

இந்தப் பிரதேசங்களில் என்ன நடைபெற்றிருக்கின்றது? தமிழர்களுக்கு ஏதோ செய்வது போல வெளித்தோற்றத்தை ஏற்படுத்துவதற்கு உங்களுக்குக் கட்டுப்பாடாக உள்ள சிலரை அழைத்து அவர்களுக்கு சம்பளத்தைக் கொடுக்கின்றீர்கள், சிலரை இராணுவத்தில் சேர்க்கின்றீர்கள், சிலரைப் பணிக்கு அமர்த்தி, பெரும்பாலும் உங்களின் சொந்தத் தேவைகளுக்கும் இராணுவத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் பயன்படுத்துகின்றீர்கள். இரணைமடுவில் 25 ஏக்கர் நிலத்தில் இராணுவம் மரக்கறி செய்கை பண்ணியுள்ளது. தேராவிலில் 150 ஏக்கர் நிலத்தில் [illegible] பயிர்ச்செய்கையை இராணுவம் முன்னெடுத்துள்ளது.

வெள்ளாங்குளத்தில் 600 ஏக்கரில் இராணுவம் முந்திரிகை செய்துள்ளது. முக்கோம்புவில் 100 ஏக்கர் நிலத்தில் தென்னைச் செய்கையை இராணுவம் மேற்கொண்டுள்ளது. சுன்னாவிலில் 600 ஏக்கரில் இராணுவம் முந்திரிகைச் செய்கையை முன்னெடுத்துள்ளது. இவை எல்லாம் வன்னியில் உள்ளன. கிராமக்குளங்களின் கீழான விசாலமான, பரந்த நெல் வயல்கள் இராணுவத்தினரால் செய்கை பண்ணப்படுகின்றன. குடிமக்கள் முன்னெடுக்க வேண்டிய, குடிமக்கள் ஈடுபட வேண்டிய இந்த வேலைகளில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. குடிமக்கள் இந்தப் பகுதிகளுக்குச் செல்லமுடியாது. சிவிலியன்கள் இந்தப் பகுதிகளில் வசிக்க முடியாது. ஏன் அங்கு அவர்கள் நடக்கக்கூட முடியாது. ஏனெனில் அந்தப் பிரதேசங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இடம்பெயர்ந்த ஒரு குடும்பம் வாழ்வதற்கும் தனது வேலையைச் செய்வதற்கும் ஆகக்கூடியது கால் பரப்புக் காணியே வழங்கப்படுகின்றது. அவர்களால் அந்தக் காணிக்குள் வாழமுடியுமா? இராணுவம் மிகப் பரந்த பிரதேசத்தை ஆக்கிரமித்திருக்கையில் இந்த சிறிய இடத்தில் அவனால் தப்பிப் பிழைத்து வாழ இயலுமா? அது போதுமானதா?

இரணைமடுக் குளத்துக்குப் பின்புறமாக, இரணைமடுக் குளத்துக்கும் இராணுவக் குடியிருப்புக்கும் இடையில் வெலிஓயாவின் டொலர், கென்ட் பண்ணைகளுக்குப் பின்புறமாக உள்ள பகுதிகளுடன் சுமார் 70 முதல் 80 கிலோ மீற்றர் தூரத்தை இணைக்கும் ஒரு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக எனக்கு நம்பகமாக அறிய வந்துள்ளது. சுமார் 70 முதல் 80 கிலோமீற்றார் நீளப் பிரதேசத்தில் உள்ள நிலங்கள் இந்த இணைப்புக்குப் பயன்படுத்தப் படவுள்ளன. அத்தகைய நடவடிக்கைக்குப் பின்னால் ஒரு துர்நோக்கம் நிச்சயம் உள்ளது. இதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டு, பேசாமல் அல்லது கேட்டுக்கொண்டும் சத்தமில்லாமல் இருக்கவேண்டிய ஒரு விடயமல்ல. குறிப்பாக வடக்கில் இராணுவத்தைப் பெருமளவில் பிரசன்னமாக வைத்திருப்பது சில அரசியல் இலக்குகளை அடைவதற்காகவே. அதற்காகவே அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையே எனது வலிதான வாதமாக நான் இங்கே முன் வைக்கிறேன்.

அப்படிச் செய்வதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. அது இராணுவத்தின் வேலையல்ல. இராணுவம் போரில் போரிட்டது. இப்போது போர் முடிந்துவிட்டது. இராணுவம் முகாம்களுக்குள் இருந்தபடி சட்ட ரீதியாக அது ஆற்ற வேண்டிய உரிய பணிகளையே முன்னெடுக்க வேண்டும். ஆனால், தமிழ் மக்களிடமிருந்து கவர்ந்து கொள்ளும் விதத்தில் அல்லது அவர்களுக்குத் தொந்தரவை ஏற்படுத்தும் வகையில் இராணுவத்தை நீங்கள் பயன்படுத்த முடியாது. இத்தகைய நடவடிக்கைகள் சில குறிப்பிட்ட - திட்டவட்டமான - அரசியல் இலக்குகளை அடைவதற்கு மட்டுமன்றி இப்போது குறிப்பாக வடக்கில் இனக் குடிப்பரம்பலில் பாரிய மாற்றத்தை உருவாக்குவதற்காகவும் முன்னெடுக்கப்படுகின்றது. இது ஏற்கனவே கிழக்கில் நடைபெற்றுள்ளதோடு அங்கு இப்போதும் இடம்பெறுகின்றது. (பலத்த குறுக்கீடுகளும் வாதப் பிரதிவாதங்களும்)

நான் சிங்களவர்கள் வசிக்கும் ஒரு மாவட்டத்தில் இருந்துதான் வந்தவன். எந்த ஒரு சிங்களப் பொதுமகனும் அவனுக்கு நான் தீங்கிழைத்தேன் என முறையிட மாட்டான். கௌரவ பஸில் ராஜபக்ஷ அவர்களே! உங்களுக்குத் தெரியும், திருகோணமலையிலிருந்து வந்துள்ள உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கு சென்றுள்ள உங்கள் அமைச்சர்களும் அங்குள்ள சிங்கள மக்களைச் சந்தித்துள்ளனர். அவர்கள் இதனைத் தெளிவாகக் கூறியிருப்பார்கள். அதுதான் எங்கள் நிலைப்பாடு. புலிகளினால் இனச்சுத்திகரிப்பு ஒருவேளை இருந்திருக்கலாம். முன்னர் இனவாத நடவடிக்கைகளின்போது தமிழர்கள் இனச்சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர். புலம்பெயர் சமூகம் எப்படி வந்தது? அதுதான், இப்போது முறையீடு செய்யப்படும் விடயம். 1950 களில், 1960 களில், 1970 களில் மேற்கொள்ளப்பட்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைத் திட்டங்களின் விளைவுதானே இந்தப் புலம்பெயர் சமூகம்? வன்முறைகளின் பெறுபேறாகத்தான் பொதுமக்கள் வெளியேறினார்கள். அப்படித்தான் புலம்பெயர் சமூகம் உருவானது.

ஆகவே, நாங்கள் இனச் சுத்திகரிப்பை ஆதரிக்கவில்லை. தாங்கள் எங்கு வசித்தார்களோ அங்கு தொடர்ந்து வசிப்பதற்கு ஒவ்வொருவரும் உரித்துடையவர் என்பதே எமது நிலைப்பாடு. அது அவர்களின் அடிப்படை உரிமை. சிங்களவர்களாயினும், தமிழர்களாயினும், முஸ்லிம்களாயினும், எந்த இனத்தவரானாலும் அது அவர்களின் அடிப்படை உரிமை.

ஒரு பிரதேசத்தின் இனக் குடிப்பரம்பல் முறைமையை மாற்றும் விதத்தில் அரசினால் திட்டமிடப்பட்ட முறையில் மக்கள் குடியமர்த்தப்படுவதை மட்டுமே நாம் எதிர்க்கிறோம். பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கை, டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கை போன்றவையும் இதனையே மறுத்துரைத்துள்ளன. அதற்காகத்தான் நாம் குரல் எழுப்புகின்றோம், கோருகின்றோம். அதற்கு மேல் எதனையும் நாம் எப்போதும் கோரவில்லை. இதைத் தவிர, எந்த இனத்தைச் சேர்ந்த எவரும் வடக்கு, கிழக்குக்கு வருவதையோ, குடியமர்வதையோ, தங்கள் நிறுவனங்களை முன்னெடுப்பதையோ நாம் ஆட்சேபிக்கவில்லை. இதுதான் எமது நிலைப்பாடு.

யுத்தம் முடிவடைந்து மூன்றரை வருடங்கள் கடந்து விட்டன. நான் நினைக்கிறேன் வேளை வந்துவிட்டது. தாம் கீழானவர்கள் என்று உணராமல், சுயகௌரவம் மற்றும் மதிப்புடன் வடக்கு,கிழக்குத் தமிழர்கள் தங்கள் பிரதேசத்தில் வாழமுடியும் என்பதை உறுதிப்படுத்துவது தொடர்பில் அரசு சரியான நடவடிக்கை எடுப்பதற்கு நேரம் வந்துவிட்டது. ஏனெனில் மீள் நல்லிணக்கத்துக்கு அது அடிப்படையானது. பல்வேறு இன சமூகங்களுக்கு இடையில் இந்நாட்டில் நல்லிணக்கம் மீள ஏற்பட வேண்டுமானால் - அத்தகைய மீள்நல்லிணக்கம் நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியம் எனில் - நாங்கள் எமது உரிமைகளை மீளப் பெற்றவர்களாக, சுயகௌரவம் மற்றும் மதிப்புடன் சமத்துவப் பிரஜைகளாக வாழும் நிலைமை உறுதிப்படுத்தப்பட வேண்டியதும் அதற்கு அத்தியாவசியமாகும்.

இந்தச் சபையில் இன்று நான் நடத்தப்படும் விதம் அத்தகைய நம்பிக்கையை ஊட்டுவதாக இல்லை. இதுதான் எமது கோரிக்கை. புதிதாக உருவாக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்கள் உட்பட இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான பிரதேசங்கள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும். அவை இராணுவப் பயன்பாட்டுக்கு உபயோகப்படுத்கக் கூடாது என்பதே எமது வலியுறுத்தல்.

இராணுவத்தின் வலிமையை அதிகரித்தல் என்ற பெயரில் அந்தக் குடும்பங்களை வடக்கு, கிழக்கில் குடியமர்த்துவதன் மூலம் இந்தப் பிரதேசங்களின் இனக் குடிப்பரம்பல் விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் திட்டமிட்ட நடவடிக்கை இது என்பதை நான் இந்தச் சபையில் உரிமையுடன்கூறிவைக்கவிரும்புகிறேன்.

வித்தியாசமான வகைப் பயிர்களை இத்தகைய பரந்த பிரதேசங்களில் இராணுவம் தொடர்ந்து செய்கை பண்ணுமானால், ஆயுதப் படைகள் அங்கிருந்து அகற்றப்பட்டாலும், அதன் பின்னரும் அங்கு அவர்களின் வீடு, வாசல்கள், அவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட்ட நிலங்கள் மீதான உரிமைகள் எல்லாம் அங்கு நீடிக்கும். அவர்களின் வாழ்வாதாரங்கள் அங்கு நீடிப்பதால் அவர்கள் வடக்கு, கிழக்கின் நிரந்தர குடியிருப்பாளர்களாகி விடுவர். அரசினால் மிகுந்த சுறுசுறுப்பு அவதானத்துடன் இப்போது முன்னெடுக்கப்படும். இந்த நடவடிக்கை திட்டம் உடன் முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என்பதே எமது விநயமான கோரிக்கையாகும். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்து சம்பியன்கள்

# ஆண்களில் ஆவரங்கால் மத்தி மகளிரில் காங்கேசன் ஐக்கியம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்காக யாழ் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் சம்பியனாகின.

இந்தச் சுற்றுத் தொடரில் இறுதியாட்டங்கள் பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆரவங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்தப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியின் கையே ஆரம்பத்திலிருந்து உயர்ந்து காணப்பட்டது. எனினும் பன்னாலை கணேசா விளையாட்டுக் கழகமும் விட்டுக்கொடுக்காமல் விளையாடியது.

**ஒவ்வொரு செற்றும் பரபரப்பாக அமைந்து பார்வையாளர்களுக்கு விருந்தாகின. எனினும் இறுதி செற்றை தன்வசமாக்கியதன் மூலம் கணேசா அணியின் வெற்றிக்கிண்ண கனவை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் தகர்த்தது.**

இதனால் ஒவ்வொரு செற்றும் பரபரப்பாக அமைந்து பார்வையாளர்களுக்கு விருந்தாகின. எனினும் இறுதி செற்றை தன்வசமாக்கியதன் மூலம் கணேசா அணியின் வெற்றிக்கிண்ணக் கனவை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் தகர்த்தது.

3:1 என்ற செற்கணக்கில் போட்டியில் வாகை சூடி ஜனாதிபதி தங்கக் கிண்ணத்தை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் தனதாக்கிக்கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக வீராங்கனைகளின் ஆக்ரோஷ ஆட்டத்துக்கு முன்னால் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக வீராங்கனைகளால் ஈடுகொடுக்க முடியவில்லை. எனவே பலத்த எதிர்ப்பின்றி இலகுவாகவே 3:0 என்ற செற்கணக்கில் வெற்றியீட்டிய காங்கேசன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் பெண்கள் பிரிவுக் கரப்பந்தில் சம்பியன் ஆனது. இதன் மூலம் தொடர்ந்து மூன்றாவது வருடமாக ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்துத் தொடரில் மாவட்ட ரீதியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கைப்பற்றி 'ஹட்ரிக்' வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதி சக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய் இடம் பெறும் நான்காவது கால் இறுதியாட்டத்தில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**பிற்பகல் 4 மணி**

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்.

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.18

நியூவோரியர்ஸ் விளையாட்டுக் கழகம் தனது முத்லாம் ஆண்டு நிறைவையொட்டி, அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை நியூவோரியர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**பிற்பகல் 4 மணி**

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் எதிர் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்.

* * *

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் க்ழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும், கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட் கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காகவும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை மின்னொளியில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**மாலை 6 மணி**

யுனிபைட் விளையாட்டுக் கழகம் எதிர் அல்.இக்பால் விளையாட்டுக் கழகம். (ந-23)

# யங்ஸ்ரார் – டைமன்ஸ் சிநேக பூர்வ உதைபந்தாட்டம் சமநிலையில் முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ 18

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும், வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்ட சிநேகபூர்வ உதைபந்தாட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மின்னொளியில் இந்தப் போட்டி இடம்பெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இரு அணிகளும் மிகுந்த உற்சாகத்தோடு மோதிக் கொண்டன. இரு அணி வீரர்களும் எப்படியாவது தமது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்ற துடிப்புடன் எதிர் அணியினுடைய கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். எனினும் அந்த முயற்சிகளில் பல பயனற்றுப் போயின.



ஒரு கட்டத்தில் ஆட்டம் இறுக்கமடைந்தபோது, எதிரணியின் வியூகங்களை உடைத்துக்கொண்டு முன்னேறிய வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக வீரர்கள் தமது அணிக்கான முதலாவது கோலினை அடித்தனர். இதன் மூலம் அந்த அணி முதல் பாதியாட்டத்தில் 1:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமான போது வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் முதற்பாதியாட்டத்தில் விட்ட தவறினை நிவர்த்தி செய்து ஆடினர்.

ஒரு புறம் வதிரி டைமன்ஸ் அணி வீரர்களின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் வகையில் தற்காப்பு ஆட்டத்தில் இறங்கியபடியே, இடையிடையே முன்னேறித் தாக்கும் முயற்சிகளிலும் அந்த அணி ஈடுபட்டது.

எனினும் எதிரணியின் பின்கள வீரர்கள் துடுப்பாட்டத்தினால் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினரால் அவ்வளவு இலகுவாக கோல்களைப் பெறமுடியவில்லை.

எனினும் ஆட்டத்தின் இறுதி நிமிடங்களில் திடீரென தமது வேகத்தை அதிகப்படுத்தினர் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக வீரர்கள்.

இந்த வேகத்தை விவேகத்தோடு பயன்படுத்தி தமது அணிக்கான முதலாவது கோலை அடித்து தமது பலத்தை நிரூபித்தனர் யங்ஸ்ரார் வீரர்கள்.

அதன் பின்னர் மேலதிகமாக ஒரு கோலை அடித்து போட்டியின் வெற்றியைச் சுவைக்க இரு அணி வீரர்களும் கடுமையாகப் போராடினர்.

ஆயினும் அந்த முயற்சிகள் எல்லாமே தோற்றுப் போக, 1:1 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் முடிவுற்றது. (ந-23)

# ஆளுநர் வெற்றிக்கிண்ண இறுதியாட்டமும் பரிசளிப்பும்

வலி. வடக்கு,டிசெ.18

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகளின் இறுதிப் போட்டிகளும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை புதன் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

நல்லூர் ஸ்தான அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் நடைபெறவுள்ள வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பிரதம செயலர் அலுவலக அணியை எதிர்த்து உட்கட்டுமான அமைச்சு அணி மோதவுள்ளது.

இதேவேளை ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பிரதம செயலர் அலுவலக அணியும் உள்ளூராட்சி திணைக்கள அணியும் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன.

இதனைத் தொடர்ந்து திணைக்களங்களுக்கெதிரிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கயிறிழுத்தல் போட்டியும் நடைபெறவுள்ளது. (ந-86)



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டியில் வடமாகாணத்தின் சார்பில் பங்குபற்றி வெற்றியீட்டியோருக்கான கௌரவிப்பின்போது, வெற்றி பெற்ற நவீல்ட் பாடசாலையைச் சேர்ந்த வீராங்கனைகளுடன் நவீல்ட் பாடசாலை அதிபர மகேந்திரன், பொறுப்பாசிரியர்கள் மற்றும் பயிற்றுநர். (23)

## சிறந்த வீரர் தெரிவு

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் அடுத்த வருடத்திலிருந்து யாழ். மாவட்டத்தில் சிறந்த கிரிக்கெட் வீரர் ஒருவரை வருடந்தோறும் போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்து கௌரவிக்கவுள்ளது.

எனவே யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட் போட்டிகளை நடத்தும் விளையாட்டுக் கழகங்கள் போட்டிகளின், பெறுபேற்றுத் தாளை உரிய முறையில், தெளிவான தரவுகளுடன், பதிவு செய்து யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் பொறுப்பாளர் விமலதாசனிடம் ஒப்படைக்குமாறு யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தினர் கேட்டுள்ளனர். (ந-23)

# திறமையான வீரர்களை கண்டறிய பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், டிசெ.18

ஹார்ல்டன் விளையாட்டு வலயமைப்பின் ஏற்பாட்டில் திறமையான இளம் வீரர்களையும், வீராங்கனைகளையும் இனம் கண்டு அவர்களை தேசிய அணியில் இணைக்கும் செயற்றிட்டம் நடைபெற்று வருகிறது. குறிப்பாக கிரிக்கெட், கரப்பந்து, றகர், உதைப்ந்து வலைப்பந்து, ஹொக்கி ஆகிய விளையாட்டுகளில் திறமை மிக்க வீரர்கள், வீராங்கனைகள் இனங்காணப்பட்டு பின்னர் உரிய பயிற்சிகளின் அடிப்படையில் அவர்களை தேசிய அணியில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் ஒன்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் எதிர் வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.


இந்தப் பயிற்சி முகாமில் பாடசாலை அணிகள், கழகங்கள் என்பவற்றைச் சேர்ந்த 15 வயதுக்கும் 22 வயதுக்கும் உட்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை காலமும் வலைப்பந்தாட்ட விளையாட்டில் ஈடுபடாத, ஆனால் ஆர்வமும், உயரமும் கொண்ட மாணவிகளும் இந்தப் பயிற்சி முகாமில் பங்கு பற்றலாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தப் பயிற்சி முகாமில் குறித்த ஒவ்வொரு விளையாட்டுகளுக்குமான தேசிய அணிகளின் பயிற்றுவிப்பாளர்கள், முன்னாள் வீரர்கள் ஆகியோர் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (ந-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





# இங்கிலாந்து வரலாற்று வெற்றி

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது. இதன் மூலம் இங்கிலாந்து அணி தொடரை 2-1 என்ற கணக்கில் வெற்றி கொண்டது. இந்திய மண்ணில் இங்கிலாந்து அணி 28 வருடங்களின் பின்னர் டெஸ்ட் தொடரை வெற்றி கொண்டு சாதனை படைத்தது.

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான நான்கு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாக்பூரில் இடம் பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பீற்றர்ஸன், ரூட் தலா 73 ஓட்டங்களையும், பிரியர் 57, சுவான் 56 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சாவ்லா 4, சர்மா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி 9 இலக்குகளை இழந்து 326 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. ஹோக்லி 103, டோனி 99, கம்பீர் 37 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் அண்டர்சன் 4, சுவான் 3 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தனர்.

4 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் ஆட்டநேர நிறை வில் 3 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் ரொரட் 66, பெல் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.


இந்த நிலையில் இறுதிநாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. ஆட்டத்தை தொடர்ந்த ரொட், பெல் இணை இந்திய அணியின் பந்து வீச்சுக்கு அசராமல் ஓட்டங்களைக் குவித்தது. இந்தியப் பந்து வீச்சாளர்களின் வியூகங்கள் தவிடு பொடியாகி ஓட்டங்கள் குவிக்கப்பட்டது.

ரொட் 8 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். 208 ஓட்டங்கள் நான்காவது இலக்குக்காக இருவரிடையேயும் பகிரப்பட்ட நிலையில் ரொட் 143 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்த அசத்திய பெல் 18 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். தேநீர் இடை வேளையின் பின்னரும் ஆட்டத்தை தொடர்ந்த இங்கிலாந்து அணி 5 ஆவது இலக்குக்கு 50 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட பின்னர் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

4 இலக்குகளை இழந்து 352 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. பெல் 116, ரூட் 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தனர்.

ஆட்டம் நிறைவடைவதற்கு சிறிது நேரமே இருந்தமையால் இரு அணித் தலைவர்களும் ஆட்டத்தை சமநிலையில் முடிப்பதற்கு சம்மதம் தெரிவித்தனர். ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் அண்டர்சனும், தொடர் நாயகனாக இங்கிலாந்து அணித் தலைவர் குக்கும் தெரிவாகினர். (5)

# ஆட்டம் இலங்கை வசமாகுமா?




393 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணி நேற்றைய நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நான்காம் நாள் முடிவில் இலங்கை அணி போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இலக்கு இழப்பின்றி 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி சகல இலக்குகளையும் இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது இலக்குக்காக அந்த அணி 132 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும், அதைத் தொடர்ந்து இலக்குகள் வீழ்த்தப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் வோணர் 68 ஓட்டங்களையும், எட் கோவன் 56 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர். ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் 57 ஓட்டங்களைப் பெற்ற போதிலும் காயம் காரணமாக மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 96 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், சானக வெலகெதர 89 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஷமின்ட எரங்க ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இதன்படி 393 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணி நேற்றைய நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன்படி இந்த ஆட்டத்தில் வெற்றிபெற 328 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளதோடு, இன்றைய தினம் முழுவதும் துடுப்பெடுத்தாடினால் இந்த ஆட்டத்தை சமநிலையில் முடித்துக்கொள்ளலாம்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக திமுத் கருணாரத்ன 30 ஓட்டங்களைப் பெற்றார். முதல் இன்னிங்ஸில் சதம் விளாசிய டில்ஷான் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். குமார் சங்ககார 18 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்தன 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது துடுப்பெடுத்தாடி வருகின்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க், ஷேன் வொற்சன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

ஹோபார்ட்டில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 450 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியிருந்ததோடு, இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 336 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## மலிங்க டெஸ்ட்டில் பங்குபற்றும் வாய்ப்பில்லை

இலங்கை- ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான டெஸ்ட் தொடரில் லசித் மலிங்க பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று இலங்கை அணியின் பயிற்சியாளர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் தற்போது நடைபெற்று வரும் முதலாவது போட்டியில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்களுக்குப் போதிய நெருக்கடியை வழங்கத் தவறியிருந்தனர்.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் போதிய வேகத்துடன் பந்துவீசியிருக்கவில்லை என்று கருதப்பட்டது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவில் பிக்பாஷ் லீக் தொடரில் பங்குபற்றிவரும் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவை அடுத்த 2 போட்டிகளில் பங்குபற்றுமாறு இலங்கைக் கிரிக்கெட் அணி நிர்வாகம் கேட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணிக்காகப் போட்டிகளில் பங்குபற்றிவரும் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் 7 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், ஹோபார்ட் அணிக்கெதிரான போட்டியில் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் லசித் மலிங்க கைப்பற்றியிருந்தார்.

இது குறித்து பயிற்சியாளர் கிரஹம் போர்ட் கூறுகையில், ''பிக்பாஷ் லீக் தொடரில் மலிங்கா சிறப்பாக விளையாடிய போதும் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு. மலிங்கவின் முழங்கால் உபாதை காரணமாக அவரால் அதிகளவு ஓவர்களை வீச முடியாது. டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றினால் அவரது கிரிக்கெட் எதிர்காலம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் இலங்கைக்கு மலிங்க முக்கியமான ஒருவராகக் காணப்படுகிறார்'' எனத் தெரிவித்த அவர், 26ம் திகதி ஆரம்பிக்கவுள்ள 2ஆவது டெஸ்ட் போட்டியில் அவரைப் பங்குபற்ற வைக்க முயற்சிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளார்க் அவுட்?

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் பங்குபற்றுவது சந்தேகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஹோபார்ட்டில் இடம்பெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க், காலில் உபாதைக்குள்ளாகியதையடுத்தே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்தொடைப் பகுதியில் ஏற்பட்ட உபாதையையடுத்து மைக்கல் கிளார்க் மைதானத்தை விட்டு வெளியேறியிருந்ததோடு, அதன் பின்னர் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியிருக்கவில்லை. ஆஸ்திரேலிய அணி களத்தடுப்பிலீடுபடும் போது அவர் களத்தடுப்பிலீடுபட்டாலும், உபாதையால் சிறிது தடுமாறியிருந்தார்.

இந்நிலையில் 26ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பொக்சிங் டே டெஸ்ட் போட்டியில் மைக்கல் கிளார்க் அநேகமாக பங்குபற்றமாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தகவலை ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் உறுதிப்படுத்தினார்.

மைக்கல் கிளார்க் அடுத்த டெஸ்ட் போட்டியில் பங்குபற்ற முடியாதுவிடின் பிரட் ஹடின், ரொப் குவைனி, உஸ்மான் கவாஜா அல்லது அலெக்ஸ் டூலன் ஆகியோரில் ஒருவர் பங்குபெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஙு)

## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரீபாஸ்கரி குணராசா



ஏழாலை மேற்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி, சாவகச்சேரியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீபாஸ்கரி குணராசா நேற்று (17.12.2012) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை குணராசாவின் (குணம் கடை) அன்பு மனைவியும், அகல்யனின் (2013 A/L - கலைப்பிரிவு சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்பு தாயும், காலஞ்சென்ற பாலசிங்கம் (ஏழாலை மேற்கு) மற்றும் அம்பிகாவதி தம்பதியரின் அன்பு மகளும், ஸ்ரீபாஸ்கரன், நந்தகோபாலன், நந்தரூபி, அனுஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயதாரகை, யசோதா, தேவானந்தன், சுபாஸ்கரன் (சுவிஸ்), ஆகியோரின் மைத்துனியும், கிருபானந், நிசானந்தி, சன்யா (சுவிஸ்) ஆகியோரின் பெரியதாயும், நிதர்சன், தர்மிலன், பானுசன், சர்வின், சாருஜா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (18.12.2012) செவ்வாய்க் கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.குணராசா (குணம் கணவர்)
கு.அகல்யan (மகன்)

1 ஆம் மைல்,
கச்சாய் வீதி, சாவகச்சேரி,
0771140891
(சி/2649)(3.14)


## தேவை

**Coreal Draw, Photoshop**
நன்கு தெரிந்த ஆண்/பெண் தேவை.

தொ.பே : 078 3260402, 021 5100 467
140/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(C/2643)(6.11)

## வேலைவாய்ப்பு

* புத்தகக் கடையில் பணியாற்றக் கூடியவர்கள்
* கணினி தட்டச்சு செய்வதில் திறமையுள்ளவர்கள்
* கணக்கு விவரங்கள் பதியக் கூடியவர்
* நற்சான்று, சுயவிவரக்கோவையுடன் சமுகமளிக்கவும்.

இல. 70, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
0772174751
(26912)(3.14)

## நீங்களும் மின்இணைப்பாளராகலாம்

கட்டணம் : ரு.11500
Electrical wiring
முதல் 10பேருக்கு விசேட விலைக் கழிவு
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்வருமானம் தரக்கூடிய 100%தொழில் உத்தரவாதம் வழங்கப்படும்
அடிப்படை முதல் தெளிவான விளக்கங்களுடன் பாடநெறி கற்பிக்கப்படுவதுடன் ஆய்வுகூடப்பயிற்சியையும் (Practical)உள்ளடக்கியது
பாடநெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். முழுநேரம்/பகுதிநேர வகுப்புக்கள் உடனடியாக ஆரம்பம்
IISEEES NALLUR CAMPUS
762,பருத்தித்துறை வீதி, நல்லூர்.
0212224728,0777444225


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 04 ✱ 09 ✱ 1944



உதிர்வு 30 ✱ 12 ✱ 2011

### அமரர் தம்பிமுத்து மகாராசா.

(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை வங்கி)
திதி: சஷ்டி

ஊராரும் உற்றாரும் உவந்திடவே நின் செயலை
பாரினிலே நீர் மிளிர்ந்து பாங்குடனே விளங்கி வர
வேரோடி விழுது விட்ட பெருவாழ்வு கண்டிங்கு
யாரிடமும் விடை கூறாதோடியதும் ஏன் தானோ?
ஆண்டொன்று சென்றாலும் ஆழ்ந்த துயர் நீங்கவில்லை
மீண்டிங்கு வருகைதரின் நீங்குமே எம் துயரம்
பண்பாக பாரினிலே தடம்பதித்த எம் தலைவா ?
கண் இமைபோல் எமைக் காத்தீர் கலங்கரை விளக்காக
சேவையால் உயர்ந்தீர் செய்நன்றி கொல்லாமல்
வாய்மையால் வாழும் வளமான வாழ்வு கண்டீர்
ஆண்டு பல அகன்றாலும் ஆறாதே எம் துயரம்
வேண்டுகிறோம் நின் சாந்தி என்னுமே தேவனிடம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அளவெட்டி தெற்கு (26826)(3.14) குடும்பத்தினர்.


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா

skill migration
இலகுவில் விசா பெற ஆலோசனை
திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175,பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
0212219016
(26981)

## மலேசியா ,சிங்கப்பூர்

Student visa
மாதாந்த வேதனத்துடன்
திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175,பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
0212219016
(26981)

## பிரான்ஸ், போலந்து, லிதுவேனியா

இலகுவில் செல்ல சட்டரீதியான ஆலோசனை.
திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175,பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
0212219016

## உடன் தேவை

உணவகத்தில் வேலை செய்வதற்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.

* சிட்டை எழுதுநர் (இருபாலாரும்)
* காசாளர் (இருபாலாரும்)
* மேசை கவனிப்பாளர் (இருபாலாரும்)
* சுத்திகரிப்பாளர்(இருபாலாரும்)
* சமையலாளி(ஆண்கள் மட்டும்)
* களஞ்சியப் பொறுப்பாளர்(ஆண்கள் மட்டும்)

கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்
267A, C.பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக)
T.P No : 0772444172
(C/2640)(14)

Merry Christmas & Happy New Year

## Quick Learning Course

**Spoken English With Grammar**

உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.

December, 2012 G.C.E. (O/L) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்

**Diploma In English** (2 Months)


ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் வகுப்புகள் நடைபெறும்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935/0777730074
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vaiavarpulliam Kulam Vavuniya. Tel: 024 3245287

அனைத்து பிரிவுகளும் 2013, January 7ம் 12ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே தங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கலாம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் ஆசிரியர் பீடத்தில் பணிபுரியும் கு. செல்வகுமார் அவர்களின் அன்புத் தந்தை

### இளையதம்பி குமாரசாமி

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளரும், பணியாளர்களும்,
உதயன் பத்திரிகை நிறுவனம்
(சி/2653)(3.14)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org